விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 19 வெள்ளிக்கிழமை (02.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 074

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இலங்கைக்கு எதிரான தீர்மானம்

# உறுப்பு நாடுகளிடம் ஆதரவு கோரி இரா. சம்பந்தன் அவசர கடிதம்!



**ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19-வது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கும்படி ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 47 உறுப்பு நாடுகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இதுதொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கடந்த மாதம் 27ஆம் திகதியிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மக்களால் ஜனநாயக முறைப்படி நாடாளுமன்ற பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற முறையில் தாம் இக் கடிதத்தை எழுதுவதாகவும் சம்பந்தன் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் வருமாறு,

இலங்கையில் இடம்பெற்ற போர் 2009-ம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்த பின்னர், ஐக்கிய நாடுகள் சபை (24ஆம் பக்கம் பார்க்க)

## பொறுப்புக்கூறுதல் அவசியம்

## ஐரோ. ஒன்றியம் வலியுறுத்தல்

இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பொறுப்புக் கூறுதல் மிகவும் முக்கியமான பங்கை வகிக்கிறது என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19வது கூட்டத் தொடரில் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் உரையாற்றிய டென்மார்க் வெளிவிவகார அமைச்சர் விலி செவ்ன்டல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழு இலங்கைக்கு ஊக்கமளிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## மார்ச் 5இல் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கையின் ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தில் போர்க் குற்றங்கள் நிகழ்த்திய போர்க் குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவும் இலங்கை அரசை, இந்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டும் என வலியுறுத்தி எதிர்வரும் மார்ச் 5 ஆம் திகதி சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஸ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இறுதிக் கட்டப் போரின்போது (24ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4 வீடியோ குறித்து அரசு கவலைப்படவில்லை

### அமைச்சர் யாப்பா தெரிவிப்பு



பிரித்தானியாவின் சனல் 4 தொலைக் காட்சி நிறுவனம் இலங்கைக்கு எதிராக வெளியிடவுள்ள புதிய வீடியோ தொடர்பில் இலங்கை அரசு அலட்டிக் கொள்ளவில்லை என அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன நேற்று தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்கு அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் பல போலியான வீடியோக்களை ஒளிபரப்பியது.

எனினும் (24ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். போக்குவரத்துப் பொலிஸார் தண்டம் அறவிடுவதில் அதி தீவிரம்

## பொதுமக்கள் கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் இனப்பாகுபாட்டுடன் நடந்து கொள்வதாகவும், தமிழ் மக்களிடம் தண்டம் விதித்து நிதி சேகரிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பதாகவும் பொதுமக்கள் பலரும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நேற்றைய தினம் கன்னாதிட்டி சந்திக்கும் வண்ணை சிவன் கோவில் சந்திக்கும் இடைப்பட்ட கன்னாதிட்டி வீதிப் பகுதியில் தரித்துநின்ற யாழ்ப்பாணப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் காரணம் எதனையும் தெரிவிக்காமல் ஒரு வழிப்பாதை எனத் தண்டம் விதிப்பதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

குறித்த வீதி ஒரு வழிப் பாதை என்பதை சரியான முறையில் தெரியப்படுத்தாமல் இவ்வாறு தண்டம் விதிப்பதைப் பார்க்கும் போது, தமிழ் மக்களிடம் இருந்து குறிப்பிட்ட தொகையை அறவிடும் நோக்கில் பொலிஸார் செயற்படுவது போன்ற நிலைமை தெரிவதாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மேலும் தெரிவித்தனர்.

சிங்களப் பயணிகள் யாழ்ப்பாணத்துக்கு வரும்போது அவர்களின் வாகனங்கள் வீதிப் போக்குவரத்து நடைமுறைகளை பின்பற்றாமல் செயற்படும்போதெல்லாம் அதனைக் கண்டு கொள்ளாத (24ஆம் பக்கம் பார்க்க)

## பெருமளவு ஆயுதங்கள் முல்லையில் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இரணைப் பாலத்திற்கு அருகாமையில் இருந்து பெருமளவிலான வெடிபொருட்களை, வவுனியாவிலிருந்து சென்ற விசேட அதிரடிப் படையினர் மீட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தடுப்பு முகாமில் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொடுத்த இரகசியத் தகவலின்படி, வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்பு இரணைப் பாலத்திற்கு சென்ற விசேட அதிரடிப் படையினரின் தேடுதலிலே விடுதலைப் புலிகளால் மறைத்து (24ஆம் பக்கம் பார்க்க)

வாழும் கலை

மனம், மனஅழுத்தம், ஜோதிடம்

சொற்பொழிவும், கேள்வி பதிலும்.

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின் பிரதான சீடர்

சுவாமி சத்யோஜாதா அவர்களால்

இன்று (02.03.2012) மாலை 5.00 மணி முதல் 06.30 மணிவரை.

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

அனுமதி இலவசம்

தொலைபேசி : 0777740593, 0770474757



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தங்க நகை அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் அடியார் செல்லமுத்து வீதியில் நேற்று பட்டப்பகலில் திருட்டுச்சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு கடைச்குச் சென்ற பெண் ஒருவரை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற இருவர் அவர் அணிந்திருந்த தாலிக்கொடி மற்றும் தங்கச் சங்கிலி என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

சம்பவத்தையடுத்து பிரஸ்தாப பெண் கூக்குரல் இட்டதையடுத்து அப்பகுதியில் கூடிய மக்கள் திருடர்களை துரத்திச் சென்ற போதும் அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றமையை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து அப்பகுதியில் சில மணி நேரம் பதற்றமான சூழ்நிலை காணப்பட்டது.

இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-4)

# வீதி மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெறவுள்ள பெரும் துடுப்பாட்டத்தினை முன்னிட்டு மார்ச் மாதம் 8,9 மற்றும் 10 ஆம் திகதிகளில் இராஜேந்திரப் பிரகாத் வீதி மூடப்பட்டிருக்கும் என யாழ்.மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

குறித்த வீதியால் பயணிப்போர் மாற்று வழியை பயன்படுத்துமாறும் அவர் அறிவித்துள்ளார். (எ)

# மாணவரிடையே மோதல் மூவர் காயம்

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த இரு ம்மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக மூவர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த மாணவர்கள் களுபோவில வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நுகேகொட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தேசபந்து தென்னக்கோன் கூறினார். எனினும் இம் மோதல் தொடர்பாக மாணவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் அவர் கூறினார். (எ)

# பாம்புக்கடிக்கு இலக்கான குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பாம்புக்கடிக்கு இழக்காகி நேற்று முன்தினம் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கச்சாய் வீதி சாவகச் சேரியில் பாம் புக்கடிக்கு இலக்கானவரே உயிரிழந்தவராவார்.

அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின்தாயாரான மகிந்தன் தீபா என்பவரே உயிரிழந்த வராவார்.

வீட்டின் வெளிப்புறத்தே சென்றபோது பாம்பினை காலால் மிதித்தமையால் பாதத்தில் பாம்பு தீண்டியுள்ளது.

உடனடியாகவே யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை 10 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார்.

இரத்தப்புடையன் எனும் பாம்பு கடித்தமையே விசம்வேகமாகபரவிகுறித்தபெண்உயிரிழந்ததாகமருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.. (எ-4)


1ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஆண்டித்தம்பி தர்மலிங்கம்

பிறப்பு: 13.08.1956

இறப்பு: 14.03.2011



அன்பான அப்பாவே!
விதி வரைந்த பாதையிலே எங்களை எல்லாம் விட்டு பிரிந்து ஓராண்டு சென்றாலும் ஓயவில்லை விழிநீர் சொரிந்து விம்முகின்றோம். உங்கள் புன்சிரிப்பும் பாசம் நிறைந்த உங்கள் நினைவுகளும் என்றும் எம்முள்ளே உறங்கிக் கொண்டிருக்கும்.

மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

புத்தூர் கிழக்கு, புத்தூர். (7602)


# 13 வர்த்தகர்களுக்கு அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

பொருட்களை குறித்த விலையிலும் பார்க்க அதிகரித்து விற்றமை, காலாவதியான குளிர் பானங்கள் மற்றும் உணவுப் பொருட்களை விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 13 வர்த்தகர்கள் யாழ். நீதிமன்றில் 61 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்தினார்.

குளிர் பானங்கள், பால் பைக்கற்றுக்கள் மற்றும் பனடோல் என்பவற்றினை 5 ரூபாய் முதல் கொண்டு 2 ரூபாய் வரை அதிகரித்து விற்றமை, காலாவதியான.குளிர்பானங்கள், கேக் என்பவற்றினை விற்றமை போன்ற குற்றச்சாட்டுக்களில் 13 வர்த்தகர்கள் யாழ். பாவனையாளர் அதிகார சபையினரால் பிடிக்கப்பட்டு யாழ்.நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் அவர்களை அபராதத்தொகை செலுத்துமாறு யாழ்.நீதவான் மா.கணேச ராஜா உத்தரவிட்டார். இவர்கள் அபராத தொகையாக 61 ஆயிரம் ரூபாய் செலுத்தினர். (எ-4)

# பனை ஏறியவர் சறுக்கி விழுந்து காயம்

(யாழ்ப்பாணம்)

20 அடி பனைமரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ் விபத்துச் சம்பவம் புத்தூர் கிழக்கில் நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான செல்வன் சுகந்தன் வயது 39 என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த அவர் அச்சுவேலி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிகச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (எ-4)


வாழும் கலை

முதன் முறையாக அராலிக்கு வருகை தரும்

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின்



பிரதான சீடரான

சுவாமி சத்யோஜாதா [சுவாமிஜி] அவர்களை

அராலி வாழும் கலை நிலையம்

சார்ந்த அனைவரும் வருக வருக என வரவேற்கின்றோம்

சுவாமிஜியின்

ஆன்மீக உரை மற்றும் சத்சங்கம்

நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பித்து மேலும் சுவாமிஜியின் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

காலம் : 03.03.2012 - சனிக்கிழமை

நேரம் : காலை 11.00 - 12.30 வரை

இடம் : வாழும் கலை நிலையம், செட்டியார் மடம், அராலி வடக்கு.



அனுமதி இலவசம்

தொடர்புகளுக்கு:-
0777268279
0772794093


# தேசிய விளையாட்டு விழாவை முன்னிட்டு மாகாண மட்ட மரதன் ஓட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கால்ட்டன் மரதன் ஓட்டப்போட்டி-2012 எதிர்வரும் 10ஆம் திகதி துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தேசிய விளையாட்டுவிழாவை முன்னிட்டு மாகாண ரீதியில் நடத்தப்படும் இந்த கால்ட்டன் மரதன் ஓட்டப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் யாழ்.மாவட்ட செயலக மெய்வன்மை பயிற்றுநர் எம்.ஆர்.மோகனதாஸுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரதன் ஓட்டப் போட்டியில் 17 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்குபற்ற முடியும். ஆண், பெண் இருபாலாரும் இப்போட்டியில் பங்கு பற்றலாம். 30 கிலோமீற்றர் இந்த மரதன் ஓட்டபோட்டியின் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முதலிடத்தை பெறுபவருக்கு ரூபாய் ஒரு இலட்சமும் இரண்டாம் இடத்தை பெறுபவருக்கு ரூபாய் 50 ஆயிரமும், மூன்றாம் இடத்தை பெறுபவருக்கு 25 ஆயிரம் ரூபாயும் நான்காமிடத்தை பெறுபவருக்கு 20 ஆயிரம் ரூபாயும் 5 ஆம் இடத்தை பெறுபவருக்கு15ஆயிரம்ரூபாயும்6ஆம்,7ஆம்,8ஆம், 9ஆம், 10ஆம் இடத்தைப் பெறுபவர்களுக்கு முறையே 12 ஆயிரத்து 500 ரூபாயும் 10 ஆயிரம் ரூபாயும், 7 ஆயிரத்து 500 ரூபாயும், 5 ஆயிரம் ரூபாயும், 2 ஆயிரத்து 500 ரூபாயும் வழங்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-6)


வீடு தேவை

5-ம் ஆண்டிற்குட்பட்ட சிறுவர்களுக்கான தனியார் கல்வி நிலையம் நடத்த கூடிய வீடு வாட கைக்கு சித்தன்கேணி, வடலிய டைப்பு, பண்டத்தரிப்பு, சங் கானை, சுழிபுரம், ஆனைக் கோட்டை ஆகிய பிரதேசங்களுக்குள் விரும்பப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:-
0757622814 (7599)

EASY ENGLISH

ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்

YAALH ENGLISH ACADEMY

யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:

புதிய உயர் கல்லூரி (7379)

விபரங்களுக்கு :0773212711

ஹரி ஸர் வோத்தம
வாயு ஜீவோத்தம

ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள்
417வது ஜயந்தி ஆராதனை

காலம் : 02.03.2012 (இன்று) மாலை 5 மணி

இடம் : 363, கோவில் வீதி, நல்லூர்.
ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ம்ருத்திக்கா பிருந்தாவனம் - நல்லூர்

குரு ராஜரின் ஆசீர்வாதங்கள்

தர்மகர்த்தா
சிவசிதம்பரம் சசிதேவி

(7601)

கண்ணீர் அஞ்சலி

திருமதி கந்தசாமி விசாலாட்சி

எமது நிறுவனத்தின் ஊழியர் திரு.க. சிறிதரன் அவர்களின் பாசமிகு தாயார் திருமதி-கந்தசாமி விசாலாட்சி அவர்கள் நேற்று 01.03.2012 வியாழக்கிழமை சிவபதமடைந்தமையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், ஆளுநர் சபை, உத்தியோகத்தர்கள்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (TRRO)

(C-5947)

# இன்று ஒரு தகவல்

## நிம்மதி என்ன விலை

வாழ்வில் எல்லோருமே நிம்மதியை விரும்புகிறார்கள். நாடுகிறார்கள். ஆனால் அதுவோ எல்லோருக்கும் கிடைக்காமல் நழுவிப் போகிறது.

அப்படியானால் அதை எப்படி பெறமுடியும்? அதைத்தான் விளக்குகிறது இக்கதை.

ஒரு பெரிய அரசர் இருந்தார். அவருக்கு அனைத்து வசதியும் இருந்தது. இருந்தாலும் வாழ்க்கையில் நிம்மதி இல்லையே என்ற கவலை அவருக்கு நீண்ட நாட்களாக இருந்தது.

அரண்மனையில் தினமும் கலை நிகழ்ச்சிகளும் நாட்டியங்களும் நடந்து கொண்டுதான் இருந்தன. இருந்தாலும் அவருக்கு நிம்மதி இல்லை.

நிம்மதியைத் தேட ஆரம்பித்தார். அதை அடைவதற்குரிய முயற்சிகளில் தீவிரமாக இறங்கினார்.

நாட்டிலுள்ள தத்துவ மேதைகளையெல்லாம் அழைத்தார். அவர்கள் நிம்மதிக்குரிய வழி என்று பலவிதமான விளக்கங்களை கூறினார்கள். ஆனால் அவர்கள் சொன்ன எந்த பதிலும் அவருக்கு திருப்தி தரவில்லை. எதிலும் திருப்தி பெறாத அரசர் நிம்மதி இழந்து நிதானமில்லாமல் இருந்தார்.

ஒருநாள் அவர் மாளிகையில் உப்பரிகையில் உலாவிக் கொண்டிருந்தார். அச்சமயம் தெருவில் ஒரு பிச்சைக்காரன் மிகவும் உல்லாசமாகப் பாட்டுப்பாடிய படியே சென்று கொண்டிருந்தான். அவன் குரலில் ஒரு சந்தோஷம், இனிமை பூரிப்பு, நடையிலே ஒரு மிடுக்கு காணப்பட்டது. அவனிடம் சிறிதளவு கூட கவலையிருப்பது தெரியவில்லை.

அரசருக்கு அந்தப்பிச்சைக் காரனே நிம்மதியின் அவதாரமாகத் தோன்றியது. உடனே அவர் காவலாளிகளை அழைத்து ''உடனே ஓடிப்போய் அந்தப்பிச்சைக்காரனை இங்கே அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டார்.

காவலாளிகள் உடனே ஓடிப்போய் பிச்சைக்காரனிடம் அரசனின் உத்தரவைத் தெரிவித்தார்கள்.

ஆனால் அவனோ அரச கட்டளை என்று தெரிந்தும் வர மறுத்து விட்டான்.

'' நான் அரண்மனைக்குள் அடியெடுத்து வைக்கமாட்டேன்'' என்றான். காவலாளிகள் அரசரிடம் வந்து விடயத்தைக் கூறினார்கள். அதைக் கேட்ட அரசர், "இப்படியும் ஒரு ஆள் இருப்பானா?" என்று ஆச்சரியப்பட்டார்.

" சரி! அவன் என்னதான் சொல்லுகிறான்?"என்று விசாரித்தார்.

காவலாளிகள் மீண்டும் தெருவில் இறங்கி அரசர் கூறியதை பிச்சைக்காரனிடம் கூறினார்கள்.

அதற்கு அவன்'' என்னை அரசர் பார்க்கவிரும்பினால் அவரே இங்கே வரட்டும்'' என்று சொல்லிவிட்டான்.

காவலாளிகள் அரசரிடம் வந்து பிச்சைக்காரன் சொன்னதைத் தெரிவித்தார்கள். அரசருக்கு பிச்சைக்காரன் மீது கோபம் வரவில்லை.

மாறாக ''இவ்வளவு சுதந்திர உணர்வோடு இருப்பவன் ஒரு சாதாரண மனிதனாக இருக்கமுடியாது'' என்று நினைத்தார்.

உடனே அவர் கிடுகிடுவென இறங்கி பிச்சைக்காரனிடம் சென்றார்.

"நீ சிறிது கூட கவலைப்படாமல் சந்தோஷமாகப் பாடிக்கொண்டு போகிறாயே! உன்னால் எப்படி இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?'' என்று கேட்டார்.

ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? என்று பிச்சைக்காரன் வினாவினான்.

'' அதற்கில்லை... எனக்கு அரண்மனையில் எல்லா சுகபோகங்களும் இருக்கிறது. இருந்தாலும் என் மனதில் நிம்மதி இல்லை. இது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. இந்தத் தேசத்திலுள்ள அறிஞர்களை எல்லாம் கேட்டுவிட்டேன். சரியான பதில் ஏதும் கிடைக்கவில்லை.

அதனால் தான் உன்னைக் கேட்டால் தெரியும் என்று நினைத்து சந்திக்க விரும்பினேன். ஆனால் நீ வர மறுத்துவிட்டாயே'' என்றார் அரசர்.

பிச்சைக்காரன் கடகட வென்று சிரிக்க ஆரம்பித்து விட்டான். சிரித்துக் கொண்டே அவன் சொன்னான், மகிழ்ச்சிக்கும் உங்களுக்கும் தடையாக இருப்பது இந்த மாளிகைதான். இதை விட்டெறிந்து விட்டு வெளியே வந்தால் நிம்மதி உங்களைத் தேடிக் கொண்டு வந்துவிடும். என்றான்.

''நான் அரசன். எனக்கென்று சில கடமைகள் உண்டு. அதையெல்லாம் விட்டுவிட்டு நான் எப்படி வெளியே வரமுடியும்?'' என்று பதிலளித்தார் அரசர்.

"அரசபோகம், நிம்மதி ஆகிய இவை இரண்டுமே ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் கிடைக்கவேண்டும் என்பது முடியாத காரியம். உங்கள் சுகபோகத்திற்கு விலையாகத்தான் உங்கள் நிம்மதியை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்.

ஆகையால் என்னைப்பாருங்கள் என்னிடம் எதுவும் இல்லை. அதனால் எதுவும் என்னை விட்டுப் போய்விடுமோ என்ற பயமும் எனக்கில்லை. மிகவும் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் இருக்கிறேன் என்றான்.

இதைக் கேட்ட அரசர் மகிழ்ச்சி அடைந்தான். தன்னிடம் இருந்த மேலங்கியை எடுத்து அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான்.

அவன் சிரித்துக் கொண்டே வாங்கமாட்டேன் என்று சொல்லி விட்டான். இதை நீங்கள் கொடுப்பதால் எனக்கு எந்தப் பயனும் இல்லை. அதே நேரத்தில் இதை நான் வாங்கிக்கொண்டால் அடுத்த விநாடியிலிருந்து அதை எப்படிப் பாதுகாப்பது என்ற கவலை எனக்கு வந்து விடும். அதன் பின் தூக்கம் வராது.

இருந்த நிம்மதி போய்விடும் என்று கூறிவிட்டு அந்தப் பிச்சைக்காரன் முன்பு போல் பாடிக்கொண்டு சென்று விட்டான்.

அரசருக்கு அப்போது தான் நிம்மதியின் இரகசியம் புரிந்தது.

மகிழ்ச்சிக்கும் நமக்கும் குறுக்கே நிற்பவை நமது ஆசைகளும் வசதிகளும்தான். எல்லாவற்றையும் வாழ்க்கையில் துறந்தவர்களுக்கு, எதையும் எதிர்பார்க்காமல் வாழ்பவர்களுக்கு எவ்விதத் துன்பமும் கவலையும் இல்லை. நிம்மதி தானாகவே அவர்களைத் தேடி வரும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரச ஊழியர்களின் சேவை போதுமானதாக இல்லை

## வடமாகாண பிரதம செயலர் தெரிவிப்பு

வடமாகாண சபையில் சேவையில் ஈடுபடும் அலுவலகங்களுக்காக செலவிடப்படும் பணத்துடன் ஒப்பிடும் போது அவர்களால் செய்யப்படும் சேவைகள் குறைவாகவே உள்ளது என வடமாகாண பிரதம செயலர் விஜயலட்சுமி தெரிவித்தார்.

வடமாகாண அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

வடமாகாண சபையில் 25 ஆயிரம் அலுவலர்கள் பணிபுரிகிறார்கள். இவர்களுக்காக 10.3 மில்லியன் செலவிடப்படுகின்ற போதும் இவர்களினால் செய்யப்படும் வேலை குறைவாகவே உள்ளது.

இதனால் பணம் அதிகம் வழங்கப்படுகின்ற போதும் பயன் குறைவாகவே காணப்படுகின்றது.

இது ஒரு மாகாணத்தின் அபிவிருத்திக்கு உகந்ததல்ல. ஏனைய மாகாணங்களுக் கும் நாம் இணையாக இருக்கவேண்டுமானால் எமது நிர்வாக சேவையின் சரியான கண்காணிப்பு, மதிப்பீடு, முகாமைத்துவம் எல்லா வற்றையும் விட கடின உழைப்பும் அவசியம்.

மாவட்ட செயலகத்திற்கும் பிரதேச செயலகங்களுக்கும் இடையில் செயற்படும் அலுவலர்கள் சரியான முறையில் செயற்படல் வேண்டும்.

எம்மால்ஒன்றும்செய்துவிட முடியாது என பெரியவர்கள்செய்வார்கள்என்ற மனப்பான்மையை விடுத்து உரியவர்களே அந்த பொறுப் புக்களை செய்தல் வேண்டும்.

அரசின் அச்சாணியாக நிர் வாகத்துறை விளங்குகின்றது. ஆகவே பொதுச்சேவையிலுள்ளநாம்சரியாக அர்ப்பணிப்புனும் நேர்மையுடனும் இயங்குதல் அவசியம். (அ-4)

## கோட்டக்கல்வி அலுவலர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

தெல்லிப் பழை கோட்டக் கல்வி அலுவலகத்தின் கோட்டக் கல்வி அலுவலர் பதவியை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இப்பதவிகளுக்கு வலிகாமம் வலயத்திற்குட்பட்ட 3 வருட காலமேனும் ஆகக்குறைந்தது சேவையாற்றக்கூடிய இலங்கை அதிபர் சேவை 1 அல்லது இலங்கை அதிபர் சேவை 2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதிபர் சேவை 1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மாத்திரமே அதிபர் சேவை 2-1ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து தெரிவு மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார் (அ-7)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 55 |
| பச்சைமிளகாய் | 45 | 50 | 40 |
| தக்காளி | 10 | 20 | 15 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 20 | 30 |
| கோவா | 25 | 20 | 25 |
| கரட் | 40 | 60 | 50 |
| பூசணி | 35 | 30 | 30 |
| புடோல் | 25 | 40 | 20 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 60 |
| பாகற்காய் | 70 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 40-50 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 70 | 40 |
| பயற்றங்காய் | 60 | 80 | 100 |
| லீக்ஸ் | 70 | 70 | 70 |
| பீற்றூட் | 20 | 30 | 20 |
| கறிமிளகாய் | 50 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 200-250 | 400 | 300 |
| போஞ்சி | 40 | 40 | 40 |
| கத்தரிதம்புள்ள | 35 | 20 | - |
| கீரை - 1 பிடி | 8-10 | 15 | 15 |
| தேசிக்காய் | 30-35 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 25 | 25 |
| வெங்காயப்பூ | 40 | 60 | 40 |

## இராசி பலன்

*02.03.2012*
*(மாசி 19, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு*
*நவமி மாலை 6.49 மணிவரை*
*மிருகசீரிடம் முன்னிரவு 7.26 மணிவரை*
*இராகுகாலம் 10.57-12.27 மணிவரை*
*சுபநேரம் 6.27-7.57 மணிவரை*
*கச்சியப்ப சிவாச்சாரியார் குருபூசை*

**மேடம்** செய்தொழிலில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க நினைப்பீர்கள், சகோதர ஒற்றுமை மேலோங்கும், வழிபாடு ஆனந்தமளிக்கும்.

**இடபம்** அலங்காரப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், தொழிலில் உயர்வு உண்டு, குதூகலிப்பான நாள்.

**மிதுனம்** தெய்வ வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை அமையலாம், மனம் ஆறுதல் தரும் வகையில் ஒரு பயணமொன்று உருவாகலாம்.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், தூரத்து உறவினர்கள் வருகையால் செலவுகள் அதிகரிக்கலாம், தொழில் நலன் கருதி பயணமொன்று ஏற்படும் வாய்ப்பு உண்டு.

**சிங்கம்** பொன்னான நாள், ஆலய வழிபாட்டால் மனத்திருப்தி காண்பீர்கள், தொழில் வருமானம் உயர்வடையும், மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** செல்வாக்கு மேலோங்கும் நாள், மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, உதிரி வருமானங்கள் கைக்கு கிடைக்கும், வீட்டுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், பேச்சுத்திறமையால் காரியங்கள் சாதிப்பீர்கள், திடீர் பயணங்களினால் நன்மையுண்டு, தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலக்குறைவால் உற்சாகம் குறையும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்கள் தாமதமாகும்.

**தனுசு** உறவினர்கள் சிலரை தேடிச் சென்று சந்திப்பீர்கள், கௌரவமான நாள், எடுத்தகாரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**மகரம்** உடல் நலம் சீராகும், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், முயற்சி கைகூடும்.

**கும்பம்** இனிமையான நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்து மகிழ்வீர்கள்.

**மீனம்** தொழில் ரீதியாக வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம்கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

வளவன்

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் சூழலில் உள்ள சீ.சீ.தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் இ.பசுபதீஸ்வரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் கந்தசாமி மகிழினி, சிறப்பு விருந்தினராக யாழ். வலய உடற்கல்விப்பாட ஆசிரிய ஆலோசகர் ச. செந்தூரன், கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியை மதிவதனா இராமநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-7-6)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் சமாதான நீதவான் எஸ். கே. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினர்களாக ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க. கமலேந்திரன், வேலணை கோட்டக் கல்வி அதிகரி கு. சரவணபவானந்தன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக துணை பேராசிரியர் அருள்நிதி சி. முருகானந்தவேல், வட இலங்கை சர்வோதய அறங்காவலர் செல்வி பொ. ஜமுனாதேவி, ஈ.பி.டி.பி.கட்சியின் புங்குடுதீவு அமைப்பாளர் எஸ். நவம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-7)

* * * * * *

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் கலாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக யாழ். கல்வி வலயத்திலிருந்து இளைப்பாறுகை பெற்ற ஆலோசகரும் கலாசாலையின் வருகை விரிவுரையாளருமாகிய செல்வி நா. வேலுப்பிள்ளை, தி. யோகேஸ்வரி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளர். (அ-6-7)




# மீசாலை பொது நூலகத்தில் இன்று ஊக்குவிப்பு நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் மீசாலை பொது நூலகத்தில் நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளி சிரேஷ்ட மாணவர்களுக்கான கதை, பாட்டு மற்றும் படக்கண்காட்சியும் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கான ஊக்குவிப்பு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மீசாலை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பல்வேறு சமூகத்தினரையும் நூலகத்துடன் இணைக்கும் நோக்குடன் நூலக அபிவிருத்தி ஆலோசனைக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்விற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சாவகச்சேரி கிளையினரும் சிங்கர் நிறுவனத்தின் சாவகச்சேரி கிளையினரும் அனுசரணை வழங்கவுள்ளதாக மீசாலை பொது நூலகரும் அபிவிருத்தி ஆலோசனை குழு செயலாளருமான திருமதி த.பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார். (அ-3-29)

# வடமராட்சி கிழக்கிலும் தனியார் பேருந்து சேவையை ஈடுபடுத்துங்கள்

## மக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களுக்கு தனியார் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என வடமராட்சி கிழக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்தத்தினால் முற்றாக சேதமடைந்த மேற்படி பிரதேசம் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டது.

தற்பொழுது பல ஆயிரக்கணக்கான மக்கள் வசித்து வரும் பிரதேசத்தில் பேருந்து சேவையின் அவசியம் அப்பிரதேச மக்களுக்கு மிகவும் முக்கிய தேவையாகவுள்ளது.

தற்பொழுது பருத்தித்துறையில் இருந்து ஆழியவளை வரை இ.போ.ச. பேருந்து சேவை மட்டமே பல மணிநேர இடை வெளியின் பின் நடைபெற்று வருகின்றது.

இதனால் அப்பகுதி மக்கள் பேருந்து சேவையைப் பெறுவதில் பல மணி நேரம் காத்திருந்து கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பேருந்து சேவையை இலகுபடுத்துவதற்கு அப்பிரதேசத்திற்கு தனியார் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த உரிய தரப்பினர் முன்வர வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-24)

# சாவ. வைத்தியசாலைக்கு நவீன பிரேத அறை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நவீன பிரேத அறை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ள நிலத்தை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், பொறியிலாளர் ஆகியோர் பார்வையிட்டு சென்றுள் ளனர்.

பொதுமக்களும் வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினரும் விடுத்த வேண்டுகோளை அடுத்து மேற்படி கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 2000 ஆம் ஆண்டு யுத்த சூழ் நிலையில் வைத்தியசாலைக் க்கட்டடங்கள் சேதமடைந்திருந்தன.

சுகாதார சேவைகள் பணிப்பாளரின் துரித நடவடிக்கையை அடுத்து சுமார் 300 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பணம் இதற்கு செலவிடப்பட்டுள்ளது. (அ-3-29)

# 787 பாதையூடாக இருவழிச்சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம் சில்லாலை மக்களின் வேண்டுகோளுக்கிணங்க யாழ். சில்லாலை இருவழி போக்குவரத்து சேவையினை இன்று 2 ஆம் திகதி 787 பாதையூடாக வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதென இணைய தலைவர் பொ. கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

787 பாதையூடாக நடைபெறவுள்ள சேவையானது யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு சித்தங்கேணி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, சில் லாலை ஊடாக மாதகல் செல்லும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

## கண்காணிப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான மார்ச் மாதத்திற்கான மாதாந்த மாவட்ட கண்காணிப்பு குழுக்கூட்டம் நடைபெறவுள்ளதாக யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமெனவும் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ)

## பிரதிஷ்டை வைபவம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விநாயகர் விக்கிரக பிரதிஷ்டை வைபவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் 9.30 மணி வரை நடைபெறவுள்ளது என ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம் அறிவித்துள்ளது. (அ-7)

## கடன்கருத்திட்ட பயிற்சிப்பட்டறை

(சாவகச்சேரி)


சாவகச்சேரி பொது நூலகத்தில் பொது மக்கள் இடையேயான போஷாக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று வெள்ளிகிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவ்ள்ளது.

இந்நிகழ்வில் சாவகச்சேரி மேற்பார்வை சுகாதார பரிசோதகர் க. கர்ணன் கருத்துரை வழங்கவுள்ளார். (அ-3-29)

## 40 பயனாளிகளுக்கு வறுமை ஒழிப்புக்கடன்

(யாழ்ப்பாணம்)

மத்திய வங்கியின் அனுசரணையுடன் ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ். மாவட்டத்தை சேர்ந்த 40 பயனாளிகளுக்கு வறுமை ஒழிப்பு கடன் கருத்திட்டத்தின் பயற்சிப் பட்டறை ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் மாலை 4.30 மணிவரை ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையில் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)







யாழ்ப்பாணம் மனிதவுரிமை பாதுகாவலர் பயிற்சியினை பூர்த்தி செய்தவர்களுக்கும் பதாகைப் போட்டிகளில் பங்குபற்றியவர்களுக்குமான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ். மனிதவுரிமை காரியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட முன்னாள் பிராந்திய இணைப்பாளர் கமலேஸ்வரன் உரையாற்றுவதையும் யாழ். பிராந்திய மனித உரிமை இணைப்பாளர் கனகராஜ் மாணவர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளின்)

# அப்பாவி மக்களின் அவலக்குரல் கேட்டு ஓடிச் சென்றவர் மேரி கெல்வின்



மேரி கெல்வின்

மேரி கெல்வினின் இடது கண்ணை இலங்கை பறித்தது. அவரது உயிரையே காவு வாங்கி விட்டது சிரியா. எங்கெல்லாம் அரசுப் படைகளின் தாக்குதலில் அப்பாவிகளின் அபயக்குரல் கேட்கிறதோ அங்கெல்லாம் தனது இருப்பைப் பதிவு செய்த பத்திரிகையாளர் மேரி கெல்வின் கடந்த 23ஆம் திகதி கொல்லப்பட்டு விட்டார்!

"2001ஆம் ஆண்டு வன்னியில் 5 இலட்சம் தமிழரின் அவல நிலையை அறிந்துகொள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நான் நுழைந்தேன். அங்கு செல்வதற்கு இலங்கை அரசாங்கம் தடைவிதித்திருந்தது. இலங்கைப் படைகளின் கண்ணிற்படாமல் வெளியேறிவிடவேண்டும் என்று நான் நினைத்தேன். சிறு விளக்குகளின் ஒளி, முட்கம்பி வேலிகள், இடுப்பளவு தண்ணீர் ஊடான காட்டுப் பாதையில் பயணித்தேன். ஆனாலும் படையின் கண்ணில்பட்டேன். என்னைப் பார்த்ததும் துப்பாக்கிக்சூட்டை ஆரம்பித்தனர். வெளிச்சக் குண்டுகளை வீசினர். "நான் பத்திரிகையாளர்'' என்று கத்தினேன்.

## கண்ணை பறித்தது இலங்கை; உயிரைப் பறித்தது சிரியா

அதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. அப்போது கிரனேட் வைத்து தாக்கினார்கள். அந்த இரத்தக் காயத்துடன் முன்னே நடந்து வந்தேன். நிற்க முடியவில்லை. இரத்தம் வழிந்து கொண்டு இருந்தது. அப்போது என் அருகில் வந்த படை வீரர்கள் பலமாக தாக்கத் தொடங்கினார்கள். என் உடைகளைக் கிழித்து நிர்வாணம் ஆக்கினார்கள். நான் மூச்சு விடக் கஷ்டப்பட்டுக்கொண்டும் தலையில், கண்ணில் காயத்துடனும் நெஞ்சில் வெடிக்காயத்துடனும் இருந்தேன். அப்படியே தூக்கி கனரக வாகனத்தில் வீசினார்கள். அந்த மக்கள் பட்ட அவலத்தைவிட நான் பட்ட துன்பம் ஒன்றும் இல்லை என்றாலும் எனது அனுபவம் தமிழர்களின் வேதனையைச் சொல்லப் போதுமானது என்று உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தவர் மேரி கெல்வின். தமிழர்கள் மட்டுமே இந்தப் பிரச்சினையை பேசி வந்த போது சொற்பமாக ஒலித்த ஐரோப்பியக் குரல்களில் அழுத்தமானது இவருடையது.

பிறப்பால் அமெரிக்கர், ஆனால் லண்டனில் தான் அதிகமாக வாழ்ந்தார். நியூயோர்க் யுனைடெட் பிரஸ் இன்டர்நஷனல் பொலிஸ் நிருபராக 1978 இல் சேர்ந்தார். ஏழு ஆண்டுகள் கழித்து சண்டேடைம்சில் வேலை பார்க்க பிரிட்டன் வருகிறார். மத்திய கிழக்கு நாடுகளின் சிறப்பு நிருபர் பணி இவருக்கு தரப்படுகின்றது.

அடுத்த 10 ஆண்டுகளில் உலகச் செய்திகள் அனைத்தையும் கவனிப்பதற்கான பெரும் பொறுப்பு இவருக்கு கிடைக்கின்றது. லிபிய ஜனாதிபதி கடாபிதான் இவர் முதன் முதலாக சந்தித்த நாட்டின் ஜனாதிபதி. கடாபி இறப்புக்கு சில மாதங்களுக்கு முன் சந்தித்தவர் மேரி கெல்வின்.

கொசாவா, சிம்பாவே, கிழக்கு தைமூர்... என எங்கு உள்நாட்டு யுத்தம் நடந்தாலும் அங்கே மேரி கெல்வின் சென்றுவிடுவார். அதனாலேயே போர்ச் செய்தியாளர் என்ற பட்டம் தாங்கினார். பொதுவாக பெரும் பத்திரிகைகளில் வோர் ரிப்போட்டர் என்று இருப்பார்கள். இராணுவம் எத்தகைய ஆயுதங்களை வைத்துள்ளது. என்ன மாதிரியான வெடிகுண்டுகள் வைத்திருக்கின்றார்கள். ஒரு குண்டு எத்தனை கிலோமீற்றர் தாண்டிப் போய் வெடிக்கும். இராணுவத் தளபதிகளின் சாகசம் என்ன என்று எழுதி வோர் ரிப்போட்டர் ஆனவர்கள்தான் அதிகம். ஆனால் மேரி கெல்வின் வித்தியாசமானவர். போர்ச்சூழலில் பலியாகும் பெண்கள், குழந்தைகள்படும் அவஸ்தைகள் மூலமாக ஆயுதங்களின் கோரத்தை எழுதுவதன் மூலமாக அமைதி நிருபராக இருந்தவர். 1999 ஆம் ஆண்டு கிழக்கு தைமூர் போர்ச் சூழலில் ஆயிரத்து 500 பெண்கள் தங்களது பிஞ்சுக் குழந்தைகளுடன் சிக்கிக் கொண்ட போது ஐ.நா. அமைப்புடன் பேசி அவர்களை மீட்கத் துடித்தவர் கெல்வின். கடைசியில் அவர்கள் அத்தனை பேரையும் காப்பாற்றவும் செய்தார்.

2000 ஆம் ஆண்டில் தான் அவரது பார்வை இலங்கை பக்கமாகவும் திரும்பியது. நேரடியாக ஈழம் வந்தார். அப்போது அவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தான் அவரது இடது கண்ணின் பார்வை முழுமையாக பறிபோனது. அன்று முதல் கறுப்புத் துணியைக் கண்ணில் கட்டிக் கொண்டு நடமாடினார். இந்தத் தாக்குதலை புலிகள் கண்டித்ததால் இவரை புலி ஆதரவாளர் என்று இலங்கை அரசாங்கம் குற்றம் சாட்டியது. அதைப் பற்றி கவலைப்படாமல் தமிழர் பிரச்சினையை எழுதுவதில் தொடர்ந்து ஆர்வமாக இருந்தார். நான்காம் கட்ட ஈழப்போர் என்று அழைக்கப்படும் முள்ளிவாய்க்கால் படுகொலை நேரத்தில் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை ஐ.நா. அமைப்புக்கும் புலிகளுக்கும் நடந்த போது இணைப்பாளராக இருந்தவர் மேரி கெல்வின்தான். வெள்ளைக்கொடியுடன் வந்த புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர்களான நடேசன், புலித்தேவன் ஆகிய இருவரும் மேரி கெல்வினின் வார்த்தை மீது நம்பிக்கை வைத்து தான் வெளியே வந்தார்கள்.

"அது ஓர் அவசரமான அழைப்பு. ஆனால் சில மணிநேரத்தில் இறக்கப்போகும் ஒருவரின் அழைப்பு போன்று அது இருக்கவில்லை...'' என்று தொடங்கி மேரி கெல்வின் எழுதிய கட்டுரை இன்றைக்கும் போர்க்குற்றத்தின் சாட்சியாக ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.




இதன் பின்னரும் அவருக்கு மிரட்டல்கள் வந்தன. அதை அவர் பொருட்படுத்தவில்லை. இலங்கையை போலவே சிரியாவும் அவரை மிரட்டியது. இந்த நாட்டிற்குள் வரக் கூடாது என்று சொன்னது. மீறித் தான் மேரி கெல்வின் சென்றார். தன்னுடன் பிரெஞ்சு புகைப்படக் கலைஞர் ரெமி ஒச்லிக் என்பவரையும் அழைத்துச் சென்றார். ஹோம்ஸ் நகரத்தில் இருந்த 'அரசு எதிர்ப்பாளர்கள் ஊடக மையம்' என்ற இடத்தில் தங்கி இருந்தார்.

அந்த வீட்டில் கடந்த 23 ஆம் திகதி காலையில் ஒரு ஷெல் வந்து விழுந்தது. கட்டடத்தில் இருந்தவர்கள் வெளியே ஓடியபோது ரொக்கெட் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது. அந்த இடத்திலேயே மேரி கெல்வினும் ரெமிஒச்லிக்கும் மரணம் அடைந்தார்கள்.

### ஜூனியர் விகடன்

அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் சிரிய ஜனாதிபதி ஆசாத்துக்கு எதிராக கெல்வின் கொடுத்த ஆவேசப்பேட்டி சனல் 4 இல் ஒளிபரப்பானது. இலங்கை அரசுக்கு எதிரான கட்டுரை ஆதாரத்தை வைத்துச் சென்றுள்ள இவர் ஆசாத்துக்கு எதிராக வீடியோவையும் விட்டுச் சென்றுள்ளார். எங்கோ பிறந்து யாருக்காகவோ உழைத்து எங்கோ இறந்து போன கெல்வின் வாழ்க்கை நம் அனைவருக்குமான தூண்டுதல்!

# ஆசிரியர் சேவையில் இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்

**தீவக வலயத்தில் இருந்து யாழ். வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

திருமதி பாலசுகி சதாநந்தன் (யா/கரம்பன் சண்முகாநந்த ம.வி), திருமதி பாமா ராணி சுந்தரராஜன் (யா/வேலணை சரஸ்வதி வித்தி, பிறைசின் அருள்சந்திரன் (யா/சரவணை சின்னமடு றோ.த.க.பா), கே.ஜே.ருவேசினி தெரின் டெஸ்மன் (யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் றோ.க.த.பா), திருமதி கஜநந்தினி வரதலோஜன் (யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்), திருமதி கார்த்திகா செல்வ மகேஷன் (யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்), திருமதி கோமகள் வஜீகரன் (யா/ புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம்), திருமதி கோசலாயினி சுகீதன் (யா/ வேலணை மத்திய கல்லூரி), திருமதி லோகதர்சினி முகுந்தன் (யா/ அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயம்), திருமதி மனோகரி கமல்ராஜ்( யா/ புனித அந்தோனியார் கல்லூரி), செல்வி நடராஜா காந்தலீலா (யா/புனித அந்தோனியார் கல்லூரி), செல்வி நாகமுத்து கேதீஸ்வரி (யா/வேலணை மேற்கு நடராஜா வித்தி, திருமதி ராதிகா கார்முகன் (யா/ புங்குடுதீவு மகாவித்தியாலம்), திருமதி ஏட்ஷேஸ்வரி சாந்தலிங்கம் (யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி, திருமதி ரோகினி பத்மகுமார் (யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்), திருமதி செந்தில்குமார் அங்கயற்கன்னி (யா/ புங்குடுதீவு மாகவித்தியாலயம்), திருமதி சோபனா குலோதுங்கன் (யா/வேலணை மத்திய கல்லூரி, திருமதி சில்வேஸ்ரர் லக்ரன் சுதாயினி (யா/மண்டைதீவு றோமன் க்த்தோலிக்க வித்தியாலம்), திருமதி சுபானுகா தவநாயகம் (யா/ சுந்தர மூர்த்தி நாயனார் வித்தியாலயம்), திருமதி சுகந்தினி நவநீதன் (யா/ புங்குடுதீவு மகாவித்தியாலம்), திருமதி சுகந்தி வரதராஜா (யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் வித்தியாலயம்), திருமதி சுஜிதா பகீரதன் (யா/ புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலம்), திருமதி தமிழ்ப் பிரியா பிரேமச்சந்திரன் (யா/ சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலம்), செல்வி உருத்திரப்பிரியா சீவரட்ணம் (யா/கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் மகாவித்தியாலம்), திருமதி வாகீசன் காயத்திரி (யா/நாரந்தனை றோ.க. ம.வி), திருமதி சிவமதி திருமாறன் (யா/ புனித அந்தோனியார் கல்லூரி), திருமதி சர்மிளா கணேசராசா (யா/ டாக்டர் ஏ.தியாகராஜா ம.ம.வி), திருமதி வித்தியா நகுலேந்திரன் (யா/புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தி)

**தீவக வலயத்தில் இருந்து தென்மராட்சி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

திருமதி ஜெயவனிதா பிரதீஸ் (யா/வேலணை கிழக்கு மகா வித்தி, திருமதி மைதிலி ஈஸ்வரன் (யா/வேலணை சரஸ்வதி வித்தி, திருமதி சிவமதி நந்தகுமார் (யா/ புனித அந்தோனியார் கல்லூரி)

**தீவக வலயத்திலிருந்து வடமராட்சி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

திருமதி பிரதீபா மகேந்திர சர்மா (யா/புனித அந்தோனியார் கல்லூரி), எஸ்.கருணாநந்தன் (யா/ டாக்டர் தியாகராஜா ம.மகா.வித்தி, பாலசுந்தரஐயர் உமாகரன் (யா/நயினாதீவு ஸ்ரீ கணேசா), அஞ்சலா சிவகுமார் (யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம்), கே.கியோமர்.புனித அந்தோனியார் கல்லூரி)

**தீவக வலயத்திலிருந்து வலிகாம வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

திருமதி அமுதினி சிவகுமார் (யா/மண்டைதீவு மகாவித்தி, திருமதி ஆனந்தலட்சுமி சிவஸ்கந்தன் (யா/ புனித அந்தோனியார் கல்லூரி), திருமதி அனேலுமினா ஜெயதாசன் (யா/புனித அந்தோனியார் கல்லூரி), திருமதி லலிதா கோமலேஸ்வரன் (யா/ புங்குடுதீவு சித்தி விநாயகர் வித்தி, நாகமுத்து வாசுதேவன் (யா/புனித அந்தோனியார் கல்லூரி), செல்வி நிறைஞ்சினி சண்முகநாதன் (யா/ தம்பாட்டி அ.த.பா), செல்லத்துரை சுவேந்திரன் (யா/வேலணை மத்திய கல்லூரி), திருமதி சுபாங்கி மயூரன் (யா/யாழ்ரன் கல்லூரி), திருமதி சுகந்தினி மதியழகன் (யா/வேலணை கிழக்கு நடராஜா வித்தியாலயம்), சிவபாலசிங்கம் ஜெயவரதன் (யா/சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம், திருமதி றொபேட்ரண்ட சீலன் சந்திரவதனா( யா/காரை சுந்தர மூர்த்தி நாயனார் வித்தியாலயம்), செல்வி ரி.தர்சினி (யா/ ஊர்காவற்றுறை புனித மரியாள் வித்தி,

**கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தீவக வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

திருமதி கலைச்செல்வி விஜயகுமாரன் (யா/ கிளி.உமையாள் புரம் அ.த.க.பா), குமாரசாமி நிசாந்தன் (கிளி/இரணைதீவு றோ.க.பா), ஏ.ஜெயகணேசன் (கிளி.வலயக்கல்வி), கே.குமணன் (கிளி.வலயக்கல்வி), கந்தசாமி விஜயகரன் (யா/கிளிநொச்சி தர்மபுரம் இல.1 அ.த.பா.), குமரகுரு துஷ்யந்தன் (கிளி.ஜெயபுரம் மகா வித்தி), எம்.சிவநாதன் (யா/கிளி.இந்துக் கல்லூரி), திருமதி பகீரதி பேரின்பராஜா (கிளி/ மகாவித்தியாலயம்), பரமலிங்கம் குகணேஸ்வரன் (கிளி/ பாரதி வித்தியாலயம்), திருமதி ராதிகா துஷ்யந்தன் (கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம்), திருமதி செயாழ் லோகதயாளன் (கிளி/பாரதி வித்தியாலயம்), திருமதி சுபநந்தினி பார்த்தீபன் (கிளி/மாசா அ.த.க.பா), செல்வி கேதீஸ்வரி முருகையா (கிளி/ ஒட்டுப்புலம் அ.த.க.பா), மகேந்திரசிங்கம் சிவசீலன் (கிளி/ பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம்), திருமதி அனுசாந்தி சுகிர்தராஜா (கிளி/மத்திய கல்லூரி), செல்வி தாரணி கனகசபாபதி (கிளி/ அக்கராயன் மகாவித்தியாலயம்), தர்மராஜா செந்தில் குமரன் (வலயக்கல்வி), செல்வி வளர்மதி தெய்வேந்திரன் (கிளி/கனகாம்பிகை அ.த.க. பா.), கனகசபாபதி சிவனந்தவர்மன் (கிளி/ கிராஞ்சி அ.த.பா), செல்வி குமுதினி தியாகலிங்கம் (கிளி/ நாகேஸ்வரா வித்தியாலயம்), திருமதி களின்ரஸ் கஜவல்லி (கிளி/ பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), கே.உதயகுமார் (கிளி/விநாசி ஓடை அ.த.பா), திருமதி தயானந்தி ரவிச்சந்திரன் (கிளி/முரசுமோட்டை அ.த. பா), வைத்திலிங்கம் யோகராஜா (கிளி/கோவில் வயல் சீ.சீ.த.க),

**கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மன்னார் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

திருமதி அனதேசியா செல்வராஜ் (கிளி/ மத்திய ஆரம்ப பாடசாலை)

**கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தென்மராட்சி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

திருமதி அற்புதமலர் கிருஷ்ணமூர்த்தி (கிளி/ கோவில் வயல் சீ.சீ.த.க.பா), திருமதி கஜலட்சுமி பூபாலசிங்கம் (கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம்), கந்தசாமி சந்திரகுமார் (கிளி/ பூநகரி மகாவித்தியாலயம்), திருமதி ராசரஞ்சினி வசந்தகுமார் (கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம்), செல்வி சின்னத்தம்பி அற்புதமலர் (கிளி/இந்துக் கல்லூரி), திருமதி கனகரட்ணம் மகிந்தன் (கிளி/முருகானந்தா வித்தியாலயம்), கந்தசாமி சிவகுமார் (கிளி/கண்டாவளை மகாவித்தியாலயம்), என்.ஜயீந்தன் (கிளி/பளை மத்திய கல்லூரி), திருமதி ஒலிவதனா கலைச்செல்வன் (கிளி/தர்மக்கேணி அ.த.க.பா), சுந்தரம் சிவபாலன் (வலயக்கல்வி), திருமதி யசோதா திருக்கேதீஸ்வரன் (கிளி/பளை மத்திய கல்லூரி), திருமதி கார்த்திகா பிரதாபன் (கிளி/பளை மத்திய கல்லூரி), எஸ்.பரனீதரன் (கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), திருமதி ராகினி சக்திரதன் (கிளி/ பளை மத்திய கல்லூரி), திருமதி ரூபாகினி லோகேந்திரன் (கிளி/பரந்தன் இந்துக் கல்லூரி), திருமதி சுபாஜினி நவீஸ்வரன் (கிளி/ நாகேஸ்வரா வித்தியாலயம்),சிவப்பிரகாசம் சிவநாவலன் (கல்லாறு தமிழ் வித்தியாலயம்), திருமதி சந்திரவதனா சிவநாவலன் (கிளி/ ஆனையிறவு அ.த.பா),

**கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வலிகாம வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

திருமதி ஜசந்தா நவஜீவன் (கிளி/பளை றோ.க.த.க.பா), நாராயண பிள்ளை ரமணன் (கிளி/ஜெயபுரம் மகாவித்தி, திருமதி சாந்தி சுரேஷ்குமார் (கிளி/ சோரன்பற்று கணேசா வித்தியாலயம்), திருமதி ரேவதி ராகுலன் (கிளி/ பளை மத்திய கல்லூரி), தர்மதாசன் குமரதாசன் (கிளி/ பூநகரி மகாவித்தியாலயம்), கோபால சிற்சபேசன் (கிளி/பரந்தன் இந்துக் கல்லூரி), முத்துக்குமாரசாமி ராகுலன் (கிளி/ முருகானந்தா மகாவித்தியாலயம்), திருமதி கவிதா சிவனேஸ்வரன் (கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), அண்ணாமலை கருணாகரன் (கிளி/ நாச்சிக்குடா அ.த.பா.), அருளாநந்தன் டெய்சி (கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்), கந்தையா ஆனந்தகுமார் (கிளி/கோவில் வயல் சீ.சீ.த.க.பா), கைலைநாதன் சரவணன் (கிளி/புன்னைநீராவி அ.த. க.பா), கே.கோகுலன் (வலயக்கல்வி), மயில்வாகனம் சிவமோகன் (கிளி/பரமன்கிராய் அ.த.க.பா), திருமதி புஷ்பமலர் ஸ்ரீதரன் (கிளி/ தம்பிராசபுரம் அ.த.க.பா), எஸ்.ராஜேஸ்வரன் (கிளி/கிராஞ்சி அ.த.பா), திருமதி செல்வமலர் வன்னியசிங்கம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.பா.), திருமதி சுபாஜினி சாந்தகுமார் (கிளி/ பிரமந்தனாறு மகாவித்தியாலயம்), சூசைமுத்து பரஞ்சோதி (கிளி/மத்திய கல்லூரி), திருமதி ஜெயந்திரகுமார் வளர்மதி (கிளி/சோரன் பற்று கணேசா வித்தியாலயம்), திருமதி ஜெயசிறி கண்ணதாசன் (கிளி/சிவபாதகலையகம் அ.த. க.பா), கே.கேதீஸ்வரன் (கிளி/கண்டவாளை மகாவித்தியாலயம்), திருமதி பகீரதி ராஜேந்திரம் (கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), திருமதி ரஜனிமாலா கெங்காதரன் (கிளி/இந்து ஆரம்பப் பாடசாலை), வரதராஜா சசிகுமார் (கிளி/வேரவில் இந்து மகாவித்தியாலயம்), சேவியர் வோஷிங்ரன் (கிளி/ அக்கராயன் அ.த.க.பா),

**கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வவுனியா தெற்கு வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

திருமதி புவனாம்பிகை செல்வராஜா (கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா), திருமதி கமலரஞ்சினி அகிலநாயகம் (கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.பா), தனுக்கோடி ஜெயக்குமார் (கிளி/ஐயனார்புரம் அ.த.பா), பி.பத்மரெஜி (கிளி/பாரதி வித்தியாலயம்), திருமதி கலைஞானவதி சுரேந்திரன் (கிளி/ கனகபுரம் மகாவித்தியாலயம்), திருமதி எம்.நிர்மலராஜா (ஐயனார்புர அ.த.க.பா), நவரட்ணம் குண ரூபன் (கிளி/புன்னை நீராவி அ.த.க.பா), செல்வி சிவநளாயினி நடராஜா (கிளி/கனகாம்பிகை குளம் அ.த.பா), திருமதி மேகலை சாந்தரூபன் (கிளி/பூநகரி மகாவித்தியாலயம்), திருமதி நவீனமலர் சந்திரபோஷ் (கிளி/ ஆனைவிழுந்தான் குளம் அ.த.க.பா), செல்வி பி.கீதாஞ்சலி (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்), செல்வி எஸ்.கேமமாலினி (கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்), சேனாதிராஜா ஜெயதேவன் (கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்), திருமதி லதா குணநாதன் (கிளி/மத்திய கல்லூரி),

**கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வடமராட்சி வலயத்திற்கு இடம் மாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

திருமதி உதயகுமாரி சந்திரகுமார் (கிளி/ மத்திய கல்லூரி), செல்வி சிவரஞ்சினி நடராஜா (கிளி/தர்மபுரம் மகாவித்தியாலயம்), வேலாயுதம் பகீரதன் (கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்), கே.பிரதீபன் (வலயக் கல்வி), ஐயாத்துரை துசிகாந்தன் (கிளி/வலைப்பாடு றோ.க.த.க.பா), ஏ.ஜெய நிமலன் (கிளி/ முருகானந்தா மகாவித்தியாலயம்), திருமதி சிவகுமாரி ஆனந்தராஜா (கிளி/ சாந்தபுரம் இல.1 அ.த.பா), தேவராஜா சுரேந்திரன் (கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா), திருமதி சிவாஜினி பரமேஸ்வரன் இராமநாதபுரம் மகாவித்தியாலயம்),

**மடு வலயத்திலிருந்து யாழ். வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

ஜோன் குபேட் (மன்/முள்ளிக்குளம் அ.த. க.பா), எஸ். கேசவன் (மன்/தேவன்பிட்டி றோ.க.த.பா), திருமதி ஞானமுத்து சர்வே (மன்/சின்னப்பள்ளி விரிச்சான் அ.த.க.பா), சுப்பிரமணியம் பிரேமன் (மன்/வெள்ளாங்குளம் அ.த.பா),

**மடு வலயத்திலிருந்து தென்மராட்சி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

பேரின்பராஜா சிறீகாந்தன் (மன்/தூய ஜோசப் பாஸ் மகாவித்தியாலம்), கே.குணரட்ணம் (மன்/கருங்கண்டல் றோ.க.த.ம.வித்தி,

**மடு வலயத்திலிருந்து வடமராட்சி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

இளையதம்பி கைலைநாதன் (மன்/ஆதி மேட்டை அ.த.க.பா),

**மடு வலயத்திலிருந்து வலிகாம வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

ஏ.சேகரன் (மன்/மூன்றாம்பிட்டி அ.த.க. பா), கே.தேவகாந்தன் (மன்/மூன்றாம் பிட்டி அ.த.பா),

**மன்னார் மாவட்டத்திலிருந்து யாழ். வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

கிருஷ்ணன் மதீஸ்வரன் (மன்/தோட்டவெளி அ.த.க.பா), நடராஜசுந்தரம் ரகுநாத் (மன்/புனித லூசியா மகாவித்தி, என்.சிவநந்தராஜா (மன்/புனிதவளநார் றோ.க.த.வித்தி, சுந்தரமூர்த்தி பிரேம்குமார் (மன்/பாத்திமா மத்திய மகாவித்தியாலயம்), செல்வி கே.தபோதினி (மன்/புனித லூசியா மகாவித்தியாலயம்), செல்லையா கஜிதரன் (மன்/சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி), திருமதி கணேஸ்வரி கஜேந்திரன் (மன்/ கௌரி அம்பாள் அ.த.க.பா), போதகர் சகோதரி நிர்மலவசந்தா மரிய செல்வம் (மன்/சென்லோரன்ஸ் றோ.க.த.பா),

**மன்னார் மாவட்டத்திலிருந்து தென்மராட்சி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

சுப்பிரமணியம் சுதர்ஷன் (மன்/அல்அசார் மகாவித்தியாலயம்), கே.உமாபாலன் (மன்/ முருங்கன் மகாவித்தியாலயம்), கனகரட்ணம் தனுராஜ் (மன்/புனித சேவியர் மகளிர் கல்லூரி), பி.சகிலன் (மன்/முருங்கன் மகாவித்தி,

**மன்னார் மாவட்டத்திலிருந்து வடமராட்சி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

பி.ரதீஸ் (மன்/புனித ஆன்ஸ் மத்திய மகா வித்தி, சின்னையா பாலமுருகன் (மன்/பாத்திமா மகாவித்தியாலயம்), திருமதி நிவிதா அகிலன் (மன்/முருங்கன் மகாவித்தியாலயம்), எஸ்.கபிலன்(மன்/அரிப்பு றோ.க.த.பா),

**மன்னார் மாவட்டத்திலிருந்து வலிகாம வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டோர் விபரம்:-**

கந்தசாமி நிமலதாஸ் (மன்/சென் ஆன்ஸ் மத்திய மகாவித்தியாலயம்), கே.காண்டீபன் (மன்/சூரிய கட்டைக்காடு றோ.க.த.பா), வைகுந்தநாதன் பிரதீபன் (மன்/புனித சேவியார் மகளிர் கல்லூரி), கே.பேரின்பகும்மார் (மன்/ நானாட்டான் மகாவித்தியாலயம்), திருமதி ஸ்ரீலேகா பேரின்பகுமார் (மன்/நானாட்டான் மகா வித்தியாலயம்), பாலசாமி ரூபன் (மன்/கௌரி அம்பாள் அ.த.க.பா), பாலகிருஷ்ணன் பார்த்தீபன் (மன்/புனிதசேவியார் ஆண்கள் கல்லூரி), கே.கஜேந்திரன் (மன்/கௌரி அம்பாள் அ.க.த.பா), எஸ்.சுதாகரன் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பா), செல்வி கோமகள் குமாரசாமி (மன்/புனித சேவியார் மகளிர் பா)

(தொடரும்)

# இராணுவம் பாதுகாக்கப்பட வேண்டுமானால்

# சரத் பொன்சேகா ஜெனீவா செல்ல வேண்டும்

## புதிய சிஹல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திர

(கொழும்பு)

சர்வதேசத்திலிருந்து ஜனாதிபதியும் இராணுவமும் மற்றும் நாடும் பாதுகாக்கப்பட வேண்டுமானால் சிறையில் இருக்கின்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை உடனடியாக விடுதலை செய்து ஜெனீவாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று புதிய சிஹல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்திர தெரிவித்தார்.

முரண்பாடுகளை வளர்த்துக்கொண்டு சர்வதேச நாடுகளின் அழுத்தங்களை வென்று விட முடியாது.

இராஜதந்திர செயற்பாடுகளே பிரதான மாகும். எனினும் அரசாங்கம் இதிலிருந்து விலகியிருக்கின்றது என்றும் அவர் சொன்னார். எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற பொது எதிர்க்கட்சிகளின் விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே சரத் மனமேந்திர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில், நாடு இன்று சென்று கொண்டிருக்கும் பொருளாதார சூழலில் மக்களால் வெற்றிலை சாப்பிடுவதற்கும் முடியாதுள்ளது.

வெற்றிலை வியாபாரம் செய்வோரும் திண்டாட்டத்துக்குள்ளாகியுள்ளனர். அந்த அளவில் விலைவாசி உயர்வு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது.

வெற்றிலைக்கே இந்நிலையாக இருக்கும் போது இன்னும் இரண்டே மாதங்களில் அனைத்து அத்தியாவசிய பொருட்களினதும் சேவைகளினதும் விலைகள், கட்டணங்கள் அதிகரிக்கப் போகின்றன. பால்மாவின் விலையை அதிகரிப்பதற்கான அனுமதியை அந்த நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரியிருக்கின்றன.

இந்த நிலைமைகளை மூடி மறைப்பதற்காகவே அரசு ஜெனீவா நாடகம் ஆடுகின்றது.

இந்நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன. பயங்கரவாதத்தை முறியடித்து விடுதலை பெற்றுக் கொடுத்த முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை சிறையில் அடைத்துள்ளதன் மூலம் அவரது மனித உரிமை மீறப்பட்டிருக்கின்றது.

அத்துடன் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்துள்ள அரசாங்கம் புலித் தலைவர்களுக்கு சொகுசு வாழ்க்கை அமைத்து கொடுத்திருக்கின்றது.

தற்போது ஜெனீவா குறித்து அரசு பெரிதாக அலட்டிக் கொண்டிருக்கிறது. ஜெனீவா கூட்டத் தொடருக்கென அரசாங்கத்தின் சார்பில் 52 பேர் சென்றுள்ளனர். இவ்வாறான தொரு கூட்டம் அங்கு செல்ல வேண்டிய தேவையே கிடையாது.

ஜனாதிபதியும் நாடும் இராணுவமும் பாதுகாக்கப்பட வேண்டுமானால் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை சிறையில் இருந்து விடுதலை செய்து ஜெனீவாவுக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

சரத் பொன்சேகா அங்கு செல்வாராயின் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அவர் உரிய பதிலினை வழங்குவார். ஏனெனில் யுத்தகள நடவடிக்கைகள் தொடர்பில் தான் பொறுப்பு கூறுவதற்கு தயாராகவே இருப்பதாக அவர் கூறி வருகின்றார்.

எனவே, அவரை ஜெனீவாவுக்கு அனுப்பி வைத்தால் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்து விடும். மேலும் இவ்விடயத்தை இராஜதந்திர நடவடிக்கைகளின் மூலமே அணுக வேண்டும். அதனை விடுத்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி முரண்பாடுகளை அதிகப்படுத்துவதன் மூலம் சர்வதேச அழுத்தங்களை வென்று விட முடியாது.

மேலும் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க மற்றும் விமல் வீரவன்ச போன்றோரது நடவடிக்கைகளால் பராக் ஒபாமாவோ அல்லது பான் கீ மூனோ அஞ்சி நடுங்கி விடப் போவதில்லை என்றார். (அ-2)

# சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிற்கு எதிர்க்கட்சி தலைவர் ரணில் கடிதம்

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்குரிய உள்விவகாரங்கள் தொடர்பில் சவாலுக்கு உட்படுத்தல் அல்லது கேள்விகளை எழுப்புதல் பாராளுமன்ற சிறப்புரிமையை மீறுகின்ற செயலாகும்.

பாராளுமன்ற உள்விவகாரம் தொடர்பிலான முழு அதிகாரம் பாராளுமன்றத்திற்கே இருக்கின்றது என்று எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சி தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிற்கு அவர் எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு மாகஸ் பெர்னாந்து மாவத்தையில் இலக்கம் 18 இல் இருக்கின்ற மேயரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை மூன்றாவது பிரிவினருக்கு குத்தகைக்கோ அல்லது வாடகைக்கோ விடுவதற்கு இடைக்கால தடையுத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் விதித்துள்ளமை தொடர்பில் செய்திகள் வெளியாகியுள்ளன. அதில் எதிர்க்கட்சி தலைவரே பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத்தினால் அனுமதியளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தை தவிர பாராளுமன்ற உள்விவகாரங்கள் தொடர்பிலான காரணங்களை நீதிமன்றத்தினால் பயன்படுத்த முடியாது. பாராளுமன்றத்தின் உள்விவகாரங்கள் தொடர்பிலான முழு அதிகாரம் பாராளுமன்றத்திற்கே இருக்கின்றது என்றும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# ஊடக சுதந்திர நிலைமை குறித்து ஊடகவியலாளர் அமைப்பு அதிருப்தி

(கொழும்பு)

இலங்கையின் ஊடக சுதந்திர நிலைமை குறித்து எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது. ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் மீது அடக்கு முறைகள் பயன்படுத்தப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஊடகங்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களை நிறுத்துமாறு இலங்கையிடம் கோரும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓராண்டுகாலமாக வித்தியாசமான முறையிலான ஊடகத் தணிக்கைகள் இலங்கையில் மேற்கொள்ளப்படுவதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தகவல் சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறு இலங்கையை வலியுறுத்துவதற்கு காத்திருக்காமல் தற்போதே தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தாக்குதல்கள், கொலைமிரட்டல்கள் உள்ளிட்ட பல்வேறு ஒடுக்குமுறை சம்பவங்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ள போதிலும் இன்னமும் முழுமையான ஊடக சுதந்திரம் நிலைநாட்டப்படவில்லை.

பல ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் வெளிநாடுகளில் புகலிடம் கோரியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான செய்திகளை உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்கள் சுதந்திரமாக சேகரிக்க இன்னமும் வாய்ப்பு கிட்டவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தை விமர்சனம் செய்வோர் புலி ஆதரவாளர்களாகவோ அல்லது சூழ்ச்சிக்காரர்களாகவோ அடையாளப்படுத்தும் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டுமென எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (அ-2)

# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா

கச்சதீவு புனித அந்தோனியார் கோவில் வருடாந்த உற்சவவிழா நாளை மறுதினம் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை கச்சதீவு பங்குத்தந்தை அருட்திரு ஏ.அமல்ராஜ் மேற்கொண்டுள்ளார்.

விழா ஒழுங்குகளை யாழ்.மாவட்ட செயலகம், நெடுந்தீவு பிரதேச செயலகம், வேலணை பிரதேச செயலகம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரிகள், கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸ் பிரிவினர் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

இம்முறை திருவிழாவிற்கு இலங்கை, இந்தியா என்பவற்றில் இருந்து அண்ணளவாக சுமார் 7 ஆயிரம் வரையானயாத்திரிகர்கள் கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

யாத்திரிகர்களுக்கான பாதுகாப்பு மற்றும் குடிநீர், உணவு, மலசலகூடம், சுகாதாரம், அவசர மருத்துவம் உட்பட அறிவுறுத்தல்கள் அடங்கிய கடிதம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் உரிய தரப்பினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருவிழாவில் பங்கு பற்றும் இலங்கை யாத்திரிகர்கள் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் கச்சதீவுக்கு பயணம் மேற்கொள்ள முடியும். மேலும் யாத்திரிகர்கள் குறிகாட்டுவான், நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, குருநகர், பாஷையூர், மண்டைதீவு, நாவாந்துறை ஆகிய துறைகளினூடாக படகுகளில் கச்சதீவுக்கு பயணம் மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவிலிருந்து கச்சதீவிற்கு ஒரு வழிக் கட்டணமாக 150 ரூபாவும் குறிகாட்டுவானிலிருந்து ஒருவழிக்கட்டணமாக 200 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நெடுந்தீவிலிருந்து நாளை காலை 9.30, 10.30, 11.30 மற்றும் 12.30 ஆகிய நேரங்களில் படகுச்சேவை இடம்பெறவுள்ளது.

யாத்திரிகர்களுக்கான உணவுத் தேவைகளுக்காக நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்தின் உணவு கொள்முதல் மையங்கள், தனியார் விற்பனை நிலையங்கள் என்பன நிறுவப்பட்டுள்ளது. அவசர தேவை கருதி கியூமெடிக்கா நிறுவனத்தின் அம்புலன்ஸ்படகு சேவை, நடமாடும் நீதிமன்று மற்றும் இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகளின் சேவையும் பெறப்படவுள்ளது.

அத்துடன் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களினை கொண்டு வருவதனையும், தொற்று பரவாது தடுப்பதற்காக விவசாய உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றினை யாத்திரிகர்கள் எடுத்து வருதல் தவிர்க்கப்பட வேண்டும் என வும் அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-7)

# வாக்காளர் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்ற தேர்தலின் போது வாக்காளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயம் என தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கக்கூடிய செல்லுபடியான ஆவணங்களை தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்காளர்கள் செல்லும் போது தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாரதிஅனுமதிப்பத்திரம், ஓய்வூதிய அட்டை, முதியோர் அட்டை, மதகுருமார்களுக்காக ஆட்பதிவு திணைக்களம் விநியோகித்துள்ள அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை எடுத்து செல்ல வேண்டும் எனவும் இதனை தவிர தேர்தல்கள் திணைக்களம் மற்றும் ஆட்பதிவு திணைக்களத்தினால் கடந்த தேர்தல்களுக்காக விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளையும் வாக்காளர்கள் பயன்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அடையாள அட்டைகளில் எந்தவொரு அடையாள அட்டைகளும் இல்லாதவர்கள் உடனடியாக கிராம உத்தியோகத்தரை சந்தித்து தற்காலிக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தலில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களுக்கு இம்மாதம் 10 ஆம் திகதி வரை மாத்திரமே தேர்தலுக்கான தற்காலிக அடையாள அட்டை விநியோகிக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (அ-7)

# ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிரான வழக்கு அமெரிக்க நீதிமன்றில் தள்ளுபடி

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு வெளிநாட்டு அரச தலைவர் என்பதால் அவருக்கு சிறப்பு இராஜதந்திர விலக்குரிமை உள்ளதாக ஒபாமா நிர்வாகம் கூறியுள்ளதை அடுத்து தான் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டியுள்ளதாக அமெரிக்க மாவட்ட நீதிபதி கொலின் கோல கோறிலி அறிவித்தார்.

இது தொர்பாக தனது தீர்ப்பில் அவர் நீதிமன்றம் இந்த முடிவை சாதாரணமாக எடுக்க முடியாது. வாதிகளின் முறைப்பாடுகள் அமெரிக்க மற்றும் அனைத்துலக சட்டங்களுக்கு முரணான வகையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் வன்முறைகள் குறித்த அதிர்ச்சி தரும் குற்றச்சாட்டுக்களை கொண்டுள்ளது.

இந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்படுவதானது வாதிகளின் குற்றச்சாட்டுகள் அல்லது பிரதிவாதிகளின் தற்காப்பை பிரதிபலிக்கும் வகையில் அமையாது.

மாறாக இரண்டு நூற்றாண்டுகளாக உள்ள சட்டங்கள், அடிப்படை அரசியலமைப்பு மற்றும் சட்டக் கொள்கைகள் என்பன வாதியின் இந்த முறைப்பாட்டை இந்த நீதிமன்றம் தொடர்ந்து விசாரிப்பதைத் தடுக்கிறது என்று கூறியுள்ளார்.

எந்தவொரு தனிநபரும் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் மற்றும் தவறான மரணங்களுக்கு எதிராக இழப்பீடு கோர முடியும் என்று 1992 ஆம் ஆண்டு அமெரிக்க காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட சித்திர வதைகளில் இருந்து பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் இந்த வழக்குத் தொடரப்பட்டது.

எந்தவொரு தனிநபரும் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளதால் அரச தலைவராக இருந்தாலும் மகிந்த ராஜபக்சவுக்கு இராஜதந்திர விலக்குரிமை பொருந்தாது என்று வாதிகளின் தரப்பில் வாதிடப்பட்டது.

ஆனால், அது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க மாவட்ட நீதிபதி அரச தலைவர்களுக்கு விலக்குரிமை உள்ளதாக இராஜாங்கத் திணைக்களம் பிரகடனம் செய்தால் அதை ஏற்கலாம் என்று காங்கிரசின் ஆவணங்களில் தெளிவாக கூறப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

இந்த நீதிமன்றம் இந்த வழக்கு விடயத்தில் நிறைவேற்று அதிகாரம் குறித்த இரண்டாவது ஊகத்தை செய்யும் நிலையில் இல்லை. ஷ

நாட்டின் வெளிவிவகாரக் கொள்கை பணியில் உள்ள இலங்கை ஜனாதிபதிக்கு விலக்குரிமை வழங்க விரும்புகிறது என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# மாளிகாவத்தையில் பதற்ற நிலை

மாளிகாவத்தைப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடங்களை அகற்றுவதற்காக அதிகாரிகள் நேற்று வியாழக்கிழமை காலை சென்றபோது அப்பகுதி குடியிருப்பாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் அப்பகுதியில் இன்னமும் நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. கலகம் அடக்கும் பொலிஸார் அப்பகுதிக்கு வரவழைக்கப்பட்டுள்ளதுடன் நீர்பீரங்கிகளும் பொலிஸாரினால் கொண்டு வரப்பட்டுள்ளன.

நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முகமாக பொலிஸாருக்கு உதவும் வகையில் விசேட அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் அப்பகுதியில் உள்ளனர். (அ-2)

# மாபெரும் இரத்ததான முகாம்



மாகாண காணி ஆணையாளர் நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு நேற்று துணுக்காய் பிரதேச செயலகத்தில் துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை இரத்த வங்கி வைத்தியர்கள், பணியாளர்கள் வருகை தந்து அரச உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், பொதுமக்கள் ஆகியோரிடம் இரத்தத்தினை சேகரித்தனர். நிகழ்வில் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, துணுக்காய் பிரதேச சிவில் நிர்வாக பொறுப்பதிகாரி மேஜர் எஸ்.கெட்டியாராச்சி உட்பட கிராம அலுவலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ-3-15)

# இலங்கையின் கொலைக்களம் 2 ஆம் பாகம் மார்ச் 14 இல்

## சனல் 4 வெளியிடும்

(கொழும்பு)

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி நிறுவனம் இலங்கையின் கொலைக்களம் பகுதி 2 ஆம் ஆவணப்படத்தை எதிர்வரும் 14 ஆம் திகதி வெளியிடவுள்ளதாக அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டு வருகின்ற நிலையில் இலங்கையின் கொலைக்களம் தண்டனைக்கு உட்படுத்தப்படாத போர்க்குற்றங்கள் என்கிற இப்புதிய ஆவணப்படம் வெளிவரவுள்ளது.

இலங்கையின் இறுதி யுத்தத்தில் இடம்பெற்றன என்று கூறப்படுகின்ற நான்கு குற்றங்கள் தொடர்பாக இப்படத்தில் விசேடமாக ஆராயப்பட்டுள்ளது. இக்குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார்? என்றும் ஆய்வு செய்யப்பட்டு இருக்கின்றது.

யுத்த சூனிய பிரதேசத்தில் பொதுமக்கள் மீதும் வைத்தியசாலைகள் மீதும் நடத்தப்பட்ட பயங்கரமான எறிகணைத் தாக்குதல்கள் பல்லாயிரக் கணக்கான பொதுமக்களுக்கு உணவு, மருந்து ஆகியன மறுக்கப்பட்டதுடன் யுத்த வலயத்துக்கு மனிதாபிமான உதவிகள் வரவிடாமல் தடுக்கப்பட்ட சம்பவங்கள் மீட்பு நடவடிக்கையின்போது பொதுமக்கள் கொல்லப்பட்டமையுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க கைதிகள் நிர்வாணம் ஆக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள், 12 வயது சிறுவன் ஒருவன் மிக கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஆகியனவே இந்த ஆவணப்படத்தில் முக்கியமாக காட்டப்பட்டு இருக்கின்ற நான்கு வகையான போர்க்குற்றங்களாகும். (அ-2)

# பிரதிப் பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் தமிழர்கள் புறக்கணிப்பு!

## தவறு என்கிறார் அமைச்சர் வாசுதேவ

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் நியமனத்தில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டமை பிழையான செயலாகும் என்று தேசிய மொழிகள் மற்றும் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்திற்கான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். இது இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிக்கு குந்தகம் விளைவிப்பதாக அமையுமென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் 22 பேர் அண்மையில் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாக பதவியுயர்த்தப்பட்டனர். இவர்களில் சிங்களவர்கள் 21 பேரும் ஒருவர் முஸ்லிமும் ஆவர். ஒரு தமிழரேனும் பதவியுயர்த்தப்படவில்லை.

இது குறித்து கேட்டபோதே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இவை அனைத்தும் பிழையான செயற்பாடாகும். இப்பதவிக்கு தகுதியுள்ள தமிழ் பொலிஸார் விண்ணப்பித்துள்ளனர். அப்படியிருந்தும் அவர்கள் இணைத்துக் கொள்ளாமை அநீதியான செயலாகும்.

அத்தோடு இவ்வாறான செயற்பாடுகளால் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சி பாதிக்கப்படும். மேலும் மேலும் இனங்களுக்கிடையேயான இடைவெளிகள் அதிகரித்தே செல்லும். எனவே இது தொடர்பில் உடனடியாக அரசாங்கத்திற்கு கடிதம் எழுதவுள்ளேன் என்றார்.

பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவில் தமிழ் அதிகாரிகளுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியில் தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் மனோகணேசன் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# திறனற்ற முகாமைத்துவமே எரிபொருள் விலையேற்றத்திற்கு காரணம்- சஜித்

(கொழும்பு)

உலக சந்தையில் மிகப்பாரியளவில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படவில்லை. அதற்கு ஒப்பீடாக இலங்கையில் இந்தளவு உயர்ந்த சதவீதத்துக்கு எரிபொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டியதில்லை.

திட்டங்கள் இன்மை, திறனற்ற முகாமைத்துவம், வீண் விரயம், ஊழல் என்பவற்றால் கூட்டுத்தாபனம் நட்டமடைவதாலேயே இவ்வாறு அதிகரித்த விலை உயர்வுகள் மூலம் மக்கள் மீது சுமை இறக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மக்களால் தாங்கிக் கொள்ள முடியாதவாறு எரிபொருட்களின் விலையை உயர்த்திய அரசாங்கம் அதற்கான நியாயப்படுத்தல்களை முன்வைத்து வருவதையும் காண முடிகின்றது.

இதன் காரணமாக பஸ் சேவை புறக்கணிப்பு, ஆர்ப்பாட்டங்கள், மீனவர் சுட்டுக்கொலை என பல சம்பவங்கள் இடம்பெற்று விட்டன. இதுவரை நிலைமை சுமுகமாகவில்லை.

உலக சந்தையில் எரிபொருளின் விலை உயர்வு மற்றும் எரிபொருள் பெறுவதில் சிக்கல், கடன் போன்ற காரணங்களை முன்வைத்தே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்துள்ளதாக அரசாங்கம் கூறினாலும் சிறிய அளவிலேயே உலக சந்தையில் விலை அதிகரித்துள்ளது.

அதற்கு ஒப்பீடாக இலங்கையில் இந்தளவு உயர்ந்த சதவீத்துக்கு எரிபொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டியதில்லை.

தற்போதைய நிலைமையில் மின்சார வசதி இல்லாத கிராமப்புற மக்களும் மற்றும் தோட்டப்புற மக்களும் மீனவர்கள் போன்றவர்களும் மண்ணெண்ணெய் விலை உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வு காரணமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடையவில்லை.

அண்மையில் சிங்கப்பூரிலிருந்து தரமற்ற பெற்றோலை இறக்குமதி செய்தமையினால் கூட்டுத்தாபனத்துக்கு 600 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது. மேலும் அதிகளவான வாகனங்கள் பழுதடைந்தன.

எனினும் 300 பேருக்கு மட்டும் 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. அத்துடன் இதுவரை குறித்த சிங்கப்பூர் நிறுவனத்திடமிருந்து நட்ட ஈடு பெறப்படவுமில்லை.

இவ்வாறு பல வழிகளில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நட்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இலங்கையில் எந்தவொரு எண்ணெய் கிணறும் இல்லாததால் எரிபொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த முடியவில்லை என அரசாங்கம் கூறுகின்றது.

ஆனால், சிங்கப்பூரில் உள்ள பெருந்தெருக்கள் பொருளாதாரம் சுபீட்சம் குறித்து பேசுகின்றது.

சிங்கப்பூரிலும் ஒரு எண்ணெய் கிணறும் இல்லை. ஆனால், உலக எண்ணெய் சந்தையை இயக்கும் ஒரு மத்திய நிலையமாக சிங்கப்பூர் காணப்படுகின்றது.

(அ-2)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 57



ஜப்பானியத் துருப்புகள் பெரும் செலவில் அதிக காலமெடுத்து உருவாக்கிக்கொண்ட மிக முக்கியமான பாலத்தை, அவுஸ்திரேலியர் அழிக்கத் தயாராகின்றனர்-6 மணித்தியாலங்களில் இப் பாலம் தூளாக்கப்பட்டது

அமெரிக்க பசுபிக் கப்பற் படையின் முக்கிய சக்திகள் இருந்த பேர்ல்- ஹார்பரின் தோல்வி, சக்திகளின் சமநிலையை ஜப்பானுக்கு ஆதாயமாக பெரிதும் மாற்றியது. பசுபிக் சமுத்திரத்தின் மேற்குப் பகுதியிலும் தென்கடல்களின் பிரதேசத்திலும் உறுதியான தாக்குதலுக்கு அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது. அமெரிக்கத் தளத்திலிருந்த படைத் தலைமையின் கவனமின்மைதான் பேர்ல்-ஹார்பர் பேரழிவிற்கான முக்கிய காரணம் என்று அமெரிக்க காங்கிரசால் நடத்தப்பட்ட விசாரணை காட்டியது.

பேர்ல்-ஹார்பர் நடவடிக்கையில் ஜப்பானியப்படைத் தலைமை நிலவரத்தை திறமையாக பயன்படுத்தியதும், இதனுடைய உறுதியான, சீரிசைவான நடவடிக்கையும் சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியவைகளாகும். அதேநேரத்தில் ஜப்பானியப்படைத் தலைமை பெரும் தவறுகளையும் செய்தது. உதாரணமாக ஓவாகு தீவின் அருகேயும் நம்பகமாக வேவு பார்க்காததால் அமெரிக்க விமானந்தாங்கி கப்பல்களை ஜப்பானியர்களால் கண்டு பிடிக்க இயலவில்லை. இவற்றில் ஒன்று, பிரதான தளத்திற்கு தென் மேற்கே 210 மைல்களிலும் மற்றது, 700 மைல்களிலும் நின்றது. இதன் விளைவாய் ஜப்பானியர்கள் இந்த விமானந்தாங்கிக் கப்பல்களைத் தாக்காமல் போர்க் கப்பல்களைத் தாக்கினர். இக்கப்பல்களோ அமெரிக்கர்களே கூறும்படி நவீன ஜப்பானிய பெரிய போர்க்கப்பல்களை எதிர்த்துச் சண்டைபோடவும் விரைவாகச் செல்லும் புதிய அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்களோடு கூடச் செல்லவும் இயலாத அளவிக்கு பலவீனமானவையாக இருந்தன.

மேலும் பெருமளவு ஆயுதங்களும் எரிபொருளும் மற்ற சாதனங்களும் சேமித்து வைக்கப்பட்டிருந்த பேர்ல்-ஹார்பரை திரும்பத் தாக்கும் வாய்ப்பை



ஜப்பானியப் படைப்பிரிவின் கொமாண்டர்- ஜெனரல் ஜாம சீட்டா



பிரிட்டிஷ் மலாயா-ஜப்பானியர்கள் வெற்றி கொண்டிருந்தபோது 1941-1942

## 'ஜேர்மனி , ஜப்பான் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு 'மின்னல் வேக யுத்தம்' என்ற ஹிட்லர் போர்த்தந்திரத்தின் தோல்வி



ஜப்பானின் ஜெனரல் ஆதுர் பேர்சிவல் -1942

ஜப்பானியர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இவ்வாறு செய்யப்பட்டிருந்தால் இழப்பை ஈடுகட்ட நீண்டகாலத்தை செலவிட வேண்டியிருந்திருக்கும். இது அமெரிக்க கடற்படை பேர்ல்-ஹார்பரை ஒரு தளமாகப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்தியிருக்கும்.

### மலாயா நடவடிக்கை

இந்நடவடிக்கை ஜப்பானிய இராணுவத்தாலும் கப்பற்படையாலும் 1941 டிசம்பர் 8-க்கும் 1942 பெப்ரவரி 15-க்கும் இடைப்பட்ட காலத்தில் நிறைவேற்றப்பட்டது. வளமிக்க போர்த்தந்திர மூல ஊற்றுகளையுடையதும் பசுபிக் சமுத்திரத்தில் நேசநாடுகளின் போர்த்தந்திர பாதுகாப்புப் பொதுப் போர் முனையில் முக்கிய இடத்தை வகிக்கக் கூடியதுமான பிரிட்டிஷ் மலாயாவைக் கைப்பற்றுவதுதான் இந் நடவடிக்கையின் நோக்கமாகும்.

இந்நடவடிக்கையின்படி எதிரியின் விமானப்படையை ஒடுக்கி, வானில் ஆதிக்கத்தை வெல்லும் நோக்கத்தோடு வடக்கு மலாயாவின் விமானத்தளங்கள்மீது திடீர் விமானத் தாக்குதலகளை தொடுப்பது என்றும், அதேநேரத்தில் பெருங்கடல் இறக்கு படைகளை இறக்கி, மலாயாவின் கிழக்கு மற்றும் மேற்குக் கரையோரமாக தரைப்படைகளின் விரைவான தாக்குதலைத் தொடுத்து சிங்கப்பூரைக் கைப்பற்றுவது என்றும் திட்டமிடப்பட்டது. இந்த நடவடிக்கையின் நிறைவேற்றத்திற்காக ஜெனரல் ஜாமசீட்டாவின் தலைமையில் 70 ஆயிரம் ஆட்களை உடைய 25 ஆவது ஜப்பானியப் படையும் சுமார் 600 போர் விமானங்களைக்கொண்ட மூன்றாவது விமானப்டை யூனிட்டும் 9 குரூசர்களும் 16 நாசகாரிக் கப்பல்களும் 16 நீர் மூழ்கிக் கப்பல்களும் பல போக்குவரத்து மற்றும் துணைப்படகுகளை உள்ளடக்கிய மலாயா இயங்கு கப்பற் படை அமைப்பும் ஒதுக்கப்பட்டன.

பிரிட்டிஷ் மலாயாவை, ஜெனரல் பெர்சிவாலின் தலைமையில் 3 டிவிஷன்கள் மற்றும் தனிப்படைப் பிரிவுகள் மொத்தம் 1 இலட்சம் ஆட்கள் அடங்கிய பிரிட்டிஷ் துருப்புகள் பாதுகாத்தன. ஒரு பெரிய குரூஷர், 3 குரூஷர்கள், 9 நாசகாரிக் கப்பல்கள் சுமார் 250 கரையோர விமானங்களடங்கிய கிழக்குக் கப்பற்படை இவற்றை ஆதரித்தது. கொலண்ட் நீர்மூழ்கிக் கப்பல்களின் ஸ்குவாட்ரனும் ஆங்கிலேயர்களிடம் இருந்தது. இதுபோக, நடவடிக்கையின்போது ஆங்கிலேயர்கள் கூடுதலாக 45 ஆயிரம் ஆட்களையும் 141 விமானங்களையும் சிங்கப்பூருக்கு அனுப்பினர்.

சிங்கப்பூர் கோட்டையில் 406 மி.மீ அளவு வரையிலான பீரங்கிகளும், 5 விமானத்தளங்களும், பெருமளவு போர்க்கலில் இருந்த விமானங்களும் மூடி, மற்றும் சோங்குஹிலா (சின்கோரா) பிரதேசங்களில் ஜப்பானியத் துருப்புகளின் இறக்கம் தொடங்கியது. கரையோரத்தில் ஜப்பானியப்படையிறக்கத்துக்கு பிரிட்டிஷ் தரப்பில்ருந்து பெரிய எதிர்ப்பு பிரின்ஸ்ஆப் வேல்ஸ் போர்க்கப்பல், ரிப்பல்ஸ் பெரிய குரூஷர், 4 நாசகாரிக்கப்பல்கள் அடங்கிய கிழக்கு ஸ்குவாட்ரனை பிரிட்டிஷ் படைத்தலைமை சிங்கப்பூரிலிருந்து சியாம் வளைகுடாவிற்கு அனுப்பியது, எவ்வித பயன்களையும் தரவில்லை. பிரிட்டிஷ் கப்பல்கள் வான் பாதுகாப்பு இன்றி சென்றன. இவற்றைக் கண்டுபிடித்த ஜப்பானியர்கள் டிசம்பர் பத்தாம் திகதி விமானத்தாக்குதலின் மூலம் போர்க் கப்பலையும் பெரிய கூரூசரையும் மூழ்கடித்தனர். இது ஆங்கிலேயர்களின் சக்தியை இன்னமும் பலவீனப்படுத்தியது.

அதே நேரத்தில் மலாயாவின் மேற்கு மற்றும் கிழக்கு கரையோரமாக தாக்குதலைத் தொடர்ந்த 25வது ஜப்பானியப்படை, ஆங்கிலேயர்களின் பலத்த எதிர்ப்பைச் சந்திக்கவில்லை. 1942 ஜனவரி 31ல் ஜப்பானியத் துருப்புகள் பிரிட்டிஷ், மலேயாவின் தென்கோடியிலிருந்த ஜோஹோர்-பாரு இடத்தைக் கைப்பற்றின. பிரிட்டிஷ் மற்றும் மலாயா படைப்பிரிவுகள் சிங்கப்பூருக்கு பின்வாங்கின. ஆனால், இங்கும் இவை நீண்ட நாட்களுக்கு நிலைத்திருக்கவில்லை. பெப்ரவரி 8 இல் ஜப்பானியர்கள் ஜோஹோர் வளைகுடாவைக் கடந்து, சிங்கப்பூரை அடைந்தனர். பெப்ரவரி 15இல் கோட்டையை முற்றிலுமாகப் பிடித்தனர்.


பிரிட்டிஸ் பிளினிய்ம் குண்டு வீச்சு விமானங்கள் சிங்கப்பூரில் ரென்யாவில் அணி வகுத்துள்ளன-1941



மலாயா நடவடிக்கையின் போது ஜப்பானியர்கள், தென்கிழக்கில் ஆங்கிலேயர்களின் மிகப்பலமான படைத்திரட்டை முறியடித்தனர்.

(தொடரும்)

# விண்டோசில் கோப்பறைகளை பல்வேறு வண்ணத்தில் மாற்றுவதற்கு:




விண்டோசில் உள்ள கோப்பறைகளை எளிதில் அடையாளம் கண்டறியும் வகையில் பல்வேறு விதமான வண்ணங்களில் மாற்றலாம்.இதற்கு முதலில் Folder Colorizer என்ற லிங்கில் கிளிக்செய்து 1.28 MB அளவுடைய சிறிய மென்பொருளை உங்கள் கணனியில் தரவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ளவும்.

இதன்பின்னர் Free Activation என்ற விண்டோ வந்தால் உங்கள் மின்னஞ்சலைக் கொடுத்து Register செய்து கொள்ளவும். அங்கு உள்ள டிக்மார்க் எடுத்துவிடவும்.

இதன்பின்னர் நீங்கள் கொடுத்த மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு Verification Link அனுப்புவார்கள். அதை கிளிக் செய்து இந்த மென்பொருளை இலவசமாக அக்டிவேட் செய்து கொள்ளுங்கள். அக்டிவேட் செய்யாவிட்டாலும் இந்த மென்பொருளை உபயோகிக்க முடியும்.

**கோப்பறைகளை வெவ்வேறு நிறங்களில் மாற்ற:**

நீங்கள் நிறத்தை மாற்றவிரும்பும் கோப்பறை மீது ரைட் கிளிக்செய்து Colorize என்பதில் உங்களுக்கு தேவையான நிறத்தை கிளிக்செய்தால் போதும். சில விநாடிகளில் உங்களுடைய கோப்பறை அந்த நிறத்திற்கு மாறிவிடும்.

இதிலுள்ள நிறங்கள் உங்களுக்குப் பிடிக்கவில்லை எனில் Colors என்பதில் கிளிக்செய்து உங்களுக்கு வேண்டிய நிறத்தை நீங்களே உருவாக்கிக் கொள்ளலாம்.

இதுபோன்று உங்களுக்குத் தேவையான நிறத்தைத் தெரிவுசெய்து கோப்பறையில் வைத்து அழகாக மாற்றலாம்.

விண்டோசில் நிறத்தை மாற்றிய கோப்பறைகளை மீண்டும் பழைய வடிவில் கொண்டுவர கோப்பறை மீது ரைட் கிளிக்செய்து Colorize!==> Restore Original Color என்பதைக் கொடுத்தால் பழைய நிறம் திரும்பவும் வந்துவிடும்.

# பேஸ்புக் Timelineஐ தனியான நிரலில் அமைக்க

பிரபல்ய சமூக வலைத்தளமான பேஸ்புக் அண்மையில் தனது பதிய அம்சமான Timeline ஐ அறிமுகப்படுத்தியிருந்தது. இதுவழமையான தோற்றத்திலிருந்து மாறுபட்டுக் காணப்பட்டதுடன் பதிவுகள் Comments என்பன இரு நிரல்களில் அமைந்ததாகவும் காணப்பட்டது.

தற்போது இரு நிரல்களில் காணப்படும் தோற்றத்தினை தனிநிரலாக அமைப்பதற்கு Social Fixer எனும் நீட்சி உதவுகின்றது.

இந்த நீட்சியானது Mozilla Firefox, Google Chrome, Safari போன்ற மென்பொருட்களில் இயங்கக் கூடியதாக காணப்படுவதுடன் Internet Explorer இல் மட்டும் தொழிற்படாதுள்ளது.

**நன்மைகள்**

- செய்திகளை தேர்ந்தெடுக்கக்கூடிய மேலதிக வசதி
- வாசித்த பதிவுகளை மறைக்கும் வசதி
- தீம்களை பயன்படுத்த முடியும்
- பயனரின் தொழிற்பாடுகளை profileஇல் இருந்து தானாகவே நீக்கும் வசதி
- பழைய பதிவுகளை தானாகவே மீட்கும் வசதி போன்றன காணப்படுகின்றமையாகும்.

**Social Fixerமூலம் தனி நிரலுக்கு மாற்றுவது எப்படி?**

* Social Fixer ஐ (http://socialfixer.com/) தரவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ளவும்.




# இரகசியமான தகவல்களை பகிர உதவும் இணையம்

இரகசியமாக தகவல்களை அனுப்புவதற்கு பர்ன் நோட் என்ற இணையதளம் உதவி புரிகிறது.

நீங்கள் யாருக்கு தகவல் அனுப்பி வைக்கிறீர்களோ அவர் மட்டுமே அந்த தகவலை படிக்க கூடிய அளவுக்கு பாதுகாப்பாக செய்திகளை அனுப்புகிறது.


முகப்பு பக்கத்தில் உள்ள பகுதியில் தகவலை டைப் செய்தவுடன் அதற்குரிய இணைப்பு முகவரி ஒன்றை தருகிறது.இந்த முகவரியை யாருக்கு அனுப்பி வைக்கிறோமோ அவர்கள் மட்டும்தான் அதனைப் படிக்கமுடியும். அவர்களும்கூட குறிப்பிட்ட நேரம்வரைதான் படிக்கமுடியும். அதன்பிறகு அந்த தகவல் இணைய வெளியில் மறைந்து விடும்.

தகவலை எத்தனை நொடிகள் பார்க்கலாம் என்பதையும் அதற்கு கடவுச்சொல் தேவையா என்பதை கூட அனுப்புகின்றவரோ தெரிவு செய்து கொள்ளலாம். கடவுச்சொல் பாதுகாப்பு உறுப்பினர்களுக்கு மட்டும் தான்.ஆனால் தகவல் அனுப்ப உறுப்பினராக வேண்டும் என்ற நிபந்தனையில்லை.

எந்த தகவலையும் ஒரே ஒருமுறை மட்டுமே படிக்க முடியும்.உறுப்பினராக இருந்தால் தகவல் படிக்கப்பட்டு விட்டதா என்னும் பதிலை தெரிந்து கொள்ளும் வசதியும் உண்டு.இரகசிய தகவலை யாரும் நகலெடுக்கவோ அல்லது அந்த இணைய பக்கத்தையோ மொத்தமாக ஸ்கிரீன்ஷாட் போல சேமிப்பதோ சாத்தியமில்லை என்றும் இந்த தளம் உறுதி அளிக்கிறது.

இந்த தகவலுக்கான பக்கத்தை பார்த்து கொண்டிருக்கும் போதே வேறு ஒரு தளத்திற்கு சென்று விட்டு திரும்பி வந்தாலும் அந்த பக்கம் காலியாக தான் இருக்கும்.யாருக்கு அனுப்பப்பட்டதோ அவரால் தகவல் பார்க்கப்படவில்லை என்றாலும் 72 மணி நேரத்தில் தகவல் தானாக மறைந்து விடும்.

# வன்தட்டில் ஏற்படும் பிரச்சினைகளை சரிசெய்ய...




அதிகநாட்களாக பயன்படுத்தப்படும் வன்தட்டுக்களில் பலவிதமான கோளாறுச் செய்திகள் காணப்படும். விண்டோஸ் நிறுவப்பட்டுள்ள கணனியில் இதுபோன்ற கோளாறுச் செய்திகள் அதிகமாகக் காணப்படும். வன்தட்டில் மென்பொருட்களை நிறுவி பயன்படுத்துவோம்.

தேவையில்லையெனில் மென்பொருட்களை நம்முடைய கணனியில் இருந்து நீக்கிவிடுவோம். கணனியில் இருந்து நீக்கப்படும் மென்பொருளானது முழுமையாக நம்முடைய கணனியை விட்டுநீங்காது. மேலும் ஒரு சில பைல்கள் நம்முடைய கணனியிலேயே தங்கிவிடும். அந்த பைல்களால் நம்முடைய கணனியில் அடிக்கடி எரர் (Error) செய்தி காட்டும். வன்தட்டில் மென்பொருட்களை நிறுவும் போது செக்டர் பகுதிகளாகவே சேமிக்கப்படும்.

மென்பொருட்களை நீக்கும்போது குறிப்பிட்ட பகுதி மட்டும் வெற்றிடமாக்கப்படும். இந்த பகுதிகளில் மீண்டும் தகவல் பதியப்படும் முழுமையாக இல்லை. குறிப்பிட்ட பகுதியில் மட்டும் ஏனையவைகள் வழக்கம்போல காலியாக உள்ள இடத்தில் பதியப்படும். இதனால் வன்தட்டில் எரர் செய்தி வருவதோடு கணனி தொடக்கமும் மந்தமாகும். இதுபோன்ற எரர் செய்திகளை சரிசெய்ய ஒரு மென்பொருள் உதவிசெய்கிறது.

# மென்பொருளை தரவிறக்க சுட்டி

இந்த மென்பொருளை இணையத்தின் உதவியுடன் பதிவிறக்கி கணனியில் நிறுவிக் கொள்ளவும். பின் இந்த அப்ளிகேஷனை ஓபின் செய்து வேண்டிய ட்ரைவ் கோலனை தெரிவு செய்து Read only பொத்தானை அழுத்தி சோதனை செய்து கொண்டு எரர் செய்தி இருப்பின் Fix பொத்தானை அழுத்தவும்.

எரர் செய்திகளை நீக்கம் செய்ய வேண்டுமெனில் Fix and Recover பொத்தானை அழுத்தி இந்த எரர் செய்திகளை மீட்டுக்கொள்ள முடியும். பின் கணனியை மறுதொடக்கம் (Restart) செய்துகொள்ளவேண்டும். இந்த மென்பொருளானது இலவச மென்பொருள் ஆகும். விண்டோஸ் 7 ஒப்பரேட்டிங் சிஸ்டத்திற்கு இந்த மென்பொருள் சிறந்தது ஆகும். வன்தட்டினை சீரமைக்க இந்த மென்பொருள் சிறந்தது ஆகும்.

## ஜிமெயிலில் Schedule வசதியை கொண்டு வர:

முதலில் இந்த *Right Inbox* தளத்திற்கு செல்லுங்கள். எங்களுடைய இணைய உலாவி *(Firefox3.6+Chrome 5.0+)* புது பதிப்பாக இருப்பது நல்லது.
*Right Inbox* தளத்தில் உள்ள *Install Now* என்ற பட்டனை அழுத்தி இந்த நீட்சியை தரவிறக்கம் செய்து உங்கள் கணனியில் நிறுவிக்கொள்ளுங்கள்.
இப்பொழுது ஜிமெயிலை ஓபன் செய்யுங்கள்.ஏற்கனவே ஓபன் செய்து இருந்தால் *Refresh* செய்யவும். அடுத்து கீழே உள்ள படங்களில் உள்ளது போல் தொடருங்கள்.
அவ்வளவு தான் .உங்களுடைய ஜிமெயிலில் இந்த *Schedule* வசதி அக்டிவேட் ஆகி விடும்.

## *Schedule* வசதியை உபயோகிப்பது எப்படி:

எப்பொழுதும் மின்னஞ்சல் அனுப்புவது போல *Compose* பட்டனை அழுத்தி உங்கள் செய்தி மற்றும் அனுப்புநர் விபரங்களை கொடுத்த பின்னர் *Send* பட்டனுக்கு பக்கத்தில் *Send Later* என்ற புதிய பட்டன் இருப்பதைக் காண்பீர்கள். அதனை கிளிக் செய்யவும்.

அதில் உங்கள் மின்னஞ்சலை அனுப்ப குறிப்பிட்ட சில நேரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் .அதில் உங்களுக்கு தேவையானதை கிளிக் செய்து கொள்ளுங்கள் அல்லது உங்களுக்கு தேவையான நேரம் அந்த பட்டியலில் இல்லை என்றால் கடைசியில் உள்ள *at a Specific Time* என்பதை கிளிக் செய்து உங்கள் மின்னஞ்சல் செல்ல வேண்டிய நேரம் மற்றும் திகதியை தெரிவு செய்து கொள்ளவும்.

சரியாக நேரம் *Set* செய்தவுடன் கீழே உள்ள *Schedule* பட்டனை கிளிக் செய்து விட்டால் போதும். குறிப்பிட்ட நேரத்திற்கு உங்களுடைய மின்னஞ்சல் அவர்களுக்கு சென்று விடும்.

## *Right Inbox*: தானியங்கியாகவே ஜிமெயிலில் மின்னஞ்சல்களை அனுப்ப


சில நேரங்களில் குறிப்பிட்ட நேரத்திற்கு மின்னஞ்சல் அனுப்ப வேண்டி இருக்கும்.அதற்கு வசதியாக ஜிமெயிலில் மின்னஞ்சல்களை *Schedule* செய்து வைத்து அனுப்பலாம்.



# சிறுவர் அரங்கம் 27

## கிழவிக்கு நன்றி

பாலூரிலிருந்து புறப்பட்ட இளைஞன் புருஷோத்தமன் மருதூரை அடைந்த போது நன்கு இருட்டி விட்டது.



அன்றைய இரவை எங்கே கழிப்பது என யோசித்த போது ஒரு சிறு வீட்டைக் கண்டு அதன் கதவைத் தட்டினான்.


சில நிமிடங்களுக்கு பின்பே கதவைத் திறந்து கொண்டு ஒரு கிழவி வெளியே வந்தாள். அவளைப் பார்த்த அவன் பாட்டி நான் "பாலூரிலிருந்து ஏதாவது வேலை கிடைக்குமா என்று இந்த ஊருக்கு வந்திருக்கிறேன். மிகவும் பசியாக இருக்கிறது" என்றான். கிழவியும் அவனை ஏற இறங்க பார்த்து விட்டு "சரி உள்ளே வா" என்றாள். அவனும் உள்ளே போனதும் கிழவி ஒரு தட்டில் உணவை வைத்து அவனிடம் கொடுத்தாள்.

அவனும் அதைச் சாப்பிட்டு விட்டு "பாட்டி இன்றிரவு இங்கே இருந்து விட்டு நாளை காலையில் போய் விடுகிறேன். வீட்டில் வேறு யாரும் இல்லையா?" என்று கேட்டான். கிழவியும் என் மகனும் மருமகளும் வெளியூருக்கு போயிருக்கிறார்கள். நாளைக்கு தான் வருவார்கள் என்றாள். அவனும் "சரி நான் இங்கே ஓரமாக படுத்துக் கொள்கிறேன்" என்று சொல்லி தன் மேல் துண்டை விரித்துப் படுத்தான். ஆனால் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. அப்போது கிழவி அங்கிருந்த பீரோவைத் திறந்து நகைப் பெட்டியை எடுத்து பார்த்து விட்டு மீண்டும் அதற்குள் வைத்து பீரோவை பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு போவதையும் அவள் அதைத் தன் தலையணைக்கு அடியில் வைத்துக் கொண்டு படுத்துவிட்டதையும் அவன் கவனித்தான்.

அப்போது அவன் மனம் அந்த நகைப் பெட்டியை திருடிக் கொண்டு போய் விட எண்ணியது. இச்சமயத்தில் யாரோ இருவர் ஜன்னலருகே நின்று தாழ்ந்த குரலில் பேசுவதை அவன் கேட்டான். அவர்களில் ஒருவன் " கிழவி நகைகளை எல்லாம் நகைப் பெட்டியில் வைத்து பீரோவில் வைத்திருக்கிறாள். பீரோ சாவி அவளிடம் இருக்கிறது. அவளை அடித்துப் போட்டு விட்டு சாவியை எடுத்து பீரோவை திறந்து நகைப்பெட்டியை எடுத்துக் கொண்டு ஓடிவிடலாம்" என்றான்.

அதைக் கேட்ட புருஷோத்தமன் மனம் கிழவியை திருடர்களிடம் இருந்து காப்பாற்ற வேண்டும் என எண்ணியது. எனவே மெதுவாக எழுந்து கிழவியருகே போய் அவளை எழுப்பினான். அவளிடம் திருடர்கள் இருவர் திருட வரப் போவதைக் கூறி என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொன்னான்.

அதன்படி அவன் வாசல் கதவை



திறந்து கிழவியுடன் வீதிக்கு வந்து நடந்து சென்றான். கதவு திறந்து கிடப்பதை கண்டு திருடர்கள் மகிழ்ந்து போய் அந்த வீட்டிற்குள் சென்றார்கள்.

புருஷோத்தமன் உடனே ஓடி வந்து வாசல் கதவை மூடி வெளிப்புறம் தாளிட்டான். திருடர்கள் வீட்டினுள் அடைபட்டு விட்டார்கள். கிழவி 'திருடன் திருடன்!' எனக் கூவவே அக்கம் பக்கத்தவர்கள் ஓடி வந்தார்கள். அவர்கள் வாசல் கதவைத் திறந்து கொண்டு 'திபுதிபு' வென்று உள்ளே நுழைந்து திருடர்களைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் காவலதிகாரியிடம் ஒப்படைத்தார்கள்.


அப்போது புருஷோத்தமன் கிழவியிடம் "பாட்டி திருடர்கள் வருமுன் உன் நகைகளைத் திருட நானே எண்ணினேன். ஆனால் திருடர்கள் உன்னை அடிக்கப்போவதாக கூறியதும் என் மனதை மாற்றி விட்டது" என்றான். கிழவியும் பரிவுடன் அவன் முதுகை தடவி "தம்பி நீ மனம் மாறி எனக்கு உதவி செய்தாய். மனம் மாறிய நீ நல்லவனே. என் மகனின் வயலில் நீ வேலை செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

வேலைக்காக நீ இனி அலைய வேண்டாம்" என்றாள். இளைஞன் ஆனந்தக் கண்ணீர் வடித்து கிழவிக்கு நன்றி செலுத்தினான்.

## அம்புலி மாமா கதைகள்

## யார் தகுந்தவன்?

கந்தனூரில் கந்தநாதன் என்பவர் பணக்கார வியாபாரி. அவர் தமக்கு வயதாகிவிட்டதால் தன் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தும் பொறுப்பைத் தம் மூன்று மகன்களில் யாரிடம் ஒப்படைப்பது என்று யோசித்தார். அதற்கு ஒரு வழியும் அவருக்கு தோன்றியது.



அதன்படி அவர் தம் மூன்று மகன்களையும் அழைத்து "எனக்கோ வயதாகி விட்டது. உங்கள் மூவரில் ஒருவனிடம் என் வியாபாரத்தை ஒப்படைக்க நினைக்கிறேன். அந்தப் பொறுப்பை ஏற்கத் தகுந்தவன் யார் என்பதை அறிய உங்களுக்கு ஒரு சிறு பரீட்சை வைக்கப் போகிறேன். அதன் முடிவை கண்டே என் வியாபாரத்தையும் சொத்துக்களையும் நிர்வகிக்கும் பொறுப்பை அவனிடம் ஒப்படைப்பேன்" என்றார். அது கேட்டு மூன்று மகன்களும் தம் சம்மதத்தை தெரிவித்தார்கள்.


அப்போது கந்தநாதன் தம் சட்டைப் பையில் இருந்து மூன்று ரூபாய் நாணயங்களை எடுத்து அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு ரூபாய் வீதம் கொடுத்தார்.

பின்பு அவர் "உங்களிடம் உள்ள ஒரு ரூபாயைக் கொண்டு இன்று மாலைக்குள் ஒரு நல்ல வேலையைச் செய்துவிட்டு வரவேண்டும்" என் கூறி அவர்களை அனுப்பினார்.

மாலைப்பொழுது வந்தது. கந்தநாதனின் மூன்று மகன்களும் வந்து விட்டார்கள். அவரும் தன் மூத்த மகனைத் தம் அருகே அழைத்து "நான் கொடுத்த ஒரு ரூபாயைக் கொண்டு என்ன நல்ல வேலையைச் செய்தாய்?" என்று கேட்டார். அவனும் "நம் ஊர் கோயில் வாசலில் ஒரு கிழவி பசியால் துடிதுடிப்பதைக் கண்டேன். நீங்கள் கொடுத்த ஒரு ரூபாயை அவளுக்குக் கொடுத்து ஏதாவது வாங்கிச் சாப்பிடச் சொன்னேன்" என்றான்.

அடுத்து அவர் தம் இரண்டாவது மகனை அழைக்கவே அவனும் "நான் நம்மூர் கோயிலுக்குள் போய் அர்ச்சகரிடம் நம் வியாபாரம் நன்கு நடைபெற அர்ச்சனை செய்யுமாறு கூறினேன். நான் நீங்கள் கொடுத்த ஒரு ரூபாயை அந்த அர்ச்சகரிடம் கொடுத்தேன்" என்றான்.

கந்தநாதன் தம் மூன்றாவது மகனைப் பார்க்க அவனோ ஒரு ரூபாயை எடுத்து அவரிடம் கொடுத்தான். அவரும் "என்ன இது? நான் கொடுத்த ஒரு ரூபாயை நீ எவ்விதத்திலும் செலவு செய்யவில்லையா?" என்று கேட்டார். அவனும் "பணத்தை வீணாகச் செலவு செய்வதை நீங்கள் விரும்பமாட்டீர்கள்



என்பதை நான் அறிவேன்.

ஆனாலும் ஒரு ரூபாயைச் செலவழித்து ஒரு நல்ல வேலையைச் செய்தேன்" அதைக் கேட்ட கந்தநாதன் திகைத்துப் போனார்.

அப்போது அவன் "ஆச்சரியப் படுகிறீர்களா? நீங்கள் கொடுத்த ஒரு ரூபாயில் மூன்று பூசணிக்காய்களை வாங்கி அவற்றை வேறொரு இடத்தில் மிக அருமையான பூசணிகள் எனக் கூறி இரண்டு ரூபாய்க்கு விற்றேன். அதில் ஒரு ரூபாயை எடுத்து அரை ரூபாய்க்கு தயிர் சாதம் வாங்கி பசியால் வாடும் ஒரு சிறுவனுக்கு கொடுத்து அவனது பசியைப் போக்கினேன். மீதி அரை ரூபாயை கோயில் உண்டியலில் போட்டேன். இப்படி ஒரு ரூபாயில் நல்லவேலையைச் செய்து மீதி ஒரு ரூபாயை கொண்டு வந்திருக்கிறேன்" என்றான்.

தன் மூன்றாவது மகனின் வியாபார சாமார்த்தியத்தையும் சேமித்து வைக்கும் குணத்தைக் கண்டு கந்தநாதன் மகிழ்ந்து அவனிடமே தம் வியாபாரத்தையும் சொத்துக்களையும் ஒப்படைத்தார்.

# குடிசன மதிப்பீடு குறித்து விழிப்பூட்டும் ஊர்வலம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் 14 பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியக்குழுவினர் கலந்து கொண்ட குடிசன , வீட்டு வசதிகள் தொகை மதிப்பு தொடர்பாக விழிப்பூட்டும் ஊர்வலம் நேற்றுமுன்திம் காலை மன்னாரில் இடம்பெற்றது.

குறித்த ஊர்வலத்தின் போது 14 பாடசாலைகளின் பாண்ட் வாத்தியக் குழுவினரின் பாண்ட் இசை முழங்க ஊர்வலமாக சென்றனர். இதன் போது குடிசன, வீட்டு வசதிகள் தொகை மதிப்பு பணி அதிகாரிகள் ஒலி பெருக்கி மூலம் பதிவுகளை மேற்கொள்வது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தினர்.

அத்துடன் 500 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். இப்பவனியில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ்.மேகநாதன், மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக பணி யாளர்கள், கிராம அலுவலர்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (அ-2)

# ஜனாதிபதியின் சிறந்த ஆட்சியை மக்களின் பேரணிகள் காட்டுகின்றன

## பதில் அமைச்சர் அப்துல் கூறுகிறார்

(கொழும்பு)

ஜெனீவா மனித உரிமை பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டு கொண்டு வரப்படுவதற்கு இந்நாட்டில் வாழு கின்ற சகல இன, மத மக்களும் வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பேதம் பாராமல் ஒன்றுபட்டு கடு மையாக எதிர்பார்ப்பதாக பதில் சுற்றாடல் அமைச்சர் ஏ.ஆர். எம். அப்துல்காதர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அச்சம், பீதியின்றி அமைதியாகவும் சமாதானமாகவும் எமது மக்கள் ஒன்றுபட்டு வாழ் வதைப் பொறுத்துக் கொள்ள முடி யாத சக்திகளே இலங்கைக்கு எதி ராக பொய்க்குற்றச்சாட்டை சுமத்த முயற்சிப்பதாகவும் அவர் குறிப் பட்டுள்ளார். பதிலமைச்சர் ஏ.ஆர். எம்.ஏ. அப்துல்காதர் ஊடகவிய லாளர் சந்திப்பொன்றை அண்மை யில் நடத்தினார். இச்சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறுகையில்,

எமது ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ நாட்டை பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து விடுவித்து அச்சம் பீதியின்றி அமைதியாகவும் ஒற்று மையாகவும் வாழக்கூடிய சூழலை ஏற்படுத்தி தந்து இருக்கின்றார். அத் தோடு நாட்டை துரித அபிவிருத்தி பாதையிலும் அவர் இட்டுச் செல் லுகின்றார்.


இதனை பொறுத்துக் கொள்ள முடியாத அமெரிக்கா இலங்கைக்கு எதிராக பொய்க்குற்றச்சாட்டுக் களை சுமத்துகின்றது.

இக்குற்றச்சாட்டை இந்நாட்டில் வாழுகின்ற தமிழ்,சிங்கள, முஸ்லிம் மக்கள் இன, மத, மொழி, பிரதேச, மாகாண பேதம் பாராமல் ஒன்று சேர்ந்து எதிர்க்கின்றார்கள். இந்த எதிர்ப்பே கடந்த திங்களன்று வெளி ப்பட்டது. இதனை மேற்குலக நாடு கள் உணர்ந்து கொள்வது மிக அவ சியம்.

இந்த சந்திப்பில் எமது மக்கள் சகலரும் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ அவர்களுடன் ஒன்றுபட்டுள் ளார்கள். சகலருமே தேசப்பற்றுடன் செயற்படுகின்றனர். வெளிநாட்ட வரின் தலையீடு எமது நாட்டுக்குள் வரக்கூடாது என்பதில் எமது மக்கள் தெளிவான நிலைப்பாட்டில் உள் ளார்கள் என்றார். (அ-2)

# புலிகளின் எதிர்கால நடவடிக்கைக்கு அவுஸ்திரேலிய தமிழர்கள் நிதியுதவி

## திஸர சமரசிங்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக புலம்பெயர் அவுஸ்திரேலியாவில் குடியேறியுள்ளோரில் ஒரு தொகுதி தமிழர்கள் நிதி உதவி செய்து வருவதாக அவுஸ்திரேலியாவுக் கான இலங்கையின் உயர்ஸ்தானி கர் அட்மிரல் திஸர சமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

அட்மிரல் திஸர சமரசிங்க அவுஸ்திரேலிய வானொலி ஒன் றுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றி லேயே மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

புலம்பெயர் நாடுகளில் மொத் தமாக சுமார் 8 இலட்சம் இலங் கைத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் கிழமைக்கு தலா ஒரு டொலர் சேக ரிக்கப்படுவதாக வைத்துக் கொள் வோம்.

இதன் அடிப்படையில் பார்த் தால் ஒருவரிடமிருந்து 52 டொலர்கள் ஒரு ஆண்டுக்கு சேர்க் கப்படுகின்றது.

அதன் படி 8 இலட்சம் பேரிடம் ஆண்டுக்கு சேர்க்கப்படுவது மிகப் பெரிய தொகை. இது புலிகளுக்கு கிடைக்கின்றமை வெளிப்படையாக தெரிகிறது.

எனினும் இப்பணத்தில் இருந்து ஒரு சதம் கூட இலங்கை யில் இடம்பெறுகின்ற மீள்குடி யேற்ற நடவடிக்கைக்கு கிடைக்கப் போவது இல்லை என்பது திண் ணம் என அட்மிரல் திஸர சமரசிங்க தெரிவித்தார். (அ-2)

# ஆணைக்குழு நியமிக்கப்பட்டமைக்கு இலங்கையைப் பாராட்டுகின்றோம்

## தென்னாபிரிக்கா புகழாரம்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதி பதி ஆணைக்குழு நியமிக்கப்பட் டமை தொடர்பாக இலங்கை அரசாங் கத்தை தாம் பாராட்டுவதாக தென் னாபிரிக்க அரசாங்கத்தின் வெளி விவகார பிரதியமைச்சர் மேரியஸ் பிரான்ஸ்மன் தெரிவித்துள்ளார்.

19 ஆவது மனித உரிமை பேர வையின் கூட்டத் தொடரில் உரை யாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு வின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த இலங்கை அரசாங்கம் மேற் கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் தாம் மகிழ்ச்சியடைவ தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்ட த்தில் உரையாற்றிய டென்மார்க் வெளிவிவகார அமைச்சர் விலி சோவன்டால் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை செயற்ப டுத்த ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கையை அக்கறைப்படுத்த வேண்டும் என தெரிவித்துள் ளார். (அ-2)

# அன்பீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## மனமாற்றம் மூலம் புது வாழ்வைப்பெறுவோம்



" பழைய மனிதருக்குரிய இயல்பை களைந்துவிடுங்கள். உங்கள் மனப்பாங்கு புதுப்பிக்கப்பட வேண்டும்" (எபே 4:22-23)

மனமாற்றம் என்பது ஒரு பயணம். அது இருளிலிருந்து ஒளியை நோக்கிய பாவத்திலிருந்து புனிதத்தை நோக்கி சாவிலிருந்து வாழ்வை நோக்கிய வெறுப்பிலிருந்து அன்பை நோக்கிய ஒரு முடிவில்லாப் பயணம். மனிதன் புனிதனாக வாழவேண்டு மென்பதே மனிதனை உண்டாக்கிய இறைவனின் தணியாத விருப்பமாக இருந்தது. தனது விருப்பம் நிறைவேற பல்வேறுபட்ட வரலாற்று நிகழ்வுகளினூடாக, அறிகுறிகளூடாக, வெளிப்படுத்தல்களினூடாக, மனிதர்களினூடாகப் இறைவன் மனிதனுடன் பேசினார். தனது திட்டத்தையும் விருப்பத்தையும் மனிதனுக்கு தெளிவுபடுத்தினார். ஆனால் இறைவன் எதிர்பார்த்த பதில் மனிதனிடமிருந்து கிடைக்கவில்லை.

மனிதனில் உண்மையான அன்பு கொண்ட இறைவன் தன்னுடைய மகன் கிறிஸ்து மூலம் தனது செய்தியை மனிதனுக்கு வெளிப்படுத்த அவரை இவ்வுலகிற்கு அனுப்பினார்.

மண்ணிற்கு வந்த இறைமகன் காலம் நெருங்கியபோது அந்த மாபெரும் செய்தியை உலகிற்கு வெளிப்படுத்தினார். " மனம் மாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கிவிட்டது." (மத் 4:17)

அருட் சகோதரர்
றமேஸ் அ.ம.தி

தனது பணியின் தொடக்கத்திலேயே மனமாற்றத்திற்கு அழைத்த இயேசு அதற்கான பதிலை எதிர்பார்க்கப்பட்டவர்களிடமிருந்து பெறமுடியவில்லை. காரணம் அவர்கள் இவ்வுலகை அதிகமாகப் பற்றிக்கொண்டிருந்தார்கள்.இன்று நாங்கள் வாழும் எம்முடைய சமுதாயத்தை ஒத்தவொரு சமுதாயமே இயேசுவினுடைய காலத்திலும் காணப்பட்டது.

அதாவது மனிதரிடையே சமத்துவம் இல்லை. நேர்மையும் உண்மையும் மறைந்துபோயின. சமய வழிபாடுகளில் பகட்டும் வெளிவேடமும் மேலோங்கிக் காணப்பட்டன. பிறரன்பும் மன்னிப்பும் இல்லாத அவலநிலை. இதனால் வாழ்வில் துன்பங்களையும் வேதனைகளையும் இழப்புக்களையும் பிரிவுகளையுமே நாம் நாளும் சந்திக்கின்றோம். எமது வாழ்வில் அமைதியில்லை. உள்ளத்தில் மகிழ்ச்சியில்லை. நெஞ்சிலே நிம்மதியில்லை. இதில் இருந்து நாங்கள் விடுபட வேண்டுமெனில், வாழ்வைக் காணவேண்டுமெனில் இயேசுவின் மன மாற்றத்துக்கான அழைப்புக்கு நாம் செவிமடுக்க வேண்டும்.

# நாட்டைவிருத்திசெய்ய இராணுவம் ஒத்துழைக்கும்

## ஜகத் ஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிக்க வழங்கிய ஒத்துழைப்பைப் போன்றே நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் இராணுவம் பூரண ஒத்துழைப்பை வழங்கும் என இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய அறி வித்துள்ளார்.

நாட்டின் சுபீட்சத்திற்காக என்றென்றும் பாடுபட இராணுவத்தினர் தயார் எனவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயங்கரவாதம் மீண்டும் தலை தூக்குவதற்கு அனுமதியளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சும் பரிபூரண ஆதரவளித்து வருகின்றது என இராணுவ தளபதி தெரிவித்துள்ளார். (அ-2)

# யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

கல்தேவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நேம்பஹா, கந்தேகமையைச் சேர்ந்த ஆர்.பி உபாலி பண்டார என்ற நான்கு பிள்ளைகளின் தந்தை யானையின் தாக்குதலுக்குள்ளாகி மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 28 ஆம் திகதி அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவர் தனது வயலில் இருந்து வீடு நோக்கி காட்டுப்பாதையில் சென்று கொண்டிருக்கும் போது யானை இவரை தாக்கியுள்ளது.

யானை தாக்கி காயமடைந்த இவர் நேகம்பஹா் வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியில் மரணமடைந்துள்ளார். இவர் கல்நேவ மிருக வளர்ப்பு திணைக்கள காரியாலயத்தில் சிற்றூழியராக கடமை புரிபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கியூபா ஓவிய கண்காட்சியில் பங்குபற்ற இலங்கை கலைஞர்களுக்கும் வாய்ப்பு

கியூபா ஹவானா நகரில் உலக நாடுகளின் பங்குபற்றுதலுடன் ஹவானா பெனாயில் ஓவிய கண் காட்சி 2012 எதிர்வரும் மே மாதம் 11 தொடக்கம் ஜூன் 11 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த ஓவியர் களுக்கும் இக்கண்காட்சியில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பை கலா சார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலுடன் கலா சார அலுவல்கள் திணைக்களம் வழங்கியுள்ளது.

இவ் ஓவியக் கண்காட்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தமக்கு பிடித்த தலைப்பில் ஓவியம் ஒன்றை மட்டும் வரைந்து அதனை குறுந் தகட்டில் பதிவுசெய்து பெயர், விலா சம். தொலைபேசி இலக்கம், மின் னஞ்சல் முகவரி, வரையப்பட்ட ஓவியத்தின் பெயர் என்பவற்றை குறிப்பிட்டு நிரப்பப்பட்ட விண் ணப்பப்படிவத்துடன் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் னர் செயலாளர் ஓவியம் மற்றும் சிற்ப குழு கலாசார அலுவல்கள் திணைக்களம் 8 ஆம் மாடி செத் சிறிபாய பத்தரமுல்ல எனும் முக வரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

இப்போட்டி திறந்த மட்டத்தில் நடைபெறுகிறது. கடந்த வருடம் இடம் பெற்ற மேற்படி கண்காட் சியில் இலங்கையைச் சேர்ந்த 3 கலைஞர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# எம்.பி.பதவியை பறிக்க முடியாது

## நீதிமன்றம் தடை உத்தரவு

(கொழும்பு)

பதவியில் இருந்து நீக்க ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துள்ள தீர்மா னத்தை தடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிரந்தர தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவியில் இரு ந்து நீக்க ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துள்ள தீர்மானத்தை தடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிரந்தர தடை உத்தரவை பிறப்பித் துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மா னத்திற்கு எதிராக ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பி னர்கள் தாக்கல் செய்திருந்த மனுவை விரிவாக ஆராய்ந்த பின்னர் மாவ ட்ட நீதிமன்றம் இந்த தடையுத்த ரவை பிறப்பித்துள்ளது.

அரசாங்கத்தின் 18 ஆவது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஆதரவாக தாம் நாடாளுமன்றத்தில் வாக்களித்திருந்ததாக மனுதாரர்கள் கூறியுள்ளனர். இதன் பின்னர் எந்த விசாரணைகளும் இன்றி ஐக்கிய தேசியக் கட்சி தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறிக்க தயா ராகி வந்ததாகவும் அப்படியான தீர் மானத்தை எடுக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு சட்டரீதியான அதிகாரங்கள் இல்லை எனவும் மனுதாரர்கள் சுட் டிக்காட்டியுள்ளனர்.

இந்த விடயத்தை விரிவாக ஆராய்ந்த கொழும்பு மாவட்ட நீதி மன்ற மனு மீதான விசாரணை முடி யும் வரை சம்பந்தப்பட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களின் பதவிகள் பறிக்கப்படக் கூடாது என்ற தடையுத் தரவை பிறப்பித்துள்ளது. (அ-2)

# மன்னார் சந்தையில் தீ விபத்து; 35 வர்த்தக நிலையங்கள் தீக்கிரை

மன்னார் வாரச்சந்தைப் பகுதி யில் நேற்று அதிகாலை ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் அங்குள்ள 35 வர்த் தக நிலையங்கள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வாரச்சந்தையில் காணப்பட்ட ஆடை விற்பனை நிலையங்கள் அதிகமாக எரிந்து சாம்பலாகியுள் ளதாக அவர் தெரிவித்துள்ளார். எனி னும் இத் தீவிபத்திற்கான காரணம் கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரி வித்துள்ளார்.

தீ விபத்து தற்போது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள் ளதாகவும் இதனால் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் இதுவரை கணிப் பிடப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும் இத் தீவிபத்தினால் அப்பகுதியிலுள்ள எவருக்கும் காயங்களோ உயிரா பத்தோ ஏற்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள் ளார். (அ-2)

# ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கல்விப்பாட செயலமர்வு. எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மாங்குளம் ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

ஆரம்பக்கல்வி உள்ள பாடசாலைகளில் இருந்து விசேட கல்வி ஆசி ரியர்கள் இச் செயலமர்விற்கு தவறாது கலந்து கொள்ள வேண்டும். அவ்வாறு விசேட கல்வி ஆசிரியர்கள் இல்லாதவிடத்து ஆரம்பக்கல்வி ஆசிரியரை.இச்செயலமர்வில் பங்குபற்ற ஆவன செய்யுமாறு அனைத் துப் பாடசாலை அதிபர்களுக்கும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.(அ-3-15)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.03 02

★ 986- பிரான்சின் மன்னனாக ஐந்தாம் லூயி முடிசூடினான்.

★ 1807-அடிமைகளை நாட்டுக்குள் கொண்டு வருவதை தடை செய் யும் சட்டமூலம் அமெரிக்க காங் கிரசில் கொண்டுவரப்பட்டது.

★ 1815-கண்டி ஒப்பந்தம் என வழங்கப் படும் ஒப்பந்தத்தின் மூலம் கண்டி இராச்சியம் பிரித்தானிய ருக்கு கொடுக்கப்பட்டது.சிறை பிடிக்கப்பட்ட விக்கிரமராஜ சிங்கன் என்ற கண்ணுச்சாமி தென்னிந்தியாவில் உள்ள வேலூர் கோட்டைக்கு அனுப்பப் பட்டான்

★ 1823-தமிழ் நாடு, ஸ்ரீபெரும்புதூரில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

★ 1836-டெக்சாஸ் குடியரசு மெக்சிக் கோவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1855-இரண்டாம் அலெக்சாண்டர் ரஷ்யாவின் சார் மன்னனாக முடிசூடினான்.

★ 1896-எதியோப்பியா ஆட்வா என்ற இடத்தில் வைத்து இத்தாலியைத் தோற்கடித்தது. ஓர் ஆபிரிக்க நாடொன்றினால் காலனித்துவ நாடொன்றின் படைகள் தோற்க டிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

★ 1917-புவேர்ட்டோ ரிக்கன்களுக்கு ஐக்கிய அமெரிக்கக் குடியுரிமை வழங்கப்பட்டது.

★ 1919-அனைத்துலக கம்யூனிட்டுக்கள் முதற்தடவையாக மொஸ்கோவி கூடினர்.

★ 1930-மகாத்மா காந்தி உப்புச் சத்தியாக் கிரகம் ஆரம்பிப்பதற்காக அகம தாபாத்திலிருந்து குஜராத் கட லோரத்தில் இருந்த தண்டி நோக்கி 240 மைல் நடை பயணத்தை தொடங்கினார்.

★ 1935-சியாம் மன்ன பிரஜாதிபோக் (எழாவது ராமா) முடி துறந்த தையடுத்து அவரது 9 வயது மருமகன் ஆனந்தமகிடோல் (எட்டாவது ராமா)மன்னரானார்.

★ 1941-இரண்டாம் உலகப்போர் முத லாவது ஜேர்மனியப் படைகள் பல்கேரியாவினுள் நுழைந்தன.

★ 1943-இரண்டாம் உலகப் போர் பிஸ்மார்க் கடல் சமரின் போது அமெரிக்க மற்றும் அவுஸ்திரே லியப் படைகள் ஜப்பானியக் கப்பல்களை தாக்கி மூழ்கடித் தன.

★ 1946-ஹோசிமின் வட வியட்நாமின் ஜனாதிபதியானார்.

★ 1956-மொரேக்கோ பிரான்சிடம் இருந்து விடுதலை அறிவித்தது.

★ 1958-தி.மு.க. மாநில கட்சியாக அங்கீ கரிக்கப்பட்டது.

★ 1962-பர்மாவில் இராணுவ ஜெனரல் நெ.வின்(Ne Win) இராணு வப் புரட்சி மூலம் ஆட்சி யைக் கைப்பற்றினார்.

★ 1970-ரொடீசியா பிரித்தானியாவிடம் இருந்த பிணைப்பைத் துண் டித்து தன்னைக் குடியரசாக அறிவித்தது.

★ 1972- நாசாவின் பயனியர் 10 விண் கலம் வெளிக்கோள்களை ஆராய்வதற்காக புளோரிடா வில் இருந்து ஏவப்பட்டது.

★ 1990-ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவராக நெல்சன் மண்டேலா தெரிவு செய்யப்பட்டார்.

★ 1992-உஸ்பெக்கிஸ்தான், மல் தோவா ஆகியன ஐ.நாவில் இணைந்தன.

★ 1995-யாஹூ தொடங்கப்பட்டது.

★ 1998-ஜூப்பிட்டரின் சந்திரனான யூரோப்பாவில் அடர்ந்த பனிக்கட்டியின் கீழ் திரவ நிலையில் கடல் இருப்பதாக கலிலியோ விண்ணகலம் தகவல் அனுப்பியது.

★ 2002-ஆப்கானிஸ்தான் மீதான ஐக்கிய அமெரிக்காவின் அனகோண்டா தாக்குதல் ஆரம்பமாகியது.

### பிறப்புக்கள்

★ 1896-ரா.பி.சேதுப்பிள்ளை, தமி ழறிஞர் (இ.1961)

★ 1931-மிக்கைல் கொர்பசோவ், சோவியத் ஒன்றிய முன்னாள் தலைவர்

### இறப்புக்கள்

★ 1791-ஜோன் வெஸ்லி ,மெதடிஸ் தத்தை அறிமுகம் செய்தவர் (பி.1703)

★ 1930-டி,எச்.லோறன்ஸ், ஆங்கில எழுத்தாளர் (பி.1885)

★ 1949-சரோஜின் நாயுடு, இந்திய சுதந்திரப் போராட்ட வீராங் கனை, கவிக்குயில்(பி.1879)



★ 1935-குன்னக்குடி வைத்தியநாதன், வயலின் இசைக்கலைஞர் (இ.2008)

# அதிசய உலகம்...

## நுரைக்குமிழிகளை உருவாக்குவதில் உலகசாதனை படைத்த மனிதன்



நுரைக்குமிழிக்குள் மேலும் குமிழிகளை உருவாக்குவதில் நிபுணரான சாம்ஸன் பபிள் மேன் தனது ஏழாவது கின்னஸ் உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

நுரைக்குமிழிகளை உருவாக்குவதையே தமது வாழ்க்கைத் தொழிலாக தேர்ந்தெடுத்த இவர் பபிள்மனிதன் என அழைக்கப்படுகின்றார். இவரின் உண்மையான பெயர் சாம்ஹீத் என்பதாகும்.

39 வயதான சாம்ஸன் அண்மையில் ஒரு நுரைக்குமிழிக்குள் 56 நுரைக்குமிழிகளை உள்ளடக்கி புதிய உலசாதனை புரிந்துள்ளார்.தனது சொந்த சாதனையையே இவர் முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் 2006 ஆம் ஆண்டு ஒருநுரைக்குமிழிக்குள் 46 குமிழிகளை உருவாக்கி முதலாவது உலகசாதனையை படைத்துள்ளார்.

அதன் பின் குமிழிகள் உருவாக்குவதில் பல்வேறு சாதனைகளை அவர் படைத்துள்ளார்.

2007 ஆம் ஆண்டு அவர் லண்டன் விஞ்ஞான நூதன சாலையில் 50 மனிதர்களை உள்ளடக்கக்கூடிய பாரிய நீர்க்குமிழியை உருவாக்கினார்.அவர் சங்கிலி கோர்வை போன்ற நீளமான குமிழிகளை உருவாக்கியும் சாதனை படைத்துள்ளார். அதிக தடவை துள்ளக் கூடிய குமிழிகளையும் உரு வாக்கினார்.கடந்த 22 வருடங்களுக்கு முன்பாக அவர் நுரைக்குமிழிகளை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளார். அது தன்னை சிறந்த நுரைக்குமிழிகளை உருவாக்கும் கலைஞராக உருவாக்கியுள்ளதா கவும் அவர் தெரிவித்தார்.

## அதிகமாக சிக்கன் லெக்கை உட்கொண்டு சாதனை



அமெரிக்காவின் பிலடெல்பியா நகரில் ஆண்டு தோறும் சிக்கன் சாப்பிடும் போட்டி நடத்தப்பட்டு இப்போட்டியில் அதிகமான சிக்கன் லெட்பீஸ் சாப்பிடுபவருக்கு பத்து இலட்சம் ரூபாய் பரிசளிக்கப்படும் சமீபத்தில் நடந்தேறிய இந்தாண்டிற்கான போட்டியை காண்பதற்கு 20 ஆயிரம் பேர் திரண்டிருந்தனர். மசாலா பூசப்பட்டு நன்றாக பொரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான லெக்பீஸ்கள் தயாராக இருந்த நிலையில் மணி ஒலித்து போட்டி ஆரம்பமாகியது.

இப்போட்டியின் இறுதியில் ஜப்பானைச் சேர்ந்த டகெரு கொபாயஷி என்ற இளைஞர் அரை மணி நேரத்தில் 337 லெக்பீஸ்களை சாப்பிட்டு பரிசை தட்டிச் சென்றார்.

இதற்கு முன் ஜேர்மனியைச் சேர்ந்த ஒருவர் 255 லெக் பீஸ்களை சாப்பிட்டு சாதனை படைத்திருந்தார்.


தற்போது அந்த சாதனையை ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டகெரு கொபாயஷி முறியடித்தது குறிப்பிடத்தக்கது.

## அந்தரத்தில் விநோதமாக அமர்ந்திருக்கும் மனிதர்



பொதுவாக மயாஜாலம் அனைத்து தரப் பினரையம் அதிகமாக கவர்வதுடன் அனைவரின் மனதில் பெரும் மகிழ்ச்சியையும் சிந்தனையையும் ஏற்படுத்துகின்றது. ரமணா என புகழ் பெற்ற இந்த மஜிக் நிபுணர் தனது தாத்தாவிடம் இருந்து ஆரம்ப மஜிக் வித்தைகளை கற்றுக் கொண்டு பின்பு இந்தியாவின் புகழ்பெற்ற மஜிக் அக்கடமியில் கலந்துகொண்டு பல விதமாக வித்தைகளை கற்றுள்ளார். மேலும் அவ்வாறு இங்குள்ள மஜிக் நிபுணர் செய்யும் வித்தையை படத்தில் காணலாம்.

## இரத்தக்குழாய் கட்டிகளை நீக்க புதிய சாதனம்



இரத்தக்குழாய்களான நாடி, நாளம் என்பவற்றில் உண்டாகும் கட்டிகள் காரணமாக இரத்த ஓட்டம் தடைப்படுவதனால் ஸ்ரோக் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இதனால் சில சந்தர்ப்பங்களில் இறப்புக்களும் எற்படலாம்.

தற்போது இவ்வாறான நோய்கள் இலகுவாக சிகிச்சை அளிப்பதற்கென டாக்டர் ஜெப்ரி சேவர் என்பவரின் தலைமையில் இயங்கும் குழுவினால் விசேட உபகரணமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கருவிகள் மிக மெலிதாக காணப்படும் இரத்தக் குழாய்களுள் செலுத்தக்கூடியவாறு மெல்லிய தடிப்பம் உடையனவாகவும் அதன் முனைகள் இரத்தக்குழாய்களை சேதப்படுத்தாத வண்ணமும் அமைக்கப்பட்டுள்ளது.

## கருப்பையில் இருந்து பெறப்படும் ஸ்டெம் செல்கள் மூலம் குழந்தை!




அமெரிக்க விஞ்ஞானிகளின் அதிரடிகளுக்கு எப்போதுமே பஞ்சம் இருக்காது. அந்த வகையில் மலட்டு தன்மை காரணமாக சில பெண்கள் குழந்தை இன்றி அவதிப்படுகின்றனர். அவர்களின் பிரச்சினையை தீர்க்க உலகம் முழுவதும் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் கருப்பை ஸ்டெம்செல் மூலம் கருமுட்டைகளை உருவாக்க முடியும் என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்காவில் மாசாசுசெட் ஜெனரல் வைத்தியசாலை நிபுணர்கள் எலியின் கருப்பைகளில் இருந்து ஸ்டெம் செல்களை பிரித்து எடுத்தனர்.

அவற்றை மலட்டு தன்மையுடைய எலியின் உடலில் செலுத்தினர்.


அது கரு முட்டைகளை உற்பத்தி செய்து அதன் மூலம் எலிக்குட்டிகள் பிறந்தனஇ இதனால் ஆச்சரியம் அடைந்தனர் விஞ்ஞானிகள். இந்த செயன் முறையை பெண்களுக்கும் பயன்படுத்தி வெற்றி கண்டுள்ளனர் விஞ்ஞானிகள்.

## மரத்தினால் ஆக்கப்பட்ட தத்துரூபமான குதிரை



மரங்களினால் பலவிதமான பொருட்களை கலைநயத்துடன் வடிவமைக்கும் கலைஞர்களின் சிந்தனைகளும் செயல்களும் சற்று வித்தியாசமாகவே காணப்படுகின்றன. இவ்வாறான மரத்தினால் தயாரிக்கும் பொருட்கள் வீட்டை அழகுபடுத்துவதில் முக்கியத்துவம் பெறுகின்றது. அவ்வாறு மரங்களினால் விநோதமாக வடிவமைக்கப்பட்டுள்ள சிற்பம் படத்தில்.

# குருவைத்தேடி...



ஆன்மீகம் 11

**கேள்வி: உங்களுக்கு ஏற்பட்ட ஞானோதய அனுபவம் ஒருமுறை மட்டும் நிகழ்ந்ததா? அல்லது தொடர்ந்து அந்த சந்தோஷமான அனுபவம் வந்து கொண்டேயிருந்ததா? எங்களுக்கு அந்த *ஆஹா* அனுபவம் ஏற்படுவதற்கு நாங்கள் எத்தகைய சூழ்நிலைகளை உருவாக்கிக்கொள்ளவேண்டும்?**

சத்குரு: ஒருமுறை அது உங்களுக்குள் நடந்துவிட்டால் அது எப்போதுமே இருக்கிறது. எனவே, அதனைப் பெறும் விதமாக உங்களை எப்படித் தயார்படுத்திக் கொள்வது? வெளியில் இருந்துசேகரிப்பதை ஒரு ஓரமாக வைப்பதற்கான ஒரு உறுதியோடு இருந்தால் நிகழக்கூடும். வெளியிலிருந்து சேகரிப்பது என்று நான் சொல்லும் போது உங்களுடைய மனம், உங்கள் நம்பிக்கைகள், உங்கள் கருத்துக்கள், உங்கள் அபிப்பிராயங்கள் வெளியிலிருந்து சேகரிக்கும் அனைத்தையும் உங்கள் உடலையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். உங்கள் உடல் என்பது கூட, நீங்கள் சாப்பிட்ட உணவின் சேகரிப்புத்தான். எதை நீங்கள் மனம் என்று சொல்கிறீர்களோ, அதுவும் வெளியிலிருந்து சேகரித்த பதிவுகள் தான். இந்த இரண்டையும் ஓரத்தில் ஒதுக்கிவைக்க நீங்கள் தயாராக இருந்தால் மட்டுமே, வாழ்க்கை என்பது எப்போதும் *ஆஹா* என்பதாக இருக்கும்.

**கேள்வி: புதிய சிந்தனைகள் எப்போதுமே தொடக்கத்தில் மக்களால் எதிர்ப்புக்கு உள்ளாகிறது. அவை எவ்வளவு அற்புதமான சிந்தனைகளாக இருந்தாலும் சரி. ஆனால், வரலாறு தாங்கள் வாழ்கிற காலத்தில் இருந்து முன்னோக்கி பார்ப்பவர்களால்தான் உருவாக்கப் பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, உங்களுடைய பார்வையை மற்றவர்கள் எப்படி நோக்குகிறார்கள்? மற்ற மக்கள் உங்களை எப்படிப் பின்பற்றுகிறார்கள்? அதற்காக நீங்கள் என்ன செய்கிறீர்கள்?**



சத்குரு: மக்கள் எப்போதுமே தாங்கள் வாழும் காலத்தைவிட முன்னோக்கிப்பார்ப்பதாக நம்புகிறார்கள். அவர்கள் ஒருபோதும் வாழ்கிற காலங்களைவிட முன்னோக்கிப் பார்ப்பதாக நான் நினைக்கவில்லை. அவர்களால் மற்ற மக்களைத் தங்களோடு எடுத்துச் செல்லும் திறன் இல்லாமல்தான் இருந்திருக்கிறார்கள். சுற்றியிருக்கும் மக்களை உங்களோடு அரவணைத்துக் கொள்ளும்திறன் உங்களுக்கில்லை. அதைத்தான் நீங்கள், அவர்கள் முன்னோக்கி இருப்பதாக மாற்றிப்புரிந்து கொள்கிறீர்கள். வரலாற்றிலோ அல்லது தற்போதோ அல்லது எதிர்காலத்திலோ உங்களோடு இருக்கும் மக்களை அரவணைத்துச் செல்லும் திறன் இல்லாவிடில் சமூகசூழலில் புதிதாக எதுவும் நிகழ்வதற்கு வாய்ப்பே இல்லை. எப்போதுமே இப்படித்தான் இருந்திருக் கிறது. மக்களின் குறுகிய கண்ணோட்டத்தைத் தாண்டி புதிதாக ஏதேனும் நிகழ வேண்டுமானால் அங்கே எதிர்ப்பு இருக்கும். மனத்தடை இருக்கும். தவறான புரிதல்கள் இருக்கும். இந்த செயல்முறையில் நீங்கள் சிலுவையில்கூட அறையப்படலாம். உங்களோடு மக்களை அரவணைத்துச் செல்வது என்பது உங்கள் கருத்தைச் சார்ந்தோ, அல்லது உங்கள் அனுபவத்தைச் சார்ந்தோ இருப்பதில்லை. மக்கள் தற்போது எங்கே இருக்கிறார்களோ அங்கேயிருந்து அவர்களை எடுத்துச் செல்லும் உங்கள் புரிதல்களிலும் உங்கள் கருணையிலும் தான் இருக்கிறது. அவர்கள் தற்போது எந்த நிலையில் இல்லையோ அங்கிருந்து அவர்களை எடுத்துச் செல்ல விரும்புகிறீர்கள்.

அது வேலை செய்யாது. ஒரு பெரிய மக்கள் திரளை அல்லது ஒரு குறிப்பிட்ட குழுவை உங்களோடு எடுத்துச் செல்லும் திறன் என்பது நீங்கள் அவர்களுக்குப் பின்னால் நிற்பதைப் பொறுத்தே இருக்கிறது. அவர்களுக்கு முன்னால் நிற்பதைப் பொறுத்து இருப்பதில்லை.

நீங்கள் மக்களை வழி நடத்துவது என்றால் அவர்களுக்கு முன்னால் நடந்து கொண்டு அவர்கள் அனைவரும் உங்களைப் பின்பற்றி வர வேண்டும் என்றும் எதிர்பார்க்கலாம். நீங்கள் வேகமாக நடந்து சென்றுவிட்டால் ஒருவேளை அவர்களால் உங்களை எட்டமுடியாமல் போகலாம். இன்னொரு வழியும் இருக்கிறது. மக்களுக்குப்பின்னால் நின்றுகொண்டு அவர்களை வழிநடத்துவது. அப்படி செய்யும்போது அவர்கள் உங்களுக்குப்பின்னால் வருவதற்கு வழியேயில்லை.

அவர்கள் உங்க ளோடே வருவார்கள். அவர்கள் உங்களுக்கு முன்னால் நடந்து கொண்டிப்பார்கள்.

நீங்கள் அதனை மேய்த்தல் என்று அழைக்கக்கூடும். ஆனால் மக்களுக்குத் தேவை இதுதான்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக சத்தியப்பிரமாணம்

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.



தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வவுனியா அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் சத்தியப் பிரமாணம் செய்து வைக்க கலந்து கொண்டிருந்தவர்கள் சத்தியப்பிரமாண உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இதன் பின்னர் சத்தியப்பிரமாணத்தின் படி ஒழுகுவோம் எனவும் அதனை கடைப்பிடிப்போம் எனவும் கலந்து கொண்டவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த புத்தகத்தில் கையொப்பம் இட்டிருந்தனர்.

இந்நிகழ்வில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவி அனோமா திசாநாயக்க வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் என். திருஞான சம்பந்தர் உட்பட பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர். - (அ-2)

# தொழிலாளி வெட்டிக்கொலை
## அம்பாறையில் கோரம்

அம்பாறை மொறவில்லாறு பகுதியில் செங்கல் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர் ஒருவர் கழுத்திலும் முகத்திலும் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளதாக அம்பாறை பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை- கல்லோயா பாலத்துக்கருகில் மொறவில்லாறு பிரதேசத்தில் நீண்ட காலமாக செங்கல் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டு வரும் எச்.வீ.ஜீ. தங்கசுரேஸ் (வயது- 29) என்ற இளைஞரே இவ்வாறு கோரமாக வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டவராவார்.

படுகொலை செய்யப்பட்ட நபரின் தந்தையான ஹேவாவசம் கருத்துத் தெரிவிக்கையில்,தொழில் நிமித்தம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல் தொழிலகத்துக்கு சென்றவர் நேற்று முன்தினம் வரை வீடு திரும்பாமையால் தேடிய போதே இச்சம்பவம் பற்றி அறியக் கிடைத்தது என்றார்.

இவ்விடயம் தொடர்பாக அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரேமலால் ரணகல மற்றும் அம்பாறை தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி ஜயந்த விக்ரமரத்ன ஆகியோர் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் அம்பாறை மாவட்ட நீதவான் எம்.எஸ். பின் விரைந்து விசாரணைகளை மேற்கொண்டார். (அ-2)

# குள வீதியினை பாவனைக்கு விடுமாறு வேண்டுகோள்

(வவுனியா)

வவுனியா குடியிருப்பு கிராமத்திற்கான பிரதான வீதியான குளவீதியினை மக்கள் பாவனைக்கு திறந்துவிடுமாறு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியாக்குளம், குடிமனைப்பகுதி, இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் செல்லும் பிரதான வீதியான இவ்வீதி 1995 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினரால் மூடப்பட்டு மக்கள் பாவனைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இங்கிருந்த நகரசபைக்குச் சொந்தமான திருமண மண்டபமும் இராணுவ முகாமாக்கப்பட்டுள்ளது.

குளவீதி மூடப்பட்டுள்ளதன் காரணமாக பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்கள் வேறு வீதிகளை பயன்படுத்த வேண்டியுள்ளதாகவும் பொதுமக்கள் கூறினர். (அ-2)

# ஜனாதிபதி மஹிந்தவின் அன்றைய கோரிக்கை இன்று நிறைவேறுகிறது
## மங்களசமரவீர எம்.பி. தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நிர்வாகத்தை தேசிய கொடியை கொண்டு மறைப்பதற்கு அனுமதிக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் விடுத்த கோரிக்கை அவருக்கே நெருக்கடியாக அமைந்துள்ளது. கடந்த 1990 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தராஜபக்ஷ ஆற்றிய உரை இறுவெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உதவி வழங்கும் நாடுகள் ஏன் மனித உரிமை விவகாரங்கள் குறித்து கேள்வி எழுப்புவதில்லை என அவர் அப்போது நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். மனித உரிமைகளை மேம்படுத்தினால் உதவிகள் வழங்க முடியும் என நாடுகள் நிபந்தனை விதிக்க வேண்டுமென அவர் கோரியிருந்தார்.

இந்தக்கோரிக்கைகள் தற்போது அவருக்கே எதிராக அமைந்துள்து என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். உலகின் அனைத்து நாடுகளும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதித்து செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படத்தவறும் பட்சத்தில் வெளிநாடுகள் உள்விவகாரங்களில் தலையீடு செய்யும் நிலைமை ஏற்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தமிழக ஆளுநர் வீட்டருகில் பொலிஸ் என்கவுன்டர்..

## விசாரணைக்கு வரும் தேசிய உரிமை ஆணையம்

தமிழகத்தின் தலைநகரான சென்னையைக் கலக்கிய வடமாநில வங்கி கொள்ளையர்கள் ஐந்துபேரை ஒரே தினத்தில் என்கவுன்டர் செய்தது, தமிழக காவற்துறைக்குப் பெரும் சோதனையை ஏற்படுத்தியது. மனித உரிமை ஆர்வலர்கள் வழக்கறிஞர்கள் எல்லாம் இந்தப் பொலிஸ் என்கவுண்டரை விசாரிக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத்தொடுத்து இருக்கிறார்கள். தேசிய மனித உரிமைகள் ஆணைய தலைவரும் முன்னாள் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியுமான கேஜி. பாலகிருஸ்ணன், "பொலிஸ் என்கவுண்டர் பற்றி விசாரிக்க, டெல்லியில் இருந்து தேசிய மனித உரிமை ஆணைக்குழு சென்னை செல்லும். உண்மை என்ன என்பதை வெளிக் கொண்டு வரும்" என அறிவித்திருப்பது. காவல்துறை அதிகாரிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சென்னையின் புறநகர் பகுதிகளில் இருக்கிறது. கீழ்க் கட்டளை மற்றும் பெருங்குடி என்ற இரு பகுதிகள். இங்குள்ள பரோடா வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பட்டப்பகலில் புகுந்து துப்பாக்கியைக்காட்டி கொள்ளையடித்தார்கள் வடமாநில கொள்ளையர்கள். அனைத்து வங்கி அதிகாரிகளையும் ஒரு அறையில் அடைத்துவிட்டு காசாளரிடமிருந்த சாவியைப் பறித்து சுமார் 25 இலட்சம் ரூபாய்க்கு மேல் கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்கள். இந்தக் கொள்ளை- மக்கள் மத்தியில் பெரும் பீதியையும் குறிப்பாக வங்கிக்குச் செல்லும் வாடிக்கையாளர்கள் மத்தியில் கலக்கத்தையும் ஏற்படுத்தியது. கொள்ளையடிக்கப்பட்ட வங்கிகளுக்கு உடனே சென்ற வாடிக்கையாளர்கள் உடனே தங்கள் பணம் இருக்கிறதா என்றே வங்கி மனேஜர்களிடம் கேட்டு பதற்றத்தில் மூழ்கியிருந்தாகள். இந்தியாவின் மெட்ரோ பாலிட்டன்சிட்டியாக இருக்கும் சென்னையில் பட்டப்பகலில் நடந்த வங்கிக் கொள்ளை பொலிஸ் அதிகாரிகளின் தூக்கத்தை தொலைத்தது. சென்னை மாநகர

நன்றி : இணையம்

பொலிஸ் கமிஷனராக இருக்கும் திரிபாதி இதற்கென தனிப்படையை அமைத்து குற்றவாளிகளைத் தேடும் பணியில் இறங்கினர். குறிப்பாக கொள்ளையடிக்கப்பட்ட இரு வங்கிகளிலும் சி.சி.டி.வி. கெமராக்கள் இல்லை. அதனால், கொள்ளையடித்த கொள்ளையர்கள் பற்றிய துப்பு கிடைக்கவில்லை. இந் நிலையில் சென்னை புறநகர் பகுதியில் சி.சி.டி.வி. கெமராக்கள் பொருத்தப்பட்டுள்ள வங்கிகளில் உள்ள போட்டோ காட்சிகளை கேட்டுப்பெற்றது பொலிஸ். ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தப்படங்களை- இக்கொள்ளைகளை விசாரிக்க அமைக்கப்பட்ட துணைப்பொலிஸ் கமிஷனர் சுதாகர் ஐ.பி.எஸ். தலைமையில் பார்வையிட்டு இறுதியில் ஒரு வங்கியை நோட்டமிடும் ஆசாமியின் படத்தை கண்டுபிடித்தது. அவன் தான் தற்போது பொலிஸ் என்கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்ட சுஜய்குமார் ராய்.

வங்கியில் கொள்ளையடித்துவிட்டு தமிழக கவர்னரின் இல்லமான ராஜ் பவனுக்கு ஒரு கி.மீ. தொலைவில் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு ஒன்றில் தங்கியிருந்தனர் கொள்ளையர்கள். பொலிஸ் வசம் கிடைத்த கொள்ளையன் போட்டோவை டீ.வி.க்களில் போட்டுக்காட்டத் தொடங்கியதும் தாடியுடன் இருந்த கொள்ளையன் ஷேவ் செய்துவிட்டு வந்திருக்கிறான். இதைப்பார்த்த, வீட்டை வாடகைக்குக் கொடுத்தவர் சந்தேகப்பட்டார். அடுத்த சில மணிநேரங்களில் இந்த கொள்ளையர்கள், வீடு வாடகைக்கு கொடுத்தவரிடம் சென்று, "நாங்கள் ஊருக்குப் போகிறோம். 20 நாட்கள் கழித்து வருகிறோம்" என்று கூறிவிட்டு வாடகைப் பணத்தை கொடுத்திருக் கிறார்கள். இவர்கள்தான் வங்கிக் கொள்ளையர்களோ என்று சந்தேகப்பட்டு அவர் பொலிஸுக்கு தகவல் கொடுத்தார். தகவல் கொடுப்போருக்கு ஒரு இலட்சம் ரூபாய் சன்மானம் கொடுக்கப்படுமென்று ஏற்கனவே சென்னை மாநகர பொலிஸ் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தத் தகவலின் அடிப்படையிலேயே பொலிஸ் அந்தக் கொள்ளையர்கள் இருந்த இடத்தைச்சுற்றி வளைத்தது. ஆனால், மஃப்டியில் சென்ற பொலிஸாரைப்பார்த்து ஏதோ தங்கள் பணத்தைக் கொள்ளையடிக்க லோக்கல் ரவுடிகள் வந்து விட்டார்கள் எனக் கருதி அவர்களை நோக்கி கொள்ளையர்கள் சுட்டார்கள். அதைத் தொடர்ந்து நடந்த என்கவுண்டரில் சுஜய் குமார் ராய் (கொள்ளையர்களின் தலைவன்) உள்ளிட்ட ஐந்து பேர் கொல்லப்பட்டார். இவர்களில் நான்கு பேர் பிஹார் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மேற்குவங்க மாநிலத்தைச் சேர்ந்தவர். இந்த என்கவுன்டர் தமிழகத்தில் மட்டுமின்றி பீஹாரிலும் பிரச்சினையைக் கிளப்ப, அம்மாநில முதல்வர் நிதீஸ்குமார் டி.ஜி.பி., தலைமைச் செயலாளர் ஆகியோர் இது பற்றி விசாரித்து அறிக்கை தருமாறு உத்தரவிட்டார். இதற்கிடையில் தேசிய மனித உரிமை ஆணைக்குழு வழிகாட்டுதலின்படி லோக்கல் பொலிஸ் இது பற்றி விசாரணையை மேற்கொள்ளாமல் என்கவுண்டர் வழக்கை தமிழக சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார் டி.ஜி.பி. ராமானுஜம்.

*தமிழக மக்களை சூறையாடிய வடமாநில கொள்ளையர்களை, தமிழக பொலிஸ் சூறையாடியது தவறா* என்று கேள்வி எழுப்பி பொலிஸ் என்கவுன்டரை ஆதரித்து சென்னை மாநகரம் முழுவதும் பொதுமக்கள் பொதுநல அமைப்புகள் போஸ்டர்கள் அடித்து ஒட்டியுள்ளன. குறிப்பாக என்கவுன்டர் நடந்த இடம், அதை விசாரிக்கும் வேளச்சேரி காவல் நிலையம், மாநில மனித உரிமை ஆணையம், அமைச்சர்கள் இருக்கும் பகுதிகளில் இந்த போஸ்டர்களை அதிகம் காண முடிகிறது. இதற்கிடையில் மனித உரிமை அமைப்புகள் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளன. ஆனால், பொலிஸ் தரப்பில் என்கவுண்டர் நடந்த வீட்டினைப் பார்வையிட எந்தக் குழுவையும் அனுமதிக்காமல் இருப்பது பெரும் சர்ச்சையை தோற்றுவித்துள்ளது. நீதிவிசாரணை நடப்பதால் அனுமதிக்கவில்லையென்று பொலிஸ்தரப்பில் கூறினாலும், சம்பவம் நடைபெற்று நான்கு நாட்களுக்கு மோலாகியும் என்கவுன்டர் நடந்த இடத்தை பத்திரிகையாளர்களும் மனித உரிமை அமைப்புகளும் ஏன், சாதாரண அப்பகுதி மக்களேகூட பார்க்காதவாறு பொலிஸ் காவல் போட்டுக்கொண்டிருப்பது சர்ச்சையை கிளப்பி வருகிறது. இதற்கிடையில் என்கவுன்டரில் கொல்லப்பட்ட 5 பேரில் இருவரின் அடையாளங்கள் தெரிந்துவிட்டது. மீதிப்பேருடைய அடையாளங்களை அவர்களின் உறவினர்கள், பீஹார் மற்றும் மேற்கு வங்க மாநிலததில் இருந்துவந்து அடையாளம் காட்டவேண்டும். சென்னை மாநகர பொலிஸ் கமிஸனர் திரிபாதி, அவர்கள் வங்கிக் கொள்ளையர்கள் தான், "அவர்கள் இருக்குமிடத்துக்கு விசாரணைக்குப் போனோம்; எங்களை நோக்கியே துப்பாக்கியால் சுட்டதால் நாங்களும் திருப்பிச் சுடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. மற்றப்படி நான் அவர்களை உயிருடன் பிடிக்கவே விரும்பியிருப்பேன்" என்று ஊடகங்களிற்கு கூறியிருக்கிறார்.

இந்தக் கொள்ளையர்கள் மும்பையிலுள்ள வங்கியிலும் சட்டிஷ்கர் மாநிலத்தில் உள்ள வங்கியிலும் கொள்ளையடித்துள்ள விவரங்களையும் நிலுவையிலுள்ள வழக்குகளையும் தமிழகக் காவல்துறை சேகரித்துள்ளது.


பொலிஸ் என்கவுண்டர் என்பது தமிழகத்தில் நடப்பதுதான். ஒரு கால கட்டம்வரை பிரபல தாதாக்கள், கொலை செய்யும் கும்பலைச் சேர்ந்த தலைவன் போன்றோரை பொலிஸ் குறிவைத்து என்கவுன்டர் செய்வார்கள். அதன் பிறகு சென்னை மாநகரில் தொடர் திருட்டு சம்பவங்கள் அதிகரித்தன. அந்த நேரத்தில் சென்னை மாநகர பொலிஸ் கமிஸனராக விஜய குமார் இருந்த போது சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந் வீட்டில் கொள்ளையடித்த முருகன் என்பவரை என்கவுண்டர் செய்தார். அதன் பிறகு, பாவரியா என்ற மோசமான கொள்ளைக்கும்பல் தமிழகத்தில் புகுந்து பல்வேறு நகரங்களில் கொள்ளையடித்தது. குறிப்பாக முன்னாள் அமைச்சர் சுதர்சனன், காங்கிரஸ் தலைவர் தமிழரசன் போன்றோர் உள்ளிட்ட 11 பேரை கொலை செய்து, கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். வடமாநில கொள்ளையர்களின் இந்த அட்டகாசம் தமிழக மக்களை பெரும் பீதியில் உறையவைத்தது. அப்போது தமிழகத்தில வடக்கு மண்டல ஜி.ஜி. ஆக இருந்த ஜாங்கிட், இந்த பாவாரியாகுழு கொள்ளையர்களைத் தேடி வந்தார். உத்திரப்பிரதேச மாநிலத்தில் அந்தக் கொள்ளையர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து அங்கேயே சென்று என்கவுண்டர் செய்தது ஜாங்கிட் தலைமையிலான பொலிஸ் குழு. இப்போது அதே வடமாநில கொள்ளையர்கள் ஐந்து பேர் தமிழக கவர்னர் தங்கியிருக்கும் ராஜ்பவனுக்கு மிக அருகில் நடந்த பொலிஸ் என்கவுன்டரில் கொல்லப்பட்டுள்ளார்கள்.



இதுவரை என்கவுன்டர்கள் பெரும் பிரச்சினையை பொலிஸ் அதிகாரிகளுக்கு ஏற்படுத்தவில்லை. ஆனால், இந்த என்கவுண்டரில் செத்தவர்களின் எண்ணிக்கை ஐந்து என்பதால் மனித உரிமை அமைப்புகள், ஏன் தேசிய மனித உரிமை ஆணையமே இதைக் கடுமையாக எடுத்துக் கொண்டுள்ளது. அதன் தலவரான சுப்ரீம் கோர்ட் முன்னாள் தலைமை நீதிபதி பாலகிருஷ்ணன் தனிக்குழுவையே அனுப்பி, உண்மையை வெளிக் கொண்ட வருவோம் என்று அறிவித்திருக்கிறார். இன்னொருபுறம் வழிக்கறிஞர்கள், மனித உரிமை அமைப்புகள் இந்த என்கவுன்டர் பற்றி நடக்கும் தமிழக பொலிஸ் விசாரணையில் நம்பிக்கையில்லை. ஆகவே சி.பி.ஐ (மத்திய அரசின் கீழ் வரும் அமைப்பு) விசாரணைக்கு உத்தரவிட என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்பு கோரிக்கை வைத்துள்ளார்கள். இதுபோன்ற என்கவுன்டர்கள் நடக்கும் போது தேசிய மனித உரிமை ஆணையம் பொதுவாக இத்தனை வாரங்களுக்குள் பதில்கொடுங்கள் என்று நோட்டிஸ் மட்டுமே அனுப்பும். குழுக்ளை அனுப்பி விசாரிக்காது. ஆனால், இந்த முறை தேசிய மனித உரிமை ஆணைய குழுவே





நேரடியாக வந்து பொலிஸ் என்கவுன்டர் பற்றி விசாரிக்கும் என்று அறிவித்திருப்பது சென்னை மாநகர பொலிஸ் மட்டுமின்றி, தமிழக காவல்துறையையும் கவலையில் மூழ்கவைத்திருக்கிறது.

# நிகழ்வின் நிழல்கள்...




வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் அண்மையில் நடைபெற்ற திருவெம்பாவை நிகழ்வின் பரிசளிப்பு வைபவத்தில் கந்தப்பச்செட்டியார் வை. கோபாலகிருஷ்ணனுக்கு வைத்திலிங்கம் கந்தப்பச் செட்டியார் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் கலந்து கொண்ட சிறார்களையும் படங்களில் காணலாம்.


யா/ குடத்தனை அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் பரிசில் பெறுவதற்காக மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.



கீரிமலை நகுலேஸ்வரக் கோவில் மகாகும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகை தந்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொன்னாடை அணிவித்து வரவழைத்து வரப் படுவதையும் அருகில் சமய சிவாச்சாரியர்கள் நிற்பதனையும் படத்தில் காணலாம்.



யா/ மயிலணி சைவ மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடை பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட த.சற்குணசர்மா மங்கள விளக்கேற்று வதை படத்தில் காணலாம்.




மீசாலை வேம்பிராய் சமரச சுத்த சன்மார்க்க சத்தியஞான கோட்டத்தில் அண்மையில் தைப்பூச நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வின்போது துளிர்விடும் தேவர்கள் என்ற குறும்படத்தை தயாரித்த குமரநாதனுக்கு இந்தியாவில் இருந்து வருகைதந்த முன் னாள் துணை ஆட்சியர் தவத்திரு இராமானுஜம் ஐயா கலைமாமணிப்பட்டம் வழங்கி கௌரவிப்பதையும் நடுவில் வள்ளல் அடிமை கனகசபாபதி கேதீஸ்வரன் நிற்பதையும் அறநெறி மாணவியின் நடன நிகழ்வினையும் படங்களில் காணலாம்.



முல்லைத்தீவு அளம்பில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் பேடன் பவல் தினவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட சாரணர்கள் மற்றும் புதிதாக சின்னம் சூட்டப்பட்ட சாரணர்கள் ஆசிரிய குழாத்துடன் நிற்பதை படத்தில் காணலாம்.

# 80 வீத அமெரிக்க இந்தியர்கள் ஒபாமாவுக்கு வாக்களிப்பு

## கருத்துக் கணிப்பில் தகவல்

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஒபாமா தான் வெற்றி பெறுவார் என்று கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.


தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பதவிக்காலம் முடிவடைவதையொட்டி இந்தாண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது.

அதில் ஆளும் ஜனநாயகக்கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா வேட்பாளராக நிற்கிறார். இந்நிலையில் பொஸ்டன் நகரில் இயங்கி வரும் ஐ.என்.இ.மீடியா என்ற நிறுவனம் சமீபத்தில் தேசிய அளவில் கடந்த 22 முதல் 26 வரையிலான திகதிகளில் ஒன்லைனில் ஒரு கருத்துக் கணிப்பை நடத்தியது. இதன்பின் இந்நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது, அதேநேரம் இன்றே ஜனாதிபதி தேர்தல் நடக்குமானால் 80 சதவீத அமெரிக்க இந்தியர்கள் ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்குத் தான் வாக்களிப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருத்துக் கணிப்பில் மொத்தத்தில் 80 சத விகிதம் பேர் ஒபாமாவிற்கு ஆதரவாகவும் 14.7 சதவிகிதம் பேர் ரோம்னிக்கு ஆதரவாகவும் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் குடியரசுக்கட்சி வேட்பாளர்களில் ரோம்னிக்கு 51.9 சத விகிதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். (அ-2)

# இந்தியாவிலிருந்து புதிய பொருட்களை இறக்குமதி செய்ய பாகிஸ்தான் முடிவு



(இஸ்லாமாபாத்)

இந்தியாவிலிருந்து புதிதாக சுமார் 4 ஆயிரம் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் இடையே எல்லைப் பிரச்சினை நீடிப்பதால் தாராள இறக்குமதிக்கு பாகிஸ்தான் தடை விதித்திருந்தது. இதன்படி ஆயிரத்து 950 பொருட்களை மட்டுமே இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து வந்தது.

இந்நிலையில் இருதரப்பு உறவை மேம்படுத்தும் விதமாக இந்தியாவை நட்பு நாடுகள் பட்டியலில் சேர்ப்பது என பாகிஸ்தான் அமைச்சரவை கடந்த ஆண்டு முடிவு செய்தது. இதைத் தொடர்ந்து இந்தியாவில் இருந்து அதிகமான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு பாகிஸ்தான் அரசு முடிவெடுத்தது.

இதற்கு பிரதமர் யூசுப் ரசா கிலானி தலைமையில் நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனால் சுமார் 4 ஆயிரம் வகையான பொருட்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு பாகிஸ்தான் அரசு அனுமதி அளிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (அ-2)

# நீதிமன்றில் ஆஜராவதிலிருந்து விலக்கழிக்க கோருகிறார் கனி



(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள தி.மு.க.எம்.பி.கனிமொழி நீதிமன்றில் ஆஜராவதில் இருந்து நிரந்தர விலக்கு வழங்கக்கோரி சி.பி.ஐ.சிறப்புநீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.


கடந்த ஆண்டு நவம்பரில் டில்லி நீதிமன்றம் நிபந்தனை பிணை வழங்கி உத்தரவிட்டது. அதன்படி அவர் சி.பி.ஐ.சிறப்பு நீதிமன்றில் வழக்கு விசாரணை நடைபெறும் நாட்களில் தவறாமல் ஆஜராக வேண்டும்.

இந்த நிபந்தனைகளை இதுவரை பின்பற்றி தவறாமல் நீதிமன்ற விசாரணையில் ஆஜராகி வந்த கனிமொழி நீதிமன்றில் ஆஜராவதில் இருந்து நிரந்தர விலக்கு அளிக்கக்கோரி டில்லி சி.பி.ஐ.சிறப்பு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் தினமும் நீதிமன்றில் ஆஜராக வேண்டியிருப்பதால் எனது சொந்த வேலைகளையும் தாய் என்ற முறையில் குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் செய்யமுடியவில்லை. அதனால் நிரந்தர விலக்கு வழங்க வேண்டும் எனக் கோரியுள்ளார். இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஓ.பி.ஷைனி மனுவுக்கு எதிர்வரும் 14 ஆம் திகதிக்குள் பதிலளிக்கும்படி சி.பி.ஐக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார். (அ-2)

# 5 முறை ஆட்சிக்கு வந்தபோதும் சமதர்மம் பேணாத கருணாநிதி

## பா.ம.க.நிறுவுநர் ராமதாஸ் குற்றச்சாட்டு



தமிழ்நாடு நதிநீர் உரிமையை இழந்ததற்கு கருணாநிதிதான் காரணம் என பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் சென்னையில் தெரிவித்துள்ளார். நிருபர்களுக்கு பேட்டியில் அவர் கூறியதாவது,

தி.மு.க.தலைவர் கருணாநிதி திராவிட இயக்க நூற்றாண்டு விழாவில் தமிழ் செழிக்க திராவிடம் செழிக்க என்று பேசுகிறார். தமிழ் செழிக்க என்றால் எங்களுக்கு புரிகிறது. திராவிடம் செழிக்க என்றால் என்ன அர்த்தம். 45 ஆண்டாக தமிழகத்தை ஆண்டு 5 முறை முதல் அமைச்சராக இருந்த கலைஞர் என்ன சமதர்மத்தை கொண்டு வந்துள்ளார். எப்போதெல்லாம் அவர் ஆட்சியில் இல்லையோ அப்போதெல்லாம் ஆரியர், திராவிடர் என்று கூறுவார்.

ஏதாவது ஒரு தெருவிலாவது சாதியை ஒழித்து விட்டோம் என்ற நிலையை 45 ஆண்டில் இவர் ஏற்படுத்தினாரா? எனவே பா.ம.க. சார்பில் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த திராவிட மாயை என்ற கருத்தரங்கை நடத்தவுள்ளோம்.

தமிழகம் இன்று நதிநீர் உரிமையை இழந்ததற்கு கலைஞர் தான் காரணம். செம்மொழிக்காக கலைஞர் என்ன செய்தார். மாநாடு நடத்தினால் மட்டும் போதுமா? அ.தி.மு.க. ஆட்சியில் யாரும் எதுவீம் சொல்ல முடியாது. இன்னும் 4 வருடம் தமிழகம் இருண்டுதான் இருக்கும்.

கூடங்குளம் மட்டுமல்ல எங்கேயும் அணு உலை வேண்டாம் என்பதுதான் பா.ம.க.வின் நிலை. எங்களது இந்த நிலையில் எந்த மாற்றமும் இல்லை என கூறினார். (அ-2)

# மாலைதீவில் மீனவர்கள் கைது

எல்லை தாண்டி மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 11 பேரை மாலைதீவு கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மாலைதீவுக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட எல்லைப்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த 11 மீனவர்களை மாலைதீவு கடற்படை வீரர்கள் கைது செய்தனர்.

இந்த மீனவர்கள் இந்திய எல்லையைத் தாண்டி மீன்பிடித்ததாக மாலைதீவு கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 11 மீனவர்களும் கன்னியாக்குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. (அ-2)



உத்திரபிரதேச மாநில இறுதிகட்ட தேர்தலையொட்டி ராம்பூரில் காங்கிரஸ் சார்பில் நடந்த பிரசார பொதுக்கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் கட்சித்தலைவர் ராகுல் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.




# அறிவியல் தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கு

(புதுடில்லி)

முதல்முறையாக நடைபெறும் இந்தியா-ஆபிரிக்கா இடையேயான அறிவியல் தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கு நேற்றைய தினம் ஆரம்பமாகியது.

தலைநகர் புதுடில்லியில் உள்ள விக்யான்பவனில் நடைபெறும் இந்த கருத்தரங்கில் சுமார் 31 ஆபிரிக்க அமைச்சர்கள் மற்றும் பல்வேறு துறைகள்ளச் சேர்ந்த 103 பிரதிநிதிகளும் கலந்துகொள்ள உள்ளனர் என வெளிவிவகாரத்துறையின் கிழக்கு மற்றும் தென் ஆபிரிக்காவிற்கான கூடுதல் செயலாளர் குர்ஜித் சிங் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்திய தரப்பில் அறிவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறையில் சிறந்து விளங்கும் ஏழு இந்திய நிறுவனங்கள் இக்கருத்தரங்கில் பங்கு கொள்கின்றன.

அதேபோல் ஆபிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த துனிசியாவின் டுனிஷ் நகரில் உள்ள இன்ஸ்டிடியூட் ஒப் பாஸ்டியூர் கணிதம் மற்றும் பிசி கல்சயின்ஸ் நிறுவனம் உட்பட பல்வேறு ஆபிரிக்க கல்வி நிறுவனங்களும் கருத்தரங்கில் கலந்து கொள்ள உள்ளன. (அ-2)

# தீவிரவாதிகள் இருவர் கைது

தலைநகர் புதுடில்லியில் நாசவேலைகளில் ஈடுபட திட்டமிட்டிருந்த லக்ஷர்-இ-தொய்பா இயக்கத்தை சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் லக்ஷர்-இ-தொய்பா இயக்கத்தை சேர்ந்த 2 பேர் புதுடில்லியின் முக்கிய இடங்களில் குண்டுவைக்க திட்டமிட்டிருந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர்களுக்கு ஜம்மு-காஷ்மீர் மற்றும் ஜார்கண்ட் பகுதிகளில் செயற்பட்டு வரும் அமைப்புகளுடன் தொடர்பு இருப்பதும் தெரிய வந்துள்ளது.

இதற்கு முன்பு இந்தியாவில் நடந்த தீவிரவாத தாக்குதல்களுக்கு லக்ஷர்-இ-தொய்பா அமைப்ப முக்கிய காரணமாக இருந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பஹ்ரைனில் ஏழை இந்தியர்களுக்கு குறைந்த கட்டணத்தில் ஆங்கிலப்பயிற்சி

பஹ்ரைனில் இருக்கும் ஏழை இந்தியர்களின் ஆங்கிலப் புலமையை அதிகரிக்கும் வகையில் மிகக் குறைந்த கட்டணத்தில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சியை அங்குள்ள இந்திய பெண்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒருங்கிணைத்து நடத்தவுள்ளனர். இச்சங்கம் பஹ்ரைனில் பல்வேறு சமூகப் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

இரண்டு மாதம் நடக்கும் இந்த ஆங்கில வகுப்புப் பயிற்சி இம்மாதத்தில் இருந்து தொடங்கவுள்ளது. ஒவ்வொரு வாரத்திலும் இருநாட்கள் பயிற்சி அளிக்கப்படும் என்று அச்சங்கத்தின் இணையத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு பயிற்சி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி பெறுவதற்கான கட்டணம் 650 ரூபா மட்டுமே என்றும் தெரி

# அமெரிக்காவைத் தாக்கிய புயலில் சிக்குண்டு 12 பேர் உயிரிழப்பு



அமெரிக்காவில் உள்ள மிட் பெஸ்ட் கடல் பகுதியில் மையம் கொண்ட புயல் கடும் சூறைக் காற்றுடன் மிட் பெஸ்ட் பகுதியை தாக்கியது. இதில் இல்லினாய்ஸ் மசவுரி, கென்டகி, ஹன்சாஸ், நெப்ரஸ்கா ஆகிய மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

புயல் கரை கடந்தபோது பயங்கர சூறைக்காற்று வீசியது. இதில் ஏராளமான கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

புயல் தாக்குதலில் 12 பேர் உயிர் இழந்தனர். நூற்றுக்கணக் கானோர் காயம் அடைந்துள்ளனர். ஏராளமான கால்நடைகளும் இறந் துள்ளன.

அங்கு மீட்புப் பணிகள் தீவிர மாக நடந்து வருகின்றன. புயல் காற்று வீசியதில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் ஒன்றொடொன்று மோதி சேதம்மடைந்தன.

காரீஸ்பார்க் நகரில் சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களை புயல் இழுத்துச் சென்று அருகில் உள்ள ஏரியில் தள்ளியது. புயலினால் தகவல் தொடர்பு வசதி கள் மின்சார வசதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு மே மாதம் ஜர் பலின் பகுதியில் ஏற்பட்ட புயலில் 160 பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

# தூக்கமாத்திரை பயன்பாட்டினால் உயிருக்கு ஆபத்து ஏற்படும்

ஆழ்ந்த உறக்கத்துக்காக சிலர் தூக்க மாத்திரைகளை பயன் படுத்துகின்றனர். இது அவர்களின் உயிரை பறித்து விடும் என நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர். அமெரிக்காவில் மொத்தம் 23 ஆயிரத்து 500 பேரிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் 10 ஆயிரத்து 500 பேர் தூக்க மாத்திரை சாப்பிடுகின்றார்கள். தூக்க மாத்திரை சாப்பிட தொடங்கிய 2 1/2 வருடத்தில் பலவிதமான நோய் களுக்கு ஆளாகினர். இவர்களில் 35 சதவீதம் பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டனர்.

குறிப்பாக 18 முதல் 55 வயதுக்குட்பட்டவர்களுக்கு நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தூக்க மாத்திரைகள் சாப்பிடும் அளவை பொறுத்து அவர்களின் உயிருக்கு ஏற்படும் ஆபத்தின் அளவு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

எனவே தூக்க மாத்திரைகளை எடுத்து கொள்வது உடல் நலத்திற்கு ஆபத்து என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் தூக்க மாத்திரைகள் சாப்பிடுவதை நிறுத்துபவர்கள் தங்களது வைத்தியர்களின் அறிவுரையை கேட்டு அதன்படி நடக்க வேண்டும் எனவும் நிபுணர்கள் வலியுறுத்தி உள்ளனர். (அ-2)

# 32ஆண்டுகள் கடந்த நிலையில் எகிப்தில் ஜனாதிபதி தேர்தல்;

எகிப்தில் கடந்த 32 ஆண்டுகாலமாக இராணுவ ஆட்சி நடைபெற்று வந்தது. ஜனாதிபதி முபாரக்கின் சர்வாதிகாரம் மற்றும் அடக்குமுறை களுக்கு எதிராக மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர்.

புரட்சியாளர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களில் 1000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதால் புரட்சி தீவிரம் அடைந்தது. அதனையடுத்து முபாரக் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

இதனால் 32 ஆண்டுகளாக இராணுவ ஆட்சிக்குப் பின் எகிப்தில் முதல்முறையாக ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. எதிர்வரும் மே 23,24 ஆம் திகதிகளில் முதல்கட்ட தேர்தலும் அதனைத் தொடர்ந்து ஜூன் 16,17 ஆம் திகதிகளில் இரண்டாம் கட்ட தேர்தலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 21அன்று வாக்குகள் எண்ணப்பட்டு வெற்றிபெற்றவர் புதிய ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவர். ஜூன் மாத இறுதிக்குள் ஆட்சி பொறுப்புக் கள் புதிய ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும் என எகிப்தில் தற்போது தற் காலிக ஆட்சி நடத்திவரும் 90 பேர் கொண்ட இராணுவ ஆட்சிக்குழு அறி வித்துள்ளது.

# நிருபமா ராவிற்கு நீதிமன்றம் உத்தரவு

அமெரிக்காவுக்கான இந்திய தூதுவர் நிருபமா ராவிடம் 3 ஆண்டு களாக வீட்டு வேலை செய்து வந்த பெண் கொடுமைப்படுத்தப்பட்ட தாக புகார் எழுந்தது. இது தொடர் பாக வழக்கை விசாரித்த அமெரிக்க நீதிமன்றம் அப்பெண்ணுக்கு ரூபா 7 அரை கோடி இழப்பீடு வழங்கு மாறு உத்தரவிட்டுள்ளது.

அந்தப் பெண் காட்டுமிராண் டித்தனமாக நடத்தப்பட்டதற்காகவும் மனஉளைச்சலுக்கு ஆளான தாகவும் இந்த இழப்பீட்டை வழங்க உத்தரவிட்டுள்ளது. (அ-2)



துருக்கி நாட்டிற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள துர்மனிஸ்தான் நாட்டின் ஜனாதிபதி குர்பங் கூலி பெர்டி முகோவிற்கு அந்நாட்டு ஜனாதிபதி அப்துல்லாகுல் அங்காராவில் நடந்த நிகழ்ச்சியில் வைத்து துருக்கியின் உயரிய விருது வழங்கி கௌரவித்ததைப் படத்தில் காணலாம்

# வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

## அமரர் வேலுப்பிள்ளை தங்கச்சிப்பிள்ளை



அன்னையின் மடியில்
03 . 01 . 1915

கடந்த 01.02.2012 புதன்கிழமை
அன்று சிவப்பேறு பெற்ற
எங்கள் குடும்பத்தலைவி
அமரர் வேலுப்பிள்ளை தங்கச்சிப்பிள்ளை

இறைவன் அடியில்
01 . 02 . 2012

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் (29.02.2012) புதன்கிழமை
காலை 6.00மணியளவில் கீரிமலைப் புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது.
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (02.03.2012) வெள்ளிக்கிழமை
மு.ப. 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில்
நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப
சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
**வேலுப்பிள்ளை குடும்பத்தினர்**
ஈஞ்சடி வைரவர் கோவிலடி,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(7594)

# அணுஆயுத நடவடிக்கைகளை நிறுத்த வடகொரியா ஒப்புதல்



(நியூயோர்க்)

யுரேனியம் செறிவூட்டுதல் உள்ளிட்ட அணு ஆயுத நடவடிக்கைகளை நிறுத்த வடகொரியா ஒப்புக் கொண்டுள்ளதாக அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்துள்ளார்.


இதன்மூலம் அமெரிக்க- வடகொரியா இடையிலான உறவு மேம்படும் எனவும் விக்டோரியா கூறியுள்ளார்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் நடத்தப்பட்ட அமெரிக்க- வடகொரியா இடையிலான 3 ஆவது சுற்று பேச்சுவார்த்தையில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

அணு ஆயுத நடவடிக்கைகள கைவிட வேண்டுமென்ற அமெரிக்காவின் கோரிக்கைக்கு வடகொரியாவில் நீண்ட காலமாக சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்த ஜனாதிபதி கிம் ஜாங் செவிசாய்க்கவில்லை.

ஆனால் தற்போது கிம் ஜாங் மறைந்த இரண்டே மாதங்களில் அணு ஆயுத நடவடிக்கைகளை நிறுத்த வடகொரியா ஒப்புக்கொண்டுள்ளது. (அ-2)

# ஈராக் போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அமெ. வெளியிட்டது



ஈராக்கில் கடந்த, 2004 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் நடந்த போரில் எத்தனை பேர் பலியாகியுள்ளனர். எத்தனை பேர் படுகாயமடைந்தனர் போன்ற விபரங்களை அரசு வெளியிட்டுள்ளது.


இக்காலகட்டத்தில் நடந்த போர் பயங்கரவாத சம்பவங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்களில் பலியானோர் எண்ணிக்கையை ஈராக்கின் சுகாதாரத்துறை அமைச்சகம் மற்றும் தேசிய பாதுகாப்பு குழு இரண்டும் இணைந்து வெளியிட்டுள்ளன.

அதன்படி கடந்த 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முதல் 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான கால கட்டத்தில் 69 ஆயி ரத்து 263 பேர் பலியாகியுள்ளனர். 2 இலட்சத்து 39 ஆயிரத்து 133 பேர் காயமடைந்துள்ளனர்.

போர் உச்சத்தில் இருந்த போது 21ஆயிரத்து 539பேர்பலியாகியுள்ளனர். 39 ஆயிரத்து 329 பேர் காயம் அடைந்துள்ளனர். கடந்த 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் ஈராக் மனித உரிமைகள் அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையின்படி 2004- 2008 ஆம் ஆண்டுக்கு இடையி லான காலகட்டத்தில் 85 ஆயிரத்து 694 பேர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய அறிக்கை அதை விட குறைவானவர்களையே பட்டியலில்காண்பித்துள்ளது. அதேபோன்று அமெரிக்க அறிக்கையின்படி 76 ஆயிரம் பேரும் பிரிட்டனை சேர்ந்த தனியார் இணையத்தள அறிக்கையின் படி ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பேரும் ஈராக் போரில் இறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# ஈரான் எண்ணெயை குறைக்கும்படி இந்தியாவிடம் அமெரிக்கா கோரிக்கை



(வோஷிங்டன்)


இந்தியா, சீனா மற்றும் துருக்கி நாடுகள் ஈரானிடம் இருந்து இறக்குமதி செய்யும் எண்ணெயின் அளவைக் குறைத்துக்கொள்ளும் படி மிகவும் அழுத்தமாக வெளிப்படையாக அமெரிக்கா கோரியுள்ளதாக அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

ஈரானின் அணுசக்தி திட்டங்கள் குறித்து சந்தேகம் கொண்டுள்ள அமெரிக்கா உலக அரங்கில் அந்த நாட்டை தனிமைப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளது. ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளிடம்பேசி இறக்குமதியைக் குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இது குறித்து நேற்று முன்தினம் காங்கிரஸ் சபையில் அமைச்சர் ஹிலாரி கிளின்டன் பேசியதாவது, இந்தியா, சீனா மற்றும் துருக்கி நாடுகள் ஈரானிடம் இருந்து இறக்குமதி செய்யும் எண்ணெய் அளவைக் குறைக்க வேண்டும் என அமெரிக்கா அழுத்தமாக வெளிப்படையாகத் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளது. அந்த நாடுகள் அமெரிக்கா சொல்வதின் படி செய்ய வேண்டுமெனில் அதற்காக நாம் மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.எனினும் சில நாடுகள் ஈரானை விட்டு விலகுவது என்பது கடினம் தான். அதனால் அந்த நாடுகளுக்கு ஏற்படும் இழப்புகளை வேறு வழிகளில் சரி செய்ய நாம் உதவ வேண்டும் என தெரிவித்தார்.

இதற்கிடையில் ஈரானில் சில வங்கிகள் மீது அமெரிக்கா மேலும் சில பொருளாதாரத் தடைகளை விதிக்கத்திட்டமிட்டிருப்பதை அடுத்து அந்த வங்கிகள் உடனான வர்த்தக உறவுகளை நிறுத்தி விடுவதாக டுபாயில் செயற்படும் நூர் இஸ்லாம் வங்கி தெரிவித்துள்ளது. (அ-2)

# உலகின் மிகப்பழைமையான அணுமின் நிலையம் மூடப்பட்டது



பிரித்தானியா நாட்டில் உள்ள உலகின் மிகப் பழமையான அணுமின் நிலையம் திடீரென மூடப்பட்டது.

இருப்பினும் அதன் அருகாமையிலேயே புதிய அணுமின் நிலையத்திற்கான கட்டுமானப்பணி தொடங்கப்பட்டுள்ளது. அப்பணிகள் எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்குள் முடிவு பெற்று நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரித்தானியாவில் கடந்த 1958 ஆம் ஆண்டில் அணு மின் நிலையத்திற்கான கட்டுமானப் பணி தொடங்கியது. 1960 ஆம் ஆண்டு முதல் அணுமின் நிலையம் தனது பணியை தொடங்கியது.

உலகில் அமைக்கப்பட்ட பழமையான அணு மின் நிலையங்களில் இதுவும் ஒன்றாகும். கடந்த 44 ஆண்டுகளாக இயங்கி வந்த அணுமின் நிலையம் தற்போது மூடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-2)




# அல்கொய்தாவின் மூத்த தளபதி விமான நிலையத்தில் கைது



அல்கொய்தா இயக்கத்தின் மூத்த தளபதியான சயீப் அல் ஏடல் எகிப்து தலைநகர் கெய்ரோவில் உள்ள விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் பாகிஸ்தானில் இருந்து டுபாய் வழியாக நேற்று முன்தினம் கெய்ரோ வந்தபோது விமான நிலையத்தில் வைத்து அதிகாரிகளால் கைது செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

எமிரேட்ஸ் ஏர்லைன்ஸ் விமானத்தில் வந்த முகம்மது இப்ராகிம் மக்காவி என்பவர் அல்கொய்தாவின் சயீக் அல் ஏடலாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் படி கைது செய்யப்பட்டார்.

சயீப் அல் ஏடல் கெய்ரோ வருகின்றார் என்ற தகவல் கிடைத்தவுடன் ஆப்கான் மற்றும் பாகிஸ்தானில் இருந்து வந்த அனைத்து விமானங்களையும் அதிகாரிகள் சோதனையிட்டனர்.

கைது செய்யப்பட்டவர் ஏடல் அல்ல எனவும் மக்காவி தான் எனவும் பின் எகிப்து பாதுகாப்பு அதிகாரிகள் உறுதி செய்தனர்.

இந்த மக்காவி எகிப்தில் கடந்த 1980 ஆம் ஆண்டுகளில் இயங்கி வந்த அல் ஜிகாத் என்ற பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர் .இவரையும் எகிப்து அதிகாரிகள் தேடி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஜப்பானில் 6 ரிக்டரளவில் பூகம்பம்

ஜப்பான் கடற்பகுதியில் நேற்று முன்தினம் பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. பூகம்பம் ஏற்பட்டு ஓராண்டு முடியும் நிலையில் நேற்று முன்தினம் 6 ரிக்டர் அளவில் பூகம்பம் பதிவானது.

ஜப்பான் அருகில் உள்ள ஹோன்சு தீவு பகுதியில் பூகம்பம் மையம் கொண்டிருந்ததாக கொங்கொங்கில் உள்ள புவியியல் ஆய்வு மையம் தகவல் தெரிவித்தது.

இதனால் மக்கள் பீதி அடைந்துள்ளனர். இந்த மையம் கூறுகையில்,

ஜப்பானின் டோக்கியோ நகரில் இருந்து 150 கிலோமீற்றர் தூரத்தில் பூகம்பம் மையம் கொண்டிருந்தது. என்று தெரிவித்துள்ளது. (அ-2)



தென்கொரியாவின் சுதந்திரதினம் நேற்றையதினம் கொண்டாடப்பட்டது. இதையொட்டி சியோலில் அந்நாட்டு கலாசார உடையுடன் தீப்பந்தம் ஏந்தி சுதந்திர தினத்தை கொண்டாடும் தென்கொரிய மக்களை படத்தில் காணலாம்.

வயிற்றைப் பற்றி மட்டுமே நினைப்பவன் தலையை பட்டினி போடுகிறான்.
– ஓர் அறிஞன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பிள்ளையார் தலைமையில் சுயாதீனக் குழு அரச அதிபர்களை விசாரிக்க வருகிறது

ஜெனிவாக் குழப்பம்; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு. இந்த நினைப்புகளோடு நிம்மதியில்லாத உறக்கம். அந்த உறக்கத்தில் ஒரு கனவு.

தேவலோகம் போல் இருக்க வேண்டும். சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பேரணியாகச் செல்கின்றனர். எல்லோரும் தூய்மையான வெள்ளைநிற ஆடை அணிந்திருந்தனர்.

கூடவே சுலோக அட்டைகளும் வைத்திருந்தனர்.

ஊர்வலம் என்றவுடன் ஆர்வத்தோடு அதனை நெருங்கினோம்.

'விசாரணை வேண்டும். விசாரணை வேண்டும்.' 'சுயாதீன ஆணைக்குழுவை இலங்கைக்கு அனுப்பவேண்டும்.' 'நீதி வேண்டும். நீதிவேண்டும். போரில் கொல்லப்பட்ட எங்களுக்கு நீதி வேண்டும்.'

இப்படியாக ஊர்வலத்தில் சென்றவர்கள் கோஷம் எழுப்பினர்.

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பங்கேற்ற அந்த ஊர்வலம் கைலாயத்தில் மகஜர் கையளிக்க போகிறது என்ற தகவலும் இடையிடையே அறிவிக்கப்பட்டது.

ஒரு பெரும் தெய்வீகத் திருத்தலம் போன்ற இடத்தில் ஊர்வலம் நின்றது. நந்திதேவர் ஊர்வலத்தில் வந்தவர்களை விசாரிக்கின்றார்.

சிவனுக்கு மகஜர் கொடுக்கப் போகின்றோம். என்று பேரணியின் தலைவர் கூற,

நந்தி தேவர் சிலரை அழைத்துச் செல்கின்றார்.

சம்போ மகாதேவா! இலங்கா புரியின் வன்னிப் பெரு நிலப்பரப்பிலும் அதனோடு சம்பந்தப்பட்ட காலப்பகுதியிலும் உயிர் பறிக்கப்பட்டவர்கள் நாங்கள். எங்களுக்கு நீதி வேண்டும்.

ஆனாலும் இலங்கையில்–வடபகுதியில் நடப்பதோ வேறு. இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறாதிருக்க, அங்கு பிரார்த்தனை நடக்கிறது. இது அநீதி. எங்களுக்கு நீதிவேண்டும்.

சிவன் : யாம் என்ன செய்யவேண்டும்?

பேரணித்தலைவர் : யாழ்ப்பாண செயலகத்தில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு செயலகத்தில் அரச பணியாளர்களை வற்புறுத்தி ஆர்ப்பாட்டம் செய்ய வைத்திருக்கிறார்கள். இது தொடர்பில் விசாரணை செய்ய வேண்டும் சுவாமி.

இதற்காக கைலாயத்திலிருந்து சுயாதீன ஆணைக்குழுவொன்றை நீங்கள் அனுப்ப வேண்டும்.

அங்கு மூன்று மாவட்டங்களினதும் அரச அதிபர்களை விசாரிக்க வேண்டும்.

பிரதேச செயலர்களை கேள்வி கேட்கவேண்டும். ஆலயங்களில் பிரார்த்தனை செய்தவர்கள், பூசை வழிபாடு நடத்திய குருமார்கள் இவர்களிடம் விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிய வேண்டும் சுவாமி!

சிவன் : ஆகட்டும் நாளைய தினம் கைலாயத்தில் இருந்து விநாயகர் தலைமையில், வீரபத்திரர், வைரவர், யமன், சித்திரகுப்தன் உள்ளிட்ட குழுவை வடமாகாணதிற்கு அனுப்புகிறேன்.

பேர்ணித்தலைவர் : நன்றி சுவாமி! (ஊர்வலம் கலைகிறது.)

விநாயகர் தலைமையிலான விசாரணைக் குழு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து விசாரணை நடத்தவுள்ளது. (நாளை பார்க்கலாம்)

# அழைப்பிதழ்க் கண்காட்சியால் மாணவர்கள் பயன் பெறுவர்

## வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் சித்திரப்பாடம் கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மிகவும் பயனளிக்கக் கூடியதாக அழைப்பிதழ்களின் கண்காட்சி விளங்கு கின்றது என வட. மாகாண கல்வி பண் பாட்டலுவல்கள் அமைச்சின் செய லாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் அச்சிடப்பட்ட அழைப்பிதழ்களின் கண்காட்சி நேற்று கொக் குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமானது. இந்த நிகழ்விற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் இவ்வாறான தொரு கண்காட்சி இதுவரை காலமும் நடைபெற்ற தில்லை. வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் எடுத்திருக்கும் இந்த முயற்சி வரவேற்கக்கூடிய ஒன்று.

பாடசாலைகளில் சித்திரப்பாடம் கற்கும் மாணவர்களுக்கு இக்கண்காட்சி மிகவும் பயனளிக்க கூடியதாகவுள்ளதோடு சித்திரப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மிக வும் பயனளிக்கக்கூடியது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் இந்த கண்காட்சி நிகழ் வில் வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன், வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீதேவி எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

## அடையாள அட்டைகள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

அடையாள அட்டைகள் சில யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் கண்டெடுக்கப்பட்டு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஏ.எஸ். பிரசாத் அறிவித் துள்ளார்.

கண்டெடுக்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளின் விபரம் வருமாறு,

உருத்திரா மாவத்தை கொழும்பைச் சேர்ந்த பாலசிங்கம் மல்லிகாதேவி (65702 2373வி), வீரபத்திரர் கோவிலடி, கோண்டாவிலைச்சேர்ந்த ரவிச்சந்திரன் சாந்தினி (727042822வி), பூநகரியைச் சேர்ந்த பிரதீபா சுப்பிரமணியம் (1515602 தற்காலிக அடையாள அட்டை) ஆகியோர்களது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் தகுந்த ஆதாரம் காட்டிபெற்றுக்கொள்ள முடியும் என அவர் அறிவித்துள்ளார். (அ)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருமதி குணேஸ்வரி ரகுநாதன் ஆசிரியர் எழுதிய வழுவழா நிலைச் சொற்களஞ்சியம் எனும் நூல் வெளியீட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் திருமதி இ.சி.லெட்சுமிப் பிரபா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையினை பாடசாலை அதிபர் செ.இராமநாதன், நூலா ய்வுரையினை யாழ்ப்பாண வலயக் கல்வி தமிழ் உதவிக் கல்வி பணிப்பா ளர் திருமதி மீரா அருள்நேசன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (அ)




நாம் பெற்றதை இழப்பது பெருந் துன்பமாகும். ஆனால் இந்தப் பெருந் துன்பத்திலிருந்து மீள்வதற்கு முயற்சி செய்வதுதான் இன்றைய மனிதனின் நோக்கமாக உள்ளது. இந்து சமயம் இத்தகைய நோக்கங்களை நிறைவேற்ற வழிகாட்டியுள்ளது. சமய குரவர்களது வாழ்வியல் அனுபவங்களைப் பதிவு செய்து அதன்மூலம் வருங்காலத் தலைமுறையினருக்கு வழிகாட்டியுள்ளது மணிவாசகர் பாடிய திருவாசகப் பாடல்களைப் படிக்கும்போது இதனை நன்குணர முடிகின்றது. உலகியல் வாழ்க்கையில் பெற்ற இன்பத்தை விட இறையியல் வாழ்வில் பெறும் இன்பம் மேலானது என்பதை மணி வாசகர் பாடல் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

இறையருளைப் பெறுவதற்கு மணிவாசகர் ஒரு மந்திரத்தைச் செபிக்க வழிகாட்டியுள்ளார். நமச்சிவாய என்பதே அந்த மந்திரமாகும். நாத நாம நமச்சிவாயவே என ஆளுடைய பிள்ளையாரும் நற்றுணையாவது நமச்சிவாயவே என ஆளுடைய அரசரும் சொல்லுநா நமச்சிவாயவே என ஆளுடைய நம்பியும் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். திருவடியிலே நகாரமும் திருவுந்தியிலே மகாரமும் திருத்தோளிலே சிகாரமும் திருமுகத்திலே வகாரமும் திருமுடியிலே யகாரமுமாக நமச்சிவாய என்ற பஞ்சாக்கரமே இறைவன் திருமேனியே என்பர். எல்லோரும் நமச்சிவாய என்ற மந்திரத்தைச் செபித்து வழிபடலாம்.

எனவே மணிவாசகர் தான்பெற்ற இறையின்பத்தை மீண்டும் பெற நமச்சிவாய என்ற மந்திரத்தையே துணையாகக் கொள்கின்றார். ஓம் நமச்சிவாய என அழைத்து புயங்கனே பிராரத்த வினையால் அறிவு மயங்கி நிற்பதாகக் கூறுகிறார். ஓம் நமச்சிவாய நான் அடைக்கலமாக நின்னைத்தவிர வேறொன்றையும் நினைக்கவில்லை என்கிறார். அதனால் நீயே என்னைக்காத்தருள வேண்டுமென வழிபடுகிறார். ஓம் நமச்சிவாய என்னைப்புறத்தே போக விட்டுவிடாதே. காத்தருள்வாயாக. நின் புகழ் வெல்க. என்னைக் காத்தருள்க, காத்தருள்க என வேண்டுதல் செய்கிறார். அவர் பாடிய நான்கடிப்பாடலில் நமச்சிவாய என்ற திருநாமத்தை நான்கு முறை பயன்படுத்தியுள்ளார். அத்திரு நாமத்தைச் சொல்லும் போதெல்லாம் இறைவன் திருவுருவைக் காண்கிறார்.

அதேபோன்று போற்றி என்ற சொல்லையும் ஒருபாடலிலே ஆறுமுறை பயன்படுத்தியுள்ளார். போற்றி என்ற சொல் காத்தருள்க எனப்பொருள்படும். தொடர்ந்து போற்றி எனச் சொல்லி வழிபடுவதால் இறைவன் நம்மை நிச் சயமாகக் காத்தருள்வான் என்ற நம்பிக்கையினை எல்லோருக்கும் ஊட்டுகிறார். புயங்கனே மயங்குகிறேன் என்ற தொடர்மூலம் தன்னுடைய உண்மையான நிலையை வெளிப்படுத்தியுள்ளார். புயங்கன்என்பது இறைவன் பாம்பை அணிந்திருப்பதைச் சுட்டுகிறது. மயக்கம் தெளிவில்லாத நிலையாகும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

அந்நிலை ஏற்படும்போது புகலிடமாக அடையவேண்டியது இறைவனுடைய நினைப்பாகும். உலக வாழ்வியலில் மயக்கம் ஏற்படும் வேளையில் இறைவனைப் பற்றி நினைப்பது தெளிவைத்தரும்.

அப்போது நமச்சிவாய எனச் சொல்வதால் மனம் தெளிவுபெறும். இறைவன் திருக்கோலம் அகக்கண்ணில் தெரியும். எம்மைக்காத்தருள இறைவன் எம்மோடு இருக்கிறான் என் நம்பிக்கை தோன்றும். இதனையே பாடல் கூறுகிறது.

*போற்றியோ நமச்சிவாய*
*புயங்கனே மயங்குகின்றேன்*
*போற்றியோ நமச்சிவாய*
*புகலிடம் பிறிதொன்றில்லை*
*போற்றியோ நமச்சிவாய*
*புறமெனைப் போக்கில் கண்டாய்*
*போற்றியோ நமச்சிவாய*
*சயசய போற்றி போற்றி*

# திவிநெகும 3 ஆம் கட்ட வேலைத்திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

திவிநெகும மனைப்பொருளாதார அலகுகளை தயாரிக்கும் தேசிய வேலைத்திட்டம் நேற்றைய தினம் நாடெங்கிலும் ஆரம்பமாகியது.

வடக்கு, கிழக்கு உட்பட முழு நாட்டிலும் நேற்றைய தினம் ஆரம்பமாகி எதிர்வரும்31 ஆம் திகதி வரையும் இத்திட்டம் செயற்படுத்தப்படவிருக்கின்றது. இதற்கு தேவையான சகல ஏற்பாடுகளையும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

திவிநெகும மனைப்பொருளாதாரத்தின் மூன்றாம் கட்டம் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி சுபவேளையில் அங்குரார்ப்பணம் செய்யப்படவிருப்பதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இத்திட்டத்தை விரிவான அடிப்படையில் முன்னெடுப்பதற்காகவே திவிநெகும மனைப்பொருளாதார அலகுகளை தயாரிக்கும் தேசிய வேலைத்திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் அறிவித்தபடி திவிநெகும தேசிய வேலைத் திட்டத்தின் மூலம் மூன்றாம் கட்டம் 25 இலட்சம் குடும்பங்களை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்படவிருப்பதாகவும் அவர் கூறினார்.

இத்திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலிருந்தும் 150 குடும்பங்கள் சேர்த்து கொள்ளப்படவுள்ளன. அதனால் கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அடங்கலான அரசாங்க உத்தியோகத்தர்கள் இன்று முதல் ஒவ்வொரு இல்லத்திற்கும் நேரில் சென்று இல்லத் தலைவர்களுடன் கலந்துரையாடி இந்த அலகுகளை தயாரிப்பார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு குடும்பத்தையும் பொருளாதார ரீதியாக சுய தன்னிறைவு அடையச் செய்யும் நோக்கிலேயே இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. திவிநெகும தேசிய வேலைத் திட்டத்தின் பயனாக இலங்கை அரிசி, உழுந்து, சோளம் உற்பத்திகளில் தன்னிறைவு அடைந்துள்ளது. மரக்கறி வகைகளின் விலைகள் வீழ்ச்சி அடைந்திருப்பதற்கு திவிநெகும மனைப் பொருளாதார வேலைத் திட்டமே அடிப்படை காரணம் என்றும் அவர் மேலும் கூறினார். (அ-2)

## மீளாய்வுச் செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுக்கான துரித கற்றல் செயற்றிட்டம் மீளாய்வு செயலமர்வு எதிர்வரும்10 ஆம் திகதி மாங்குளம் ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்து ள்ளார்.

இச்செயலமர்விற்கு அதிபர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறும் வருகை தரும் போது தங்களுடைய பாடசாலையின் பிள்ளைநேயபாடசாலை தொடர்பான முன்னேற்ற செயற்பாட்டு அறிக்கைகள், இறுவெட்டுக்கள், புகைப்படங்களுடன் சமூகம் தரும்படி அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

## துரிதகற்றல் செயற்றிட்ட கண்காட்சி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிடையேயான துரிதகற்றல் செயற்றிட்டத்தின் கீழ் கண்காட்சி நடைபெறவுள்ளது. இதில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மாணவர்களாலேயே தயாரிக்கும் போட்டி மற்றும் கண்காட்சி என்பன பாடசாலை மட்டம், கோட்டமட்டம், வலய மட்டம் என நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை மட்டத்தில் எதிர்வரும் 10 ஆம் திக்திக்கு முன்னர் கண்காட்சி நடத்தப்படவுள்ளதுடன் ஒவ்வொரு வகுப்பில் இருந்தும் ஒரு ஆக்கம் வீதம் போட்டிக்கு தெரிவு செய்து கோட்மட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். கோட்ட மட்டப் போட்டியானது எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் நடைபெறவுள்ளதுடன் வலயமட்ட போட்டிகள் யாவும் எதிர்வரும் 21 ஆம் திகதி

## புள்ளிவிபர கையேடு தயாரித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நடப்பாண்டுக்குரிய பிரதேச புள்ளி விபரக் கையேடு தயாரிப்பதற்கு அரச,அரசசார்பற்ற திணைக்களங்களிடம் இருந்தும் பொது அமைப்புகளிடம் இருந்தும் அந்நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை கோரியுள்ளதாக பிரதேச செயலர் எஸ்.திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள் ஒட்டுசுட்டான் பிரதேசம் தொடர்பான நடப்பாண்டுக்குரிய பிரதேச புள்ளிவிபரக் கையேடு வெளியீடு செய்ய வுள்ளதால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அரச,அரசசார்பற்ற அமைப்புக்கள், திணைக்களங்கள் தங்களுடைய நிறுவனம் தொடர்பான தகவல்களை நாளை சனிக்கிழமைக்கு முன்பிரதேச செயலர்,பிரதேச செயலகம் ஒட்டுசுட்டான் என்ற முகவரிக்கு அனுப்பி உதவுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-3-15)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் அழுத்தங்களை முறியடிக்க தயார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அரச சார்பற்ற நிறுவனங்களின் அழுத்தங்களை எதிர்நோக்க தயார் என இலங்கை பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் அமர்வுகளில் தமது கருத்துகளை வெளியிட சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்கப்படவுள்ளது.

இலங்கைக்கு எதிராக சில அரச சார்பற்ற நிறுவனங்கள் குற்றச்சாட்டுக்களை சுமத்த முயற்சி எடுத்து வருவதாகவும் இதனை முறியடிக்க அரசாங்க பிரதிநிதிகள் ஆயத்த நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் உரையை தொடர்ந்து பல நாடுகள் இலங்கை தொடர்பில் சாதகமான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

# இடமாற்றம் என அறிவிக்கப்பட்டோருக்கு உடன் இடமாற்றத்தை வழங்குங்கள்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

ஆசிரிய இடமாற்றம் செய்யப்பட்டோருக்கான பெயர் விபரங்கள் வெளியாகியுள்ள நிலையில் குறித்த காலத்திற்குள் இவ் இடமாற்றங்கள் வழங்கப்படல் வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆசிரிய இடமாற்ற சபையினால் வழங்கப்பட்டும் இடமாற்றம் பல தடவைகள் பிற்போடப்பட்டு தற்போது பங்குனி 15 ஆம் திகதி வழங்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

தை மாதம் முதலாம் திகதி வழங்கப்பட வேண்டிய இவ் இடமாற்றங்கள் தற்போது பிற்போடப்பட்டுள்ள நிலையிலும் மீண்டும் பிற்போடப்பட்டால் ஆசிரியர்கள் உள ரீதியாக பாதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் உண்டு.

இடமாற்றத்தின் மூலம் அனைவருக்கும் அனைத்து இடங்களிலும் பணியாற்றும் சந்தர்ப்பத்தினை வழங்க வேண்டும். ஒரு பகுதியினர் மட்டும் கஷ்டப்பகுதிகளில் பணியாற்றுவது நியாயமற்றதாகும்.

இடமாற்றம் தொடர்பில் குளறுபடிகள் ஏதாவது காணப்பட்டால் அல்லது முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றால் அது தொடர்பாக நாம் ஆராயவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-4)

## நோயாளர்கள் சிரமம்

களுபோவில வைத்தியசாலையின் கனிஷ்ட ஊழியர்கள் ஆரம்பித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக சிகிச்சைக்காக வைத்தியசாலையை நாடுகின்ற நோயாளர்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியள்ளதாக தெரிவிக்கின்றனர்.சிகிச்சைக்காக வைத்தியசாலையை நாடி வந்துள்ள தமக்கு காலை முதல் அந்த சேவையை பெற்றுக் கொள்வதில் பிரச்சினை தோன்றியுள்ளதாக நோயாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆயினும் இது தொடர்பாக இவ்வைத்தியசாலைபணிப்பாளர்டாக்டர் அனில்ஜாசிங்க கருத்து தெரிவிக்கையில், சிறு பிரிவினர் சுகவீன விடுமுறையில் கடமைக்கு சமுகமளிக்காத போதிலும் பெரும்பாலானஊழியர்கள்வழமை போன்று கடமையில்ஈடுபட்டுள்ளதாக அவர் கூறினார்.(அ-2)

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை எழுத்துமூலம் பெற இந்தியா முயற்சிக்கிறது

## விக்ரமபாகு தெரிவிப்பு

தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க முன்வரும் போது ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க ஆகியோர் மக்கள் மீது சுமைகள் சுமத்தப்படும் போது ஏகாதிபத்தியத்தை மறுத்து விடுகின்றனர் என இடதுசாரி முன்னணி தெரிவித்தது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான இலங்கையின் எழுத்து மூலமான உறுதிமொழியை பெற்றுக் கொள்ளவே இந்தியா முயற்சிப்பதாகவும் அம் முன்னணி அறிவித்தது.

இடதுசாரி முன்னணியின் தலைவரும் தெஹிவளை, கல்கிஸை மாநகரசபை உறுப்பினருமான கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லிணக்க ஆணைக்குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நியமித்தார். அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் உறுதி மொழிகளும் வழ்ங்கப்பட்டன.

ஆனால் இன்று பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை கைவிட்டுள்ளது. இதனால் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை அமெரிக்கா கொண்டு வரவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தில் இதனை ஆதரிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் இந்தியா மௌனமாக உள்ளது. ஏனென்றால் இம்முறையும் இந்தியா இலங்கையிடம் ஏமாறத் தயாரில்லை. எனவே, பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எழுத்துமூலமான உறுதிமொழியை பெற்றுக் கொள்வதற்கான பலாத்காரத்தை இந்தியா பிரயோகிக்கின்றது. அவ்வாறு இலங்கை உறுதிமொழியை வழங்கா விட்டால் கதை கந்தலாகிவிடும்.

ஏனென்றால் ஜெனீவா மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாமென கூட்டமைப்பினரை இந்தியாவே தடுத்து வைத்துள்ளது. இவ்வாறானதோர் நிலையில் இலங்கை உறுதியை வழங்காவிட்டால் கூட்டமைப்பினரை ஜெனீவா மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இந்தியா பணிப்புரை விடுக்கும்.

இது தான் இந்தியாவின் மௌனத்திற்கு காரணமாகும். அதேவேளை அமெரிக்காவின் பிரேரணையை சீனாவோ ரஷ்யாவோ எதிர்க்காது. ஏனெனில் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்றே இது முன் வைக்கப்படுகின்றது.

தமிழ் மக்களுக்கு உரிமைகள்வழங்கப்பட வேண்டுமென பிரேரணை கொண்டு வருவதற்கு எதிராக ஏகாதிபத்தியவாத எதிர்ப்பையும் ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்ளும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்கவும் விமல் வீரவன்சவும் ஏகாதிபத்தியவாதிகளின் சொல்லை கேட்டு அத்தியாவசிய பொருட்களின்விலைகளை உயர்த்தி மக்களின் வயிற்றில் அரசாங்கம் அடிக்கும் போது மௌனமாக இருக்கின்றார்கள். ஏகாதிபத்திய விரோதம் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளது. இது புது விதமான எதிர்ப்பு என்றார். (அ-2)


## துயர் பகிர்வும் இதய அஞ்சலியும்

### திருமதி பொன்னம்மா இராசதுரை


எமது பாடசாலை ஆசிரியை திருமதி சாரதா ஜெயபாலன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி பொன்னம்மா இராசதுரை அவர்களின் அமரத்துவத்தால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் துயர் பகிர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைக் குடும்பம்
யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்,
கரணவாய் மத்தி, கரவெட்டி.

(C-5943)

# யாழ். இந்து-கொக்குவில் இந்து மோதும் இந்துக்களின் போர் இன்று ஆரம்பம்

இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.இந்துக்கல்லூரி-கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இடையிலான ஐந்தாவது மாபெரும் கிரிக்கெட் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்றும்,நாளையும் நடைபெறவுள்ளது.




இன்று போட்டிகள் காலை 9 மணிக்கு ஆரம்ப வைபவத்துடன் தொடங்கும் இப்போட்டிகள் மாலை 5 மணிவரை நடைபெறும்.

மாபெரும் துடுப் பாட்டப் போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக சீகுள் புற பார்ட்டி டெவலப்பர்ஸ் நிறுவனப் பணிபாளர் ச.கிருபானந்தனும், விசேட விருந்தினராக தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரட்ணமும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

இப்போட்டி இரு அணிகளும் சம பலத்துடன் இருப்பதனால் இப் போட்டி விறுவிறுப்பாக இருக்கும். இதுவரை நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று போட்டியும் சமநிலையில் முடிபடைந்திருந்தது.

கடந்த ஆண்டு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 4ஆவது இந்துக்களின் போரில் கொக்குவில் இந்துக் கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 36 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பாக பி.பங்குஜன் 101 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்து முதலாவது சதத்தினை தொடரிலே பதிவு செய்தார்.


மேலும் கடந்த வருடம் அணித்தலைவர் எஸ்.உத்தமக்குமரன், பங்குஜன் ஆகியோர் நான்காவது விக்கெட்டுக்காக 168 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதே அனைத்து விக்கெட்டுக்குமான அதிகூடிய இணைப்பாட்டமாகும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கிரிக்கெட் அணித் தலைவராக கி.கிருசோபனும், உப அணித்தலைவராக வ.ஜஸ்மினனும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த வருடம் யாழ். இந்துக் கல்லூரி ஏனைய பாடசாலைகளுடன் நடைபெற்ற ஐந்து போட்டிகளில் நான்கு போட்டிகளில் முழுமையான வெற்றிபெற்றுள்ளது.

அதேபோல் கொக்குவில் இந்துக் கல்லூரியும் இவ் வருடம் நடைபெற்ற ஏனைய பாடசாலைகளுடனான ஐந்து போட்டியில் நான்கு போட்டியில் முழுமையான வெற்றியை பெற்றுள்ளது. இம்முறை கொக்குவில் இந்துக் கல்லூரி தனது சொந்த மைதானத்தில் பயிற்றப்பட்ட இடத்தில் விளையாடுவதனால் பலம் நிறைந்த அணியாகவே காணப்ப டுகின்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி கிரிக்கெட் அணித் தலைவராக பி.பங்கு





ஜனும், உப அணித்தலைவராக கே.ராகுலனும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் யாழ். இந்துக் கல்லூரியும் கடந்த வருடம் ஏற்பட்ட தோல்விக்கு பதிலடி கொடுக்க பலம் நிறைந்த அணியாக களம் இறங்குகின்றது.

எனவே இம்முறை இந்துக்களின் ஐந்தாவது போர் விறுவிறுப்பாக இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

# சேவாக் நீக்கப்பட்டது ஏன்? பரபரப்புத் தகவல் வெளியீடு



ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் எதிர்வரும் 11 திகதி முதல் 22 ஆம் திகதி வரை நடக்கிறது. இந்தப் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் மூன்று நாடுகள் பங்கேற்கும் போட்டியில் மோசமாக விளையாடி வந்ததால் ஆரம்ப வீரர் சேவாக் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

ஆனால்தேர்வுக்குழுத்தலைவர்ஸ்ரீகாந்தோ சேவாக் அணியிலிருந்து நீக்கப்படவில்லை ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது என்றார்.

காயம் காரணமாக அவர் அவதிப்படுவதால் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவித்தார். சேவாக்கும் ஓய்வு என்று கூறினாலும் உண்மையிலேயே அவர் நீக்கப்பட்டார் என்பதுதான் உண்மை.

சேவாக் எதற்காக நீக்கப்பட்டார் என்ற புதிய தகவல்கள் தற்போது வெளியாகியிருக்கிறது. மூன்று நாடுகள் போட்டியில் சேவாக், டெண்டுல்கர், காம்பீர் ஆகிய மூன்று பேரை சுழற்சி முறையில் அணித்தலைவர் தோனி தேர்வு செய்தார்.

மந்தமான களத்தடுப்பு காரணமாகவே சுழற்சி முறை பின்பற்றப்பட்டதாக அவர் விளக்கமளித்தார். தோனியின் இந்தக் கருத்துக்கு சேவாக் பதிலடிகொடுத்தார். இதன் மூலம் இந்திய அணியில் பிளவு இருப்பது வெளியே தெரிந்தது.

தோனி-சேவாக் இடையே ஏற்பட்ட மோதலால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அதிர்ச்சியடைந்தது. இந்த மோதல் விவகாரத்துக்கு பிறகு இருவரும் இணைந்து ஊடகங்களுக்கு அறிக்கை கொடுக்கவேண்டும் என்று கிரிக்கெட் வாரியம் வலியுறுத்தியது.

ஆனால் கிரிக்கெட் வாரியத்தின் இந்த உத்தரவை ஏற்க சேவாக் மறுத்துவிட்டார். தோனியுடன் இணைந்து அறிக்கை கொடுக்க இயலாது என்று அவர் கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கூட்டு அறிக்கையை கிரிக்கெட் வாரியமேதயாரித்திருந்தது. இந்த அறிக்கையை தோனி படிப்பார் சேவாக் அருகில் இருக்க வேண்டும். அறிக்கை படித்த பிறகு இருவரும் நிருபர்களிடம் எந்தக்கருத்தும் தெரிவிக்கக் கூடாது என்றும் கிரிக்கெட் வாரியம் வலியுறுத்தியிருந்தது.

ஆனால் சேவாக் கிரிக்கெட் வாரியத்தின் இந்த உத்தரவை ஏற்க மறுத்துவிட்டார். தோனி இதற்கெல்லாம் சரி என்று ஒப்புக் கொண்டார். இதனால் சேவாக் மீது கிரிக்கெட் வாரியம் அதிருப்தி அடைந்தது.

இதன்காரணமாகவே ஆசியக் கோப்பை போட்டியிலிருந்து சேவாக் நீக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது. 3 நாடுகள் போட்டியில் மோசமாக ஆடியது ஒரு பிரச்சினையல்ல அதன் காரணமாக அவர் நீக்கப்படவில்லை. கிரிக்கெட் வாரியத்தின் உத்தரவை மதிக்காததால் நீக்கப்பட்டார் என்று தகவல் அறிந்த கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவித்தன.

# இலங்கையை ஆஸி. வீழ்த்துமா?

# இன்று பரபரப்பான மோதல்

இந்தியா, அவுஸ்திரேலியா, இலங்கை ஆகிய மூன்று நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட்போட்டி அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது. இந்தப்போட்டியில் கடைசி லீக் ஆட்டம் இன்று வெள்ளிக்கிழமை நடக்கிறது.

இதில் அவுஸ்திரேலியா-இலங்கை அணிகள் மோதுகின்றன. அவுஸ்திரேலியா 19 புள்ளிகளைப்பெற்று இறுதிப்போட்டிக்கு ஏற்கெனவே தகுதி பெற்று விட்டது.

இந்தியா, இலங்கை அணிகள் தலா 15 புள்ளிகளுடன் உள்ளன. இன்றைய ஆட்டத்தில் இலங்கை வெற்றிபெற்றால் இறுதிப் போட்டிக்கு நுழையும்.

இந்திய அணி இறுதிப் போட்டிக்குள் தகுதி பெறவேண்டுமானால் அவுஸ்திரேலியா வெற்றிபெறவேண்டும். இதனால் இலங்கை அணியை அவுஸ்திரேலியா வீழ்த்த வேண்டும்.

இன்றைய ஆட்டத்தில் இலங்கை தோற்க வேண்டும் என்பது இந்திய ரசிகர்களின் பிரார்த்தனையாக இருக்கும். இந்தப் போட்டித் தொடரில் இலங்கை அணி அவுஸ்திரேலியாவை இரண்டு முறை வீழ்த்தியுள்ளது. ஒரு முறைதான் தோற்றது.

இதனால் இலங்கை அணியை தோற்கடிப்பது அவுஸ்திரேலியாவுக்கு மிகுந்த சவாலானது. இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 320 ஓட்டங்களைக் குவித்தும் தோற்றதால் இலங்கை அணி அதிர்ச்சியடைந்துள்ளது.

எனவே இலங்கை அணி அவுஸ்திரேலியாவை வெல்லும் வகையில் சிறப்பாக விளையாடும். அந்த அணியின் துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ஜெயவர்த்தன, டில்சான், சங்கக்கார, சண்டிமால் ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர்.

இலங்கையிடம் இரண்டு முறை தோற்றதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அவுஸ்திரேலியா விளையாடும். உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் அந்த அணி வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த போட்டியில் விளையாடாத அணித் தலைவர் கிளார்க் இன்றைய ஆட்டத்தில் விளையாடுவது சந்தேகமே. துடுப்பாட்டத்தில் வோர்னர், பீற்றர் பாரஸ்ட், ஹஸி சகோதரர்கள், மேத்யூ வாடே ஆகியோரும் பந்துவீச்சில் பிரட் லீ, மெக்காய் ஆகியோரும் நல்ல நிலையில் உள்ளனர்.


பயிற்சியில் ஈடுபடும் அவுஸ்திரேலிய வீரர்கள்...

பேட்டின்சன் அணிக்கு திரும்பியுள்ளார். ஹாரிசுக்கு பதிலாக அவர் சேர்க்கப்பட்டுள்ளார். இரு அணிகளும் இன்று மோதுவது 81 ஆவது ஒருநாள் போட்டியாகும். இதுவரை நடந்த 80 போட்டிகள் அவுஸ்திரேலியா 51 ஆட்டத்திலும் இலங்கை 26 ஆட்டத்திலும் வெற்றி பெற்றுள்ளன. 3 போட்டியில் முடிவு இல்லை.

இன்றைய ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 8.50 மணிக்கு தொடங்குகிறது.

**இந்திய அணி பயிற்சியை தொடங்கவில்லையாம்!**

நடைபெறவுள்ள கடைசி மற்றும் மிக முக்கியமான போட்டியான இலங்கை-அவுஸ்திரேலிய அணிக்கு இடையிலான போட்டியின் முடிபு எவ்வாறு செல்கிறது என்பதை பார்த்துவிட்டு அதற்கேற்ற வகையில் இறுதிப் போட்டிக்கு பயிற்சியை மேற்கொள்ள இந்திய அணி திட்டமிட்டுள்ளது.

# உறுப்பு நாடுகளிடம் ஆதரவு...

செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றிருந்தது.

பொறுப்புக் கூறுவதும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை இனங்காணலும், கடந்த கால துயரங்கள் மீண்டும் ஏற்படாத வண்ணம் இருப்பதற்கான சிறந்த வழியென நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

அரசாங்கத்தின் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் காணப்பட்ட குறைபாடுகளை நாம் சர்வதேச சமுதாயத்திற்கு எடுத்துக் கூறினோம்.

இருப்பினும் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளில் நல்ல அம்சங்கள் சிலவற்றையும் இனங்கண்டோம்.

வடக்கு கிழக்கு பகுதியிலிருந்து படைத் தரப்பினரை துரிதமாக அகற்றுவது, துணை ஆயுதக் குழுக்களின் மனித உரிமை மீறல்களை விசாரணை செய்தல், இனங்களுக்கு இடையில் அதிகாரத்தைப் பகிர்வதற்கான நாடாளுமன்ற சட்டங்களை இயற்றுதல் போன்ற நல்லிணக்க ஆணைக்குழுவின் சாதகமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு தனது இடைக் கால அறிக்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடுமாறு பரிந்துரைத்திருந்ததுடன், துணை ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைய வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தது.

ஆயினும் இவ்விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் இது தொடர்பில் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் மோசமாகவே உள்ளன. மனித வாழ்வின் சகல அம்சங்களிலும் படைத்தரப்பினரின் தலையீடுகள் இடம்பெற்று வருகின்றது.

குடியியல் நிர்வாகம் செயற்படுவதற்கு இலங்கைப் படைத்தரப்பினர் தடையாக உள்ளனர். அரச, தனியார் நிலங்களை இலங்கை அரசாங்கம் கையகப்படுத்தி வருகின்றது.

போரின்போது இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற வேண்டிய இடங்களில் படைத்தரப்பினர் தமக்கான குடியிருப்புக்களை அமைத்து வருகின்றனர்.

இராணுவமயப்படுத்தலினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டவர்களாக பெண்கள், குழந்தைகள் உள்ளனர். படைத்தரப்பினரால் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். துணை ஆயுதக் குழுவினர் பலாத்காரம், மனிதக் கடத்தல் மற்றும் விபச்சாரம் போன்ற நடவடிக்கைகளில் படைத்தரப்பினருடன் இணைந்து இயங்கி வருகின்றனர்.

அரசாங்கம் ஜனநாயகம் ரீதியாக தமிழ் மக்கள் வெளிப்படுத்திய கருத்துக்களை தொடர்ச்சியாக புறக்கணித்து வருகின்றது. வடக்குக் கிழக்கின் இனக் கட்டமைப்பை திட்டமிட்டு மாற்றும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

அரசாங்க சேவையில் தமிழர்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகின்றனர். போரின்போது பல இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இவ் இடங்களில் பௌத்த விகாரைகள் அமைப்பதில் அரசாங்கம் தீவிரமாகவுள்ளது.

இத்தகைய தமிழ் மக்களுக்கு பாதகமான நடவடிக்கைகளை நீக்கும் வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவது அவசியம்.

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தைகளில் இருந்து அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக விலகியுள்ளது.

பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கையினுள் நியாயமான நடைமுறைச் சாத்தியமான நிலைத்திருக்கக் கூடிய அரசியல் தீர்வொன்றை உருவாக்க வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பிலான உண்மைகள் கண்டறியப்பட்டு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியும் பரிகாரமும் வழங்கப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத் தொடரில் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விடயங்கள் தொடர்பில் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்படவுள்ளது.

இத் தீர்மானம் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடியது.

இதன்மூலம் தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகள் நிறைவேற்றப்படும் என்று நம்புகிறோம் என இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# மார்ச் 5...

பல்லாயிரம் இலங்கைத் தமிழர்கள் கொல்லப்பட்டதும், கைது செய்யப்பட்டவர்கள் இதுவரை விடுதலை செய்யப்படாததும், பலத்த காய முற்றவர்களுக்கு சிகிச்சை மறுக்கப்பட்டதும் உள்ளிட்ட மனித உரிமை மீறல் தொடர்பான குற்றங்கள் மீது யுத்தம் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் இலங்கை அரசு எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

இது தொடர்பாக மத்திய அரசும் இலங்கை அரசை நிர்ப்பந்திக்கவில்லை. மார்க்ஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு இதனை வன்மையாக கண்டிக்கிறது.

எனவே, இலங்கையில் ஆயுத மோதலின் இறுதிக் கட்டத்தில் நடந்த மனித உரிமை மீறல் மீது நம்பகத்தன்மை வாய்ந்த, சர்வதேச தரத்திலான, சுயேச்சையான விசாரணை காலதாமதமின்றி நடத்தப்படவும், போர்க் குற்றங்கள் நிகழ்த்திய போர்க் குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படவும் இலங்கை அரசை, இந்திய அரசு நிர்ப்பந்திக்க கட்சியின் மாநில செயற்குழு வலியுறுத்துகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# பொறுப்புக்...

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையுடன் இலங்கை அரசாங்கம் இணக்கமாகச் செயற்பட வேண்டும் என அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறவேணடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்விவகாரம் தொடர்பில் அவர் தனதுரையில் தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் நிகழ்ச்சி நிரலில் போர் மீறல்களுக்கு பொறுப்புக் கூறுதல் உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும்.

போர் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்குதல் என்பது இன்னும் இடம்பெறவில்லை.

இதற்கு பதிலளிக்கப்படாது போனால்; இவ்விடயம் தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்லப்படும்.

எந்த நாடும் இதனை ஏற்கமுடியாது. இலங்கையின் விவகாரத்தில் இது உண்மை.

இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பொறுப்புக் கூறுதல் மிகவும் முக்கியமான பங்கு வகிக்கின்றது.

இந்நிலையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தவும், நிபுணர்கள் குழுவின் அறிக்கையுடன் இணக்கமாகச் செயற்படவும் ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நாம் நம்புகின்றோம் என டென்மார்க் வெளிவிவகார அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறுதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள ஆணைக்குழுவில் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவது என ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரத் திணைக்களம் கடந்த 27 ஆம் திகதி தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# யாழ்.போக்கு...

யாழ்.போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார், தமிழ் மக்கள் என்றவுடன் தண்டம் விதிப்பதில் மிகவும் இறுக்கமாக இருப்பது வேதனை அளிப்பதாகவும் இது தொடர்பில் கதைப்பதற்கு யாருமே இல்லை என்றும் பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகின்றது.

கன்னாதிட்டி சந்திக்கும் வண்ணைச் சிவன் கோவில் சந்திக்கும் இடைப்பட்ட கன்னாதிட்டி வீதி ஒரு வழிப் பாதையென்ற அறிவித்தல் பொது மக்களுக்கு சரியான முறையில் அறிவிக்கப்படவில்லை என்பதை, நேற்றைய தினம் அவ்வீதியால் பயணித்தவர்களுக்கு பொலிஸார் விதித்த தண்டத்தின் எண்ணிக்கை நிரூபிப்பதாய் இருக்கும்.

ஆனாலும் இதுபற்றிய கணிப்பீடுகளை செய்வதற்கு தமிழ் மக்களுக்கு யார் இருக்கிறார்கள் என்றும் பொதுமக்கள் கேள்வி எழுப்பினர்.

ஜெனிவாத் தீர்மானத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னின்று நடத்திய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இ.அங்கஜன் போன்றவர்கள் தமிழ் மக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளையும் கவனிக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கூறியுள்ளனர்.

வட பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் ரி.இந்திரனுக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டதை அடுத்து புதிய பிரதி பொலிஸ்மா அதிபர் பதவியேற்பதற்கு முன்னதாக, மிகப் பெரிய தொகையை தமிழ் மக்களிடம் இருந்து தண்டப் பணமாக அறவிடும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது போன்ற நிலைமை உருவாகியிருப்பது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தற்போது நியமனம் வழங்கப்பட்ட தமிழ்ப் பொலிஸாரை சிங்களப் பொலிஸார் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை எனவும், அவர்களை 'தொழில் வெறுப்புக்கு' உட்படுத்துவதில் சிங்களப் பொலிஸ்ார் தீவிரம் காட்டி வருவதான தகவல்களும் நிலைமையை மோசமடையச் செய்வதாக உள்ளதென அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (எ-1)

# பெருமளவு ஆயுத...

வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

கிளைமோர் - 14, கிரனைட் - 6, விடுதலைப் புலிகள் தயாரித்த மிதிவெடிகள் -13, ஹெட்டனேட்டர் -5, ஆர்.பி.ஜி. குண்டு -8, ரவைகள் - 750, பராலைட் - 81, ஆட்லெறிக் குண்டு - 120 மி.மீ. -10 ஆகிய வெடி பொருட்களே வவுனியா விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக முல்லைத் தீவு பிரதேசத்தில் விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்ட பெருமளவிலான வெடிபொருட்களை படையினர் மீட்டு வருவதோடு, அப் பகுதியில் மேலும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின் றமையும் குறிப்பிடத்தக்கது. (எ-11)

# சனல் 4...

அவுஸ்திரேலிய துறை சார் நிபுணர்கள் அந்த வீடியோக்களை ஆராய்ந்து அவை புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி போலியாகத் தயாரிக்கப்பட்டவை என்பதை உலகறியச் செய்தனர்.

இதன்மூலம் சனல் 4 நிறுவனத்தின் நம்பகத் தன்மை கேள்விக்குறியா கிவிட்டது.

எனவே அவர்கள் இலங்கைக்கு எதிராக எத்தனை வீடியோக்களை வெளியிட்டாலும் அது தொடர்பில் இலங்கை கவனத்தில் எடுக் காது என்றும் அமைச்சர் கூறினார். (எ-11)


அறை வாடகைக்கு

Chundikuli பாடசாலைக்கு அருகாமையில் பாதுகாப்பான சூழலில் அறை, சமையல் செய்யும் வசதியுடன் உண்டு.

Ladies only வேலை பார்க்கும் girls விரும்பத்தக்கது.

Tel. No. 075 0828308 (C-5940)

2013/14 A/L ICT, GIT | 2012/13 O/L ICT

Free 5 Courses Fee — Dip in Accounting, Dip in Web Design, DTP, Dip in Business English, Dip in Ms Office

MCS Supported By UNDP/JRRP

பதிவுகளுக்கு 2.Mar.2012 க்கு முன் நேரில்

SMS your name & course to 772 395 895 & Get Schol.

324, Palaly Road, Parameswara Junction

Qualified Lectures panel, Passing Guarantee, 12 Years Experience

ஆங்கிலம் SPOKEN ENGLISH

இலவச பயிற்சிப்பட்டறை FREE WORKSHOP

பயிற்சிக்கான அனுமதி, பயிற்சி புத்தகம், CD, மற்றும் சான்றிதழ் இலவசம்

182, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தில்

ஒரு மணிநேரத்தில் முழுமையான ஆங்கிலம்

பிரிவு 1 : காலை 8.00 – 9.00 பிரிவு 2 : காலை 10.00 – 11.00

பிரிவு 3 : மாலை 1.00 – 2.00 பிரிவு 4 : மாலை 3.00 – 4.00

03.03.2012 சனிக்கிழமை

பாடசாலை மாணவர் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்

MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456 222 9505

கிளைகள் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நெல்லியடி, சங்கானை, மற்றும் அச்சுவேலி

கொக்குவில் இந்துக் கல்லூரி - யாழ். இந்துக் கல்லூரி அணிகள் மோதும்

இந்துக்களின் போர்

Battle of the Hindus

இன்றும் நாளையும்

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில்


இப்பத்திரிகை வலம்புரி [illegible] இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.